பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 15 சனிக்கிழமை 01.04.2023 கதிர் 143

# மீரிஹானவில் போராட்டம் நடத்த முயன்ற அரகலயவினர் உட்பட மூவர் திடீர் கைது

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவுக்கு எதிரான போராட்டம் தொடங்கிய ஒரு வருடப் பூர்த்தி நாளில் மிரிஹானவில் நடத்தப்பட்ட போராட்டத்தில் அரகலய செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட சிவில் செயற்பாட்டாளர்கள் மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மிரிஹான ஜூபிலிகணுவ-விற்கு அருகாமையில் வெள்ளிக்கிழமை மாலை ஒன்றுகூடிய அரகல செயற்பாட்டாளர்கள் உள்ளிட்டவர்கள்போராட்டமொன்றை நடத்துவதற்கு தயாராகினர்.

உடனடியாக அங்கு குவிக்கப்பட்ட பொலிஸார் அவர்களை கலைந்து செல்லுமாறு பணித்தனர். அத்துடன், போராட்டத்தை முன்னெடுக்கத் தயாரானவர்களுடன் வாய்த்தர்க்கத்திலும் ஈடுபட்டனர்..

பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்க வேண்டாம் என்று கூறிய பொலிஸார் , போராட முற்பட்டவர்களை அவ்விடத்திலிருந்து வெளியேற்ற முற்பட்டனர். இதனால் தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

இந்த நிலையில் அரகல செயற்பட்டாளர்களானஅனுருத்த பண்டார , டானிஷ் அலி உள்ளிட்டமூவர்பொலிஸாரால்கைது செய்யகப்பட்டனர். அதனையடுத்து அங்கிருந்து ஏனையவர்களையும் பொலிஸார் அகற்றினார்கள்.

பொலிஸார் தம்மைத் தாக்கினார்கள் என்றும் மேலாடைகளைக் கிழித்தனர் எனவும் போராட்டத்தில்பங்கேற்கஅங்கு திரண்டவர்கள்தெரிவவித்தனர்.

பொதுமக்களுக்கு இடையூறு விளைப்பதற்கு ☞ 2

## இது ரகசியம் அல்ல!

கொழும்பில் தற்போதைய நிலையில் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களையோ தொழிற்சங்க நடவடிக்கைகளையோ அடியோடு அடக்கி ஒடுக்குவது என்பதில் ரணில் மிகத் திட்டவட்டமாக இருக்கிறார் என்கிறார்கள் பத்திரிகையாளர் நண்பர்கள். ஒரு காலத்தில் ரணிலை மக்களாட்சிக் காவலராகப் பார்த்த அவர்களில் பலருக்கு இந்த மடை மாற்றம் விளங்கிக்கொள்ள முடியாததாக, ஏற்றுக்கொள்ள முடியாததாக இருக்கின்றது.

இதுவரையில் இருந்த அரசுத் தலைவர்களிலும் ரணில் நிறைவேற்று அதிகாரத்தை இன்னும் கூர்மையாகப் பயன்படுத்துகிறார், இன்னும் பயன்படுத்துவார் என்று எதிர்பார்க்கிறார்கள் அவர்கள். வெறுங் கையாலேயே வாள் வீசக்கூடிய புத்திசாலியின் கையில் கூரிய வாள் கிடைத்ததற்கு ஒப்பானதாக, ஆபத்தானதாக தற்போதைய நிலமை மாறி இருப்பதாக அவர்கள் கருதத் தொடங்கியிருக்கின்றனர்.

அந்த நிலமையை மாற்றுவதற்கான வழிவகையை உடனடியாகத் ☞ 2



## சஜித் அணி எம்.பிக்கள் விரைவில் ஐ.தே.கவுக்கு

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விரைவில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவார்கள். இது தொடர்பில் என்னுடன் பேச்சு நடத்தி வருகின்றனர்.

இவ்வாறு ஐக்கிய தேசியக்கட்சியின்பிரதித்தலைவர் ருவான் விஜயவர்த்தன தெரிவித்தார்.

கட்சி அரசியலுக்காகக் காலையில் ஜனாதிபதி ரணிலை விமர்சிப்போர், மாலையில் எம்முடன் பேச்சு நடத்துகின்றனர். ☞ 2

# பொருளாதாரம் வலுப்படும் சாதக சமிக்ஞை தெரிகிறது

## மத்திய வங்கி, திறைசேரி அறிக்கை

கொழும்பு, ஏப்ரல் 01

இலங்கையின் பொருளாதாரம் வலுப்படுவதற்கான சாதகசமிக்ஞைகள்தெரியத் தொடங்கியுள்ளன என்று மத்திய வங்கி ஆளுநர் மற்றும் திறைசேரிச் செயலாளர் ஆகியோர் கூட்டாகத் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆட்சி செயற்திறன்மிக்க மறுசீரமைப்பீல் கால்பதித்திருக்கிறது, சர்வதேச நாணய நிதியத்தின் நிதியளிப்பினைப் பெற்றுக்கொள்வதற்கு அவசியமான முன்கூட்டிய நடவடிக்கைகள் அனைத்தையும் வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது. அதன்படி நாட்டின் பொருளாதாரம் வலுவடைவதைக் காண்பிக்கின்ற சாதகமான சமிக்ஞைகள் ஏற்கனவே தென்படத் தொடங்கியிருக்கின்றன என்று அவவரர்கள் மேலும் தெரிவித்தனர்.

அதுமாத்திரமன்றி நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கும்அதேவேளை, சர்வதேச நாணய நிதியச் செயற்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவுசெய்யும் நோக்கில் தற்போதைய மறுசீரமைப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து செயற்படுத்தப் போவதாகவும் அவர்கள் அறிவித்துள்ளனர். ☞ 2

## தொழிற்சங்கங்களுக்கு சம்பிக்க எம்.பி. அறிவுரை

வலியை அனுபவித்துக்கொண்டிருக்கும் எமது மக்களுக்கு மேலும் வலியை ஏற்படுத்தும் வகையில் தொழிற்சங்கச் செயற்பாடுகள் அமையக் கூடாது என்று 43ஆவது படையணி கோரிக்கை விடுத்துள்ளது.

அப்படையணியின்தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க வெள்ளிக்கிழமை செய்தியாளர் சந்ததிப்பில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது நாட்டில் தாசப்தங்களுக்குத் தொடர்ந்து ஆட்சி செய்வார்கள் என்று கூறப்பட்டு பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியில் அமர்ந்தவர்களைப் பொதுமக்கள் விரட்டியடித்தனர். ஆகவே அந்த மக்கள் நினைத்தால் தமக்கு நெருக்கடி ஏற்படுத்துகின்ற தொழிற்சங்கங்களையும் விரட்டியடித்து விடுவார்கள்.

சர்வதேசநாணயநிதியம்தனது நீடிக்கப்பட்ட கடன் எல்லையை அதிகரித்துள்ளது என்பதற்காக பொருட்களின் விலைகள் குறைக்கப்படவில்லை, தமக்கான வரப்பிரசாதங்கள் கிடைக்கவில்லை என்று கூறி தமது சேவைகளை தொழிற்சங்கங்கள் நிறுத்தமுடியாது.

அனைத்து விடயங்களும் ஏதேவொரு நிபந்தனையின் கீழ் முன்னெடுக்கப்படுகின்றவையாகும். அந்த வகையில் உரிய கலந்துரையாடல்கள் ஊடாக அவற்றை முடி வுக்கு கொண்டுவர வேண்டும் என்று நாம் கருதுகின்றோம் - என்றார்.

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்க ஐ.நா. வலியுறுத்தல்

நடைமுறையில் உள்ள பயங்கரவாத்தடைச்சட்டத்தை நீக்குமாறு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் குழு இலங்கை ஆட்சியாளர்களிடம்கோரிக்கைவிடுத்துள்ளது.

அத்துடன் நீக்கப்படும் பங்கரவாத தடைச்சட்டத்திற்குப் பதிலாக பயங்கரவாதம் தொடர்பான குறுகிய வரையறைகளை உள்ளடக்கிய சட்டத்தினை உருவாக்குமாறும் அந்தச் சட்டமானது சிவில், அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கைகளுக்கு அமைவாக இருக்க வேண்டுமென்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச மாநாட்டின்போது இலங்கையின் ஆறாவது அறிக்கையை மீளாய்வு செய்து வெளியிடப்பட்டுள்ள ஐக்கிய நாடுகள் ☞ 2

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் 3ஆம் வாரம் நாடாளுமன்றம் வரும்

## பிரதமர் டினேஸ் குணவர்த்தன அறிவிப்பு



இந்த மாதத்தின் மூன்றாம் வாரத்தில் நாடாளுமன்ற அமர்வில் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் சபையில் சமர்ப்பிக்கப்படும் என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்

கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்குச்சென்றிருந்ததினேஷ் குணவர்த்தனவழிபாடுகளில் ஈடுபட்டார். அதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது தயாரிக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் பல்வேறு ☞ 2

## பெற்றோலியக் கூட்டுத்தாபன தொழிற்சங்கவாதிகள் மீது சி.ஐ.டி. விசாரணை கேட்கிறார் அமைச்சர்

பெற்றோலியக் கூட்டுத்தாபன முனையத்தில் எரிபொருள் விநியோகிக்கும் செயற்பாடுகளுக்குஇடையூறு விளைவித்தவர்களுக்கு எதிராக குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் (சிஐடி) மூலம் விசாரணை நடத்துமாறு அமைச்சர் கஞ்சன விஜேசேகர பொலிஸ்மா அதிபரி டம் கோரிக்கை விடுத்துள்ளார். கூட்டுத்தாபன தொழிற்சங்கவாதிளுக்கு எதிராகவே அமைச்சர் இந்த நடவடிக்கையை எடுக்கக் கோரியுள்ளார்.

இது குறித்து அவர் பொலிஸ் மா ☞ 2

## வெடுக்குநாறி வழக்கு மீண்டும் ஒத்திவைப்பு

வவுனியாவெடுக்குநாறி மலை ஆதி லிங்க ஆலய விக்கிரகம் உடைப்பு தொடர்பான வழக்கு விசாரணை அடுத்ததவணைக்காகஏப்ரல் 10 திகதியிடப்பட்டது.

வவுனியா, ஒலுமடு, வெடுக்குநாறி மலை ஆதி லிங்க ஆலய விக்கிரகங்கள் உடைக்கப்பட்டமை தொடர்பாக ஆலய நிர்வாகத்தினரால் பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப் படையிலான வழக்கு விசாரணைகள் வவுனியா நீதவான் நீதிமன்றத்தால் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இந்த தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்த, ஆலய நிர்வாகத்தினரின் தொலைபேசி அழைப்புக்களைபெறகடந்தசெவ்வாய்க்கிழமை(28.03)வவுனியாநீதிவான்நீதிமன்றில்பொலிஸார் அனுமதி கோரியிருந்தனர்.

மன்றில் இருந்த சட்டத்தரணிகள் பொலிஸாரின் கோரிக்கைக்கு ஆட்சேபனை தெரிவித்ததுடன், குறித்த விக்கிரகங்களை உடைத்தமை தொடர்பில் வவுனியா சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் விசாரணைகளை ☞ 2

## பயங்கரவாதம் குறித்த சட்டம் எப்படி வந்தாலும் எதிர்ப்போம்

### மாவை சேனாதிராசா அறிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

பயங்கரவாத தடைச் சட்டம்என்பதுமிகவும்கொடிய ஆபத்தான சட்டம், அந்தச் சட்டத்தை திருத்தியோ மாற்றியோ எப்படிக் கொண்டு வந்தாலும் அதனை எதிர்ப்போம் எனத் தெரிவித்தார் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா. பயங்கரவாத தடைச் சட்டமே இல்லாதொழிக்கப்பட்டு நீக்கப்பட வேண்டுமென்றும் வலியுறுத்தினார்.

பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பில் யாழ்ப்பாணத்தில் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம்அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

பயங்கவாதத் தடை சட்டமானது நாடாளுமன்றம் ஊடாக இந்த நாட்டிலே கொண்டுவரப்பட்டுதற்போதும் நடைமுறையில் இருக்கிறது. அந்தச்சட்டம்எம்மைப்பொறுத்தவரையில் மிகவும் கொடிய ஆபத்தானது. ☞ 2

## மின் கட்டணத்தை 20 % குறைக்கவேண்டும்

### பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தலைவர் வலியுறுத்து

மின்கட்டணத்தை 20 சதவீதத்தினால் குறைப்பதற்குரிய திட்டத்தினை முன்வைக்குமாறு இலங்கை மின்சாரசபையிடம்இலங்கை பொதுப்பயன்பாட்டுஆணைக் குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க வலியுறுத்தியுள்ளார்.

தற்போது எரிபொருட்களின் விலைகள் குறைவடைந்துள்ள நிலையில் அவர் இந்தக் கட்டணக்குறைப்பை மேற்கொள்ளுமாறு தெரிவித்தார். .

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மின்கட்டண அதிகரிப்புக்கு எதிராக உயர் நீதிமன் றில் வழக்கு தாக்கல் செய் துள்ளேன். நீதிமன்றம் சிறந்தஒருதீர்மானத்தைஅறிவிக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களைப்பின்பற்றாமல் இலங்கை மின்சார சபை செயற்படுவது முறையற்றது. இலங்கை ☞ 2

## தீர்க்கமான கலந்துரையாடல் நடத்தி திங்களன்று போராட்டம் பற்றி முடிவு

### ஒன்றிணைந்த தொழிற்சங்கள் அறிவிப்பு

எதிர்வரும் திங்க ளன்று தீர்க்கமான கலந்துரையாடல் நடத்தப்பட்டு தொடர் தொழிற்சங்க நடவடிக்கை பற்றிய உரிய அறிவிப்பு விடுக்கப்படும் என்று ஒன்றிணைந்த தொழிற் சங்கங்கள் அறிவித்துள்ளன.

இதுதொடர்பில், பல் கலைக்கழக விரிவுரையாளர்களின் தொழிற்சங்க சம்மேளனத்தின் ஊடகப்பேச்சாளர் மூத்த விரிவுரையாளர் சாருதத்த இலங்கசிங்க தெரிவித்ததாவது:

ஜனாதிபதியுடன் பேச்சு நடத்த எம்மை அழைப்பதாக எமக்கு அறிவிக்கப்பட்டது. ஆனால் இதுவரையில் அதற்கான அழைப்பு விடுக்கப்படவில்லை.

இந்த நிலையில் இந்த ஆட்சியின்வரிக்கொள்கைக்கு எதிரான போராட்டத்தினை நாம்கைவிடப்போவதில்லை. அது தொடர்பில் உரிய தீர்வு கிடைக்கும்வரை நாம் தொடர்ச்சியாகப் போராடுவோம்.

அந்த வகையில் ☞ 2

# இலங்கையில் சைவத்தைப் பாதுகாக்க இந்திய பிரதமர் மோடி உதவவேண்டும்

## இந்து அமைப்புக்கள் கூட்டாக வலியுறுத்து

(எஸ்.நிதர்ஷன்)

சைவ சமயத்தையும் சைவர்களையும் பாதுகாக்க இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உதவ வேண்டுமென யாழ்ப்பாணத்தில் வெள்ளிக்கிழமை கூடிய சைவ அமைப்புக்கள் வலியுறுத்தின.

சைவ சமயமும் சைவ மக்களும் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பாதிப்புக்கள் தொடர்பில் ஆராயும் விசேட கலந்துரையாடலொன்று நல்லை ஆதீனத்தில் இன்று மாலை நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் செய்தியாளர்களிடம் கலாநிதி ஆறுதிருமுருகன் தெரிவித்ததாவது:

சைவ சமயத்திற்கும் சைவ மக்களுக்கும் எதிராக பல்வேறு நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின் றமை எமக்கு மிகுந்த மனவேதனையை ஏற்படுத்துகிறது.

இது குறித்து ஆராயும் வகையில்வடகிழக்கில்உள்ள சமயத் தலைவர்கள், கல்விமான்கள், சமய அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பல தரப்பினரையும் உள்ளடக்கி இன்று கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. அதில் பல தீர்மானங்களை எடுத்திருக்கின்றோம்.

பல்வேறு இடையூறுகள் மத ரீதியாகத் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றதையும் பல இடங்களிலும் பல் வேறுசந்தர்ப்பங்களில்சைவக் கோவில்கள் அழிக்கப்பட்டு வருகின்றதையும் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அதேபோன்று தற்போது சைவசமயத்தவர்கள்வாழ்ந்து வருகின்ற ☞ 2

## ஹிட்லரின் காலத்தைவிட மோசமான நிலை ஏற்படும்

### பயங்கரவாதத் தடைச் சட்டம் குறித்து ஹிருணிகா ஊடகங்களுக்கு எச்சரிக்கை



உத்தேச புதிய பயங்கரவாத தடைச்சட்டம் அமுலாக்கப்பட்டால் ஹிட்லரின் அடக்குமுறையை விடவும் மோசமான நிலைமையே ஏற்படும் என்று ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்தார்

ஐக்கிய மக்கள் சக்தியின் அகில இலங்கை தனியார்துறை ஊழியர்கள் சங் கத்தின் தலைமைப் பதவியை உத்தியோக பூர்வமாக வெள்ளிக்கிழமை ஏற்றுக்கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு ☞ 2

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தேடிக்கொள்ள முடியும் என்கிறநம்பிக்கைஅவர்களில் பலருக்கும் இல்லை. குறிப்பாக, கோட்டாவை விரட்டியது போன்றதொரு போராட்டம் அல்ல கடைசியாக ஜேவிபி போன்றதொரு போராட்டத்தைக்கூட நடத்த முடியாத இரும்புப்பிடியை விரைவில் ரணில் உருவாக்கிவிடுவார் என்றும் அதன்பின்னர்யாரும்அவரை அசைக்க முடியாது என்றும் அவர்களில் பலரும் திடமாக நம்புகின்றனர்.

அவர்களுக்கெல்லாம் என்னுடைய பதில் ஒன்றாகத்தான் இருந்தது. தமிழர்களுக்கு எதிரான போரில்ராஜபக்சக்கள்வெற்றி பெற்றபோது,அவர்களைஇனி வரும் பல தசாப்தங்களுக்கு யாராலுமே அசைக்க முடியாது என்கிற எண்ணம்தான் இருந்தது. அதற்கேற்ற வகையில் அவர்களை நவீன துட்டகாமினிகளாக வரலாற்றுப் பதிவுகள்கூடச் செய்யப்பட்டன. நாமல் அல்ல நாமலின் பேரப்பிள்ளை வரைக்கும்கூட அசைக்க முடியாத ஒரு அரசாட்சியை ராஜபக்ச குடும்பம் கட்டமைக்கும்என்றுஎதிர்பார்த்தவர்கள் பலர்.

ஆனால் கடைசியில் நடந்தது என்ன? போர்க்கதா நாயகன் அரசுத் தலைவர் மாளிகையிலிருந்து தப்பியோடித் தலைமறைவாக வாழவேண்டிய நிலைமைஏற்பட்டது. அதுவும் இத்தனை விரைவில் அந்த வீழ்ச்சி ஏற்பட்டது. இன்று தாங்கள் சிரமப்பட்டுப் பெற்ற வெற்றியை சுளையாகத் தூக்கி இன்னொருவரிடம் கொடுத்துவிட்டு அவரிடம் கேள்வியும்கேட்கமுடியாமல், தங்கள் அரசியலையும் தக்கவைக்க முடியாமல் அல்லாடுகின்றது ராஜபக்ச குடும்பம். இன்று ராஜபக்சக்களின் பேரப்பிள்ளைகள்அரசியலுக்கு வருமா என்பதையல்ல அவரது பேரப்பிள்ளைகளைப் பற்றிக்கூட அக்கறைப்பட யாருமில்லை.

அதுபோன்றேஎந்தவொரு கட்டத்திலும் வீழ்த்தப்பட முடியாத விடுதலை அமைப்பு என்று விடுதலைப் புலிகள் இயக்கமும் நம்பப்பட்டது. ஒருவேளை அதன் மரபார்ந்த படையணிப் பலம் சிதைக்கப்பட்டாலும்கரந்தடிப் படையாக (கொரில்லா போராளிகள்) அந்த இயக்கம் தனது இருப்பைத் தக்கவைக்கும்என்றுதான்உலகின் வல்லுநர்களும் கணித்தார்கள். ஆனால் நடந்ததென்ன? இன்றுஅப்படியொருஇயக்கம் இருந்ததாக இலங்கையில் வரலாற்றைப் பதிவு செய்யக்கூட முடியாத நிலை.

எமது காலத்திலேயே இந்த இரு மிகப் பெரும் உதாரணங்களையும் கண்டிருக் கின்றோம். அது போன்றே ரணிலும் வரலாற்றுத் தவறுகளை இழைப்பாராயின் வரலாற்றால் தூக்கி வீசப்படுவது நிகழ முடியாத ஒன்றல்ல. இப்போது வேண்டுமானால் அது சாத்தியமற்றதொன்றாகத் தெரியலாம். ஆனால், அது நிகழும்போது மிக விரைவாக நிகழ்ந்துவிடும்.

**- இடிமின்னல் -**

## தீர்க்கமான ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எமது போராட்டத்தின் அடுத்த கட்டம் சம்பந்தமாக எதிர்வரும் திங்களன்று கூடி ஆராயவுள்ளோம். இதில் ஒன்றிணைந்த தொழிற்சங்கங்கள்பங்கேற்கவுள்ளன - என்றார்.

## மீரிஹானவில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அனுமதி அளிக்க முடியாது என்பதோடு அலுலகங்கள் மூடப்பட்டு பொதுமக்கள் தமது வீடுகளை நோக்கி வருகின்றபோது வீதி களை தடை செய்ய போராட்டக்காரர்கள் முயன்றனர் என்றும் அதனாலேயே அவர்களைக் கலைந்துபோகுமாறு தெரிவிக்கப்பட்டது என்றும் பொலிஸார்தெரிவித்துள்ளனர்.

மிரிஹானவில் கோட்டாபய ராஜபக்ஷவின் வீட்டின் முன்னால் ஒரு வருடத்திற்கு முன்னர் இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தின் ஒருவருட பூர்த்தியை குறிக்கும் வகையிலேயே வெள்ளிக்கிழமை போராட்டம் நடத்தப்படவிருந்தது.

## பொருளாதாரம்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நீடிக்கப்பட்டகடனுதவிச்செயற் திட்டத்தின் கீழ் எதிர் வரும் 48 மாதகாலத்தில் இலங்கைக்கு சுமார் 3 பில்லியன் டொலர் நிதியை வழங்குவதற்கு சர்வதேசநாணயநிதியத்தின் பணிப்பாளர் சபை மார்ச் 20 ஆம் திகதி அனுமதியளித்தது.

10 நாட்கள் கழித்து, வியாழக்கிழமை (30) இலங்கை நேரப்படி மாலை 6 மணிக்கு மெய்நிகர் முறைமையின் ஊடாக கடன் வழங்குநர்கள் மற்றும் முதலீட்டாளர்களுக்கு இலங்கையின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்துவிளக்கமளிக்கப்பட்டது.

இந்த விளக்கமளிப்பு சந்திப்புக்குத் தலைமைதாங்கிய இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க மற்றும் திறைசேரியின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன ஆகியோர் இணைந்துவெளியிட்ட கூட்டறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தனர். அவ்வறிக்கையில் அவர்கள் மேலும் தெரிவித்திருப்பதாவது:

சர்வதேச நாணய நிதியத்தின் உதவிச்செயற்திட்டமானது கொள்கை அமுலாக்கம் தொடர்பில் தெளிவான வழிகாட்டலை வழங்குகிறது. இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்தி, வளர்ச்சியை மீளுறுதிப்படுத்துவதற்கு அவசியமானஉந்துதலையும் அளிக்கின்றது.

இலங்கையின் பேரண்டப்பொருளாதார நிலைவரம் குறித்து விளக்கமளிப்பதுடன் சர்வதேச நாணய நிதிய உதவிச்செயற்திட்டத்தின் முக்கிய கூறுகள் மற்றும் குறிக்கோள்கள் பற்றியும், கடன்கொடுநர்கள் விவகாரத்தில் முன்னெக்கப்பட வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பிலும் நாம் மெய்நிகர் முறைமையின் ஊடாக முதலீட்டாளர்களுக்குத்தெளிவுபடுத்தினோம்.

இலங்கை ஆட்சி செயற்திறன்மிக்க மறுசீரமைப்புச்செயன்முறையில்கால்பதித்திருப்பதுடன்சர்வதேசநாணய நிதியத்தின் நிதியளிப்பினைப் பெற்றுக்கொள்வதற்கு அவசியமானமுன்கூட்டியநடவடிக்கைகள்அனைத்தையும் வெற்றிகரமாக நிறைவுசெய்துள்ளது.

சர்வதேச நாணய நிதிய உதவிச் செயற்திட்டத்தின் பிரகாரம் வரிசார் மறுசீரமைப்புக்களை மேற்கொள்ளல், பொதுப்படு கடன்களின் நிலையான தன்மையை உறுதிசெய்தல், விலையுறுதிப்பாட்டை மீள நிலைநாட்டல், வெளிநாட்டுக் கையிருப்பை மீளக் கட்டியெழுப்புதல், ஊழல்மோசடிகளின்விளைவாகஏற்படும் பாதிப்புக்களைக் குறைத்தல், நிதியியல் முறைமை உறுதிப்பாட்டைப் பாதுகாத்தல், பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கு அவசியமான மறுசீரமைப்புக்களை மேற்கொள்ளல் போன்றவற்றை முழுமையாக அடைவதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

நாட்டு மக்களே இந்த ஆட்சியின் முன்னுரிமைக்குரிய தரப்பினர் என்பதுடன் சர்வதேச நாணய நிதிய உதவிச் செயற்திட்டத்தின் விளைவாகப் பாதிக்கப்படக்கூடிய சமூகப் பிரிவினரைப் பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதிலும் விசேட அவதானம் செலுத்தியுள்ளோம்.

இவற்றின் விளைவாக ஆண்டுக்கு ஆண்டு பணவீக்கத்தின் வேகம் குறைந்து, சுற்றுலாத்துறை மூலமான வருவாய்கள் நியாயமான மட்டத்துக்குத்திரும்புவதுடன் நாட்டின்பொருளாதாரம் வலுவடைவதைக்காண்பிக்கின்ற நேர்மறையானசமிக்ஞைகள் ஏற்கனவேதென்படத்தொடங்கியிருக்கின்றன.

அதன்படிநாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் அதேவேளை, சர்வதேச நாணய நிதியச் செயற்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவுசெய்யும் நோக்கில் எமது மறுசீரமைப்புநடவடிக்கைகளைத் தொடர்ந்து செயற்படுத்துவோம்.

வரி மறுசீரமைப்புக்களுக்கு மத்தியில், அனைத்தையும்உள்ளடக்கியபடுகடன் செயற்திட்டமொன்று இல்லாவிடின்நாட்டின்படுகடன்கள் உறுதியாகவே காணப்படும். இவ்வாறானதொரு பின்னணியில் திரவத்தன்மையை இலக்காகக்கொண்ட உள்நாட்டுப் படுகடன் செயற்திட்டத்துக்கான தெரிவுகள் தொடர்பில் அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

அதுமாத்திரமன்றி மீள்கொடுப்பனவு இயலளவு மேலும் சிதைவடைவதைத் தவிர்க்கும் நோக்கில் நிதியியல் உறுதிப்பாட்டையும் பேணுகின்றனர். அந்த வகையில் வெளிப்படைத் தன்மையுடனும், நியாயமான விதத்திலும்எமது அனைத்துக் கடன்வழங்குநர்களுடனான இணக்கப்பாட்டினைத் துரிதப்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளோம் - இவ்வாறு அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சஜித் அணி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தாம் இணைவதற்கு இதுவே சிறந்த தருணம் எனவும் கூறுகின்றனர். இதன்படிஅவர்கள் விரைவில் இணைவார்கள் என எதிர்பார்க்கலாம்.

அன்று 'ரணில் - ராஜபக்ச' என விமர்சித்தவர்கள் இன்று 'ரணில் சேர்' என விளிக்கத் தொடங்கியுள்ளனர் - என்றார்.

## பயங்கரவாதத் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மனித உரிமைகள் குழுவின் இறுதிஅறிக்கையிலேயேமேற்கண்ட விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பாரிஸ் கழகத்தின் கோட்பாடுகளுக்கு இணங்கி பணியாற்றுதல், மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கான நியமனங்களை வெளிப்படைத்தன்மையுடன் வழங்குதல், பொறுப்புகளை நேர்த்தியான முறையில் நிறைவேற்றுவதற்குத் தேவையான விடயங்களை மேற்கொள்ளுதல் ஆகியவற்றை இலங்கை ஆட்சியாளர்கள் முன்னெடுக்கவேண்டும்.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கைக்கு அமைய, ஒன்பதாவது சரத்தின் பிரகாரம், பாதுகாப்பை ஆட்சியாளர்கள் உறுதிசெய்ய வேண்டும்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ்தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களின் நிலைமையைப் பரிசோதிப்பதற்காக, அவர்களைத் தடுத்து வைத்துள்ள இடங்களைச் சுயாதீனமாக கண்காணிப்பதற்கான வசதிகள் ஏற்படுத்தப்படவேண்டும் - என்று கோரப்பட்டுள்ளது.

இதேவேளை, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் குழுவானது, தமது புதிய அறிக்கையில் 60 பரிந்துரைகளை இலங்கை ஆட்சியாளர்களுக்கு முன்வைத்துள்ளது. 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் முக்கியத்துவம்அளிக்கப்படவேண்டிய மூன்று விடயங்களை நடைமுறைப்படுத்துமாறும் வலியுறுத்தியுள்ளது.

## பயங்கரவாத ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விமர்சனங்கள் உள்ளன. அது தொடர்பில் பொதுமக்களுடனும், நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் கலந்துரையாடப்படும். அதன் பின்னரேயே குறித்த சட்டமூலம் நிறைவேற்றப்படும்.

இம்மாதம் நான்காம் திகதிக்கான நாடாளுமன்ற ஒழுங்குப்பத்திரத்தில் அது உள்வாங்கப்படவில்லை. ஆகவே ஏப்ரல் மூன்றாம் வாரத்தில் நடைபெறுகின்ற அமர்வில் அச்சட்டமூலத்தினை சமர்ப்பிப்பதற்கே எதிர்பார்கின்றோம். அந்த வாரத்திற்கான ஒழுங்குப்பத்திரத்தில் அதனை உள்ளீர்க்க வேண்டியுள்ளது.

இதேவேளை, குறித்த சட்டமூலம் தொடர்பான கலந்துரையாடலை விடயதானத்திற்குப் பொறுப்பான அமைச்சர்கள் மற்றும் இதர துறையினரையும் அழைத்து கலந்துரையாடுவதற்கு எதிர்பார்கின்றோம் - என்றார்.

## தொழிற்சங்க ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கொலன்னாவையில் உள்ளபெற்றோலியக்கூட்டுத்தாபனமுனையத்தில்உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடு பட்டிருந்த சிலர் எரிபொருள் விநியோகிக்கும் பாதுகாப்பு வலயத்திற்குள் நுழைந்து ஊழியர்களை அச்சுறுத்தியுள்ளனர்.

அத்தியாவசியசேவையாகப்பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பெற்றோலியக் கூட்டுத்தாபன கொலன்னாவை முனையத்தின் செயற்பாடுகளுக்கு கடந்த 28ஆம் திகதி சேதம் விளைவிக்க முயற்சிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு வலயத்திற்குள் நுழைந்தவர்களில் தொழிற்சங்கத்தினர், உள்ளுராட்சி மன்றத் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை செலுத்தி தற்போது விடுமுறையிலுள்ள ஊழியர்கள் மற்றும் ஓய்வு பெற்றஊழியர்களும்அடங்குகின்றனர்.

இவர்களது செயற்பாடுகளால் எரிபொருள் விநியோகத்திற்கு இடையூறு ஏற்பட்டதுடன், எரிபொருள்வரிசைகளும் ஏற்பட்டுள்ளது. இதனால் ஏற்பட்டுள்ளநட்டத்தைகுறித்த நபர்களிடமிருந்தே அறவிடுவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஆகவே அவர்களை அத்தியாவசிய சேவைக்கு இடையூறு அளித்தமை மற்றும் ஏனைய மேலே கூறிய காரணங்களை அடிப்படையாக வைத்துக் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்துமாறு கோருகின்றேன் - என்றுள்ளது.

## பயங்கரவாதம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆகையினால்தான் அந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது முதல் இன்று வரை அதனை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அந்தச்சட்டத்தால்தமிழ்மக்கள்பல்வேறு பாதிப்புக்களை எதிர்நோக்கியிருக்கின்றனர்.

விடுதலைப் போராட்ட தொடக்க காலமம் முதலா இன்றுவரையில் பல ஆயிரக்கணக்கானோர் இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கின்றனர். ஆகையினால் அதன் பாதிப்புக்கள் என்ன என்பது எங்கள் எல்லோருக்கும் தெரியும்.

அதனால்தான் அந்தச் சட்டத்தைநீக்கவேண்டுமென நாங்கள் தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்து வந்திருக்கின்றோம். இவ்வாறான நிலைமையில்தான் அந்தச் சட்டத்திற்குப் பதிலாக புதியதொரு சட்டத்தை கொண்டு வரப் போவதாக இந்த ஆட்சி அறிவித்துள்ளது.

தற்போதுநடைமுறையில் இருக்கின்ற பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படலாம் அல்லது திருத்தியோ அல்லது மாற்றியோ கொண்டு வரப்படலாம்என்றுஆட்சியாளர்கள் கூறினாலும் புதிதாகக் கொண்டு வரப் போவதாக கூறுகின்ற அந்தச் சட்டமும் மிகவும் ஆபத்தானதாகவே இருக்கின்றது.

பயங்கரவாத தடைச் சட்டம் வரைபு வந்தாலும் திருத்தங்கள் வந்தாலும் அதனை நாங்கள் முழுமையாக எதிர்ப்போம். அதை எதிர்க்கும் வகையிலேயே தமிழரசுக் கட்சியினதும் கூட்டமைப்பினதும் செயற்பாடுகள் இருக்கும். பயங்கரவாத தடைச் சட்டம் என்ற சட்டத்தையே நீக்க வேண்டும்என்பதேஎங்களதுகோரிக்கையாகவும் அமையும் - என்றார்.

இலங்கையில் இருக்கும் ஜனநாயக சக்திகள் அனைத்தும் இந்தச் சட்டத்திற்கு எதிராக ஒன்றுபட்டு குரல் கொடுக்கிற நிலைமை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது.

அதேபோன்று தமிழரசுக் கட்சியும் கூட்டமைப்பும் அதனை எதிர்ப்பது மட்டுமல்லாது எதிர்த்து போராடுவோம் என்றும் கூறினார்.

## மின் கட்டண ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொதுப்பயன்பாட்டுஆணைக் குழுமுன்வைத்தபரிந்துரைக்கு அமைய மின்கட்டணம் அதிகரிக்கப்படவில்லை. மின் பாவனையாளர்களினால் ஏற்றுக்கொள்ளகூடிய நியாயமானமுறையில்மின்கட்டணம் அதிகரிக்கப்பட வேண்டும் என மின்பாவனைகள் தொடர்பான சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் சட்டத்திற்கு முரணான வகையில் மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டது.

எரிபொருள் விலைக் குறைப்புக்கு அமைய மின் கட்டணத்தை 20 சதவீதத்தால் குறைக்க முடியும், ஆகவே மின்கட்டணத்தை குறைப்பது தொடர்பான திட்டத்தை முன்வைக்குமாறு மின்சாரசபையிடம்வலியுறுத்தியுள்ளோம். எரிபொருள் விலை குறைப்பின் பயனை மின்கட்டண திருத்தம் ஊடாக மின்பாவனையாளர்களுக்கு வழங்கவேண்டும் - என்றார்.

## வெடுக்குநாறி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மேற்கொண்டு குற்றவாளிகள் கைது செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தினர்.

சட்டத்தரணிகளின் கோரிக்கையை ஏற்ற வவுனியா நீதவான் நீதிமன்ற நீதிபதி சுபாசினி தேவராசா உடனடியாக விக்கிரகங்கள் உடைக்கப்பட்டமைதொடர்பில் வவுனியா மூத்த பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் விசாரணை நடத்தி மார்ச் 30 மன்றில் அறிக்கை சமர்ப்பிக்குமாறும், குற்றவாளிகளை கைது செய்யுமாறும் உத்தரவிட்டிருந்தார்.

இதனடிப்படையில் வெள்ளிக்கிழமைமன்றில்தோன்றிய பொலிசார் குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுவதாகவும், தொடர்ந்தும் விசாரணைகளை

முன்னெடுப்பதற்கும், வெடுக்குநாறிப் பகுதி தொலைபேசி அலைவரிசை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கும் மன்றின் அனுமதியைக் கோரினர். இதனையடுத்து வழக்கு விசாரணை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு வவுனியா நீதிவானால் திகதியிடப்பட்டது.

## ஹிட்லரின் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மேலும்தெரிவித்ததாவது:

நான் தற்போது ஊடகங்களுக்கு கருத்துக்களை வழங்குகின்றேன். எதிர்காலத்தில் உத்தேச பயங்கரவாத தடைச்சட்டம் அமுலாக்கப்பட்டால் அவ்வாறு வழங்க முடியாது. கருத்து வழங்கும் நான் உடன் கைது செய்யப்படலாம். அந்தக் கருத்தினை வெளியிட்டமைக்காக ஊடகங்கள்கூட முடக்கப்படலாம். தொழிற் சங்க நடவடிக்கைள் கட்டுப்படுத்தப்படலாம்.

அரசியல் கட்சிகளின் செயற்பாடுகளைக்கூட முற்றாகத் தடுக்கலாம். நாடாளுமன்றத்தில் எதிர்த்துப் பேசுகின்ற உறுப்பினர்களைக் கூடத் தண்டிக்கலாம். குறிப்பாக, கைது செய்யப்படும் ஒரு நபரை ஒருவருடத்திற்கு அனுமதியின்றிதடுத்துவைத்து விசாரணை நடத்தலாம். இவ்வாறு பல்வேறு ஆபத்துக்கள் அந்தச் சட்டத்தில் நிறைந்திருக்கின்றன.

அவ்விதமானதொரு சட்டத்தினைநடைமுறைப்படுத்துவதற்கு முனைவதானது, ஹிட்லரை விடவும் மோசமான ஆட்சியை முன்னெடுப்பதற்காகவாகும் - என்றார்.

## இலங்கையில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பகுதிகளில்குடியேற்றங்களை ஏற்படுத்தி சைவ சமயத்திற்கு இடையூறுகளை ஏற்படுத்து-வதையும் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

குறிப்பாக வெடுக்குநாறி ஆலயம் அழிக்கப்பட்டது சைவமக்களுக்கு வேதனை. இதன் சூத்திரதாரிகளை இனங்கண்டு உடனடியாக இந்த ஆட்சி நடவடிக்கை எடுக்கவேண்டும். அத்துடன் இத்தகைய செயற்பாடுகள் தொடர இனியும் அனுமதிக்க முடியாது.

சுதந்திரம் அடைந்த முதல் சைவ மக்களுக்கு எதிராகத் தொடர்ந்தும் இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றதையும் வன்மையாகக் கண்டிப்பதுடன் அவை முற்றிலும் நிறுத்தப்பட வேண்டுமென்று கோரிக்கையும் விடுக்கின்றோம்.

போரின் காரணமாக தமிழினம் பெரும்பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்ற

(05ஆம் பக்கம் பார்க்க)


# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 06 பிளைச்சர் ஒழுங்கை 23/6ஆம் ஆதன இலக்கத்தைக்கொண்ட ஆதனம் 'சொந்தக்காரர்' என்ற பெயரில் எமது பதிவேட்டில் காணப்படுகின்றது.

இதன் கீழ் அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனம் சொர்னசிதம்பரம் கைம்பெண் நேசரெத்தினம் 04.03.1970ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ஜோன் பற்றிக் முகதாவில் 3322ம் இலக்கத்தில் நிறைவேற்றிய உறுதி மூலம் அந்தோனிப்பிள்ளை பெண் சிவபாக்கியம் என்பவரிற்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

பின்னர் குறித்த ஆதனத்தை அந்தோனிப்பிள்ளை கைம்பெண் செல்வபாக்கியம் 01.12.2002 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு அ.இராஜரட்ணம் முகதாவில் 875ம் இலக்கத்தில் நிறைவேறிய சீதன உறுதி மூலம் அன்ரன் பாலகுமார் பெண் எட்னா அனுரேகா என்பவருக்கு சீதனமாக ஈகை செய்துள்ளார்.

அன்ரன் பாலகுமாரும் பெண் எட்னா அனுரேகாவும் அற்றோனிக் தத்துவக்காரரான இலக்கம் 16/6 புதிய வீதி மட்டக்களப்பு அரசகோன் சார்ள்ஸ் அரியரட்ணம் மூலம் குறித்த ஆதனத்தை 28.11.2020 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு நா.கோவர்தனன் முகதாவில் 60ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் இராசநாயகம் அன்ரன் ராஜ்குமாரும் பெண் கிறிஸ்ரில்டாவும் நிறைவேற்றியுள்ளனர்.

குறித்த 60ம் இலக்க உறுதியில் திருமதி.ஜடா சசிரேகா சூரியகுமார் கிறிஸ்தோபர் கணவர், றெமீஜஸ் ஜோசெப் சூரியகுமார் கிறிஸ்தோபர் கையொப்பமிடாமையினால் 01.02.2021 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு கோவர்த்தனன் முகதாவில் 71ம் இலக்கத்தில் உறுதிப்படுத்தல் உறுதியினை நிறைவேற்றியுள்ளார்.

பின்னர் குறித்த ஆதனத்தை 1ம் பகுதியராக டேவிட் றொபின்சனும் பெண் பவப்பிரியாவும் 2ஆம் பகுதியராக இராசநாயகம் அன்ரன் ராஜ்குமாரும் பெண் கிறிஸ்ரில்டாவும் 21.02.2021 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு நா.கோவர்த்தனன் முகதாவில் 77 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட பிரிவிடல் உறுதி மூலம் பிரிவிடல் செய்யப்பட்டது.

ஆதன அட்டவணை:-

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி சுண்டுக்குளி கோவிற்பற்று, யாழ்ப்பாணம் பிரதேச செயலகம், யாழ்ப்பாண மாநகரசபை, கிராம அலுவலர் பிரிவு ஈச்சமோட்டை த/66 சுண்டுக்குளி இறை.

'பிரம்படியிற்புலம்வயலும்பிரம்படியில்பள்ளம்வயலும்பிரம்படியில்பள்ளமும்' நிலப்பரப்பு 1 குளி 16.51 ஆனால் இது உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஊ.புஸ்பராஜா அவர்களால் 2002.12.17 ஆம் திகதி 1156 ஆம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட நில அளவைப்படத்தில் துண்டு 1,2 எனச் சுட்டப்பட்ட நிலப்பரப்பு 1 குளி 16.510 ஆனால் இது மீண்டும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் A. அருள்நேசன் அவர்களால் 2020.11.24ம் திகதி 3937யும் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட நில அளவைப்படத்தில் துண்டு 1,2 எனச்சுட்டப்பட்ட நிலப்பரப்பு 1 குளி 16.24 இதில் துண்டு 1 என சுட்டப்பட்ட நிலப்பரப்பு பூச்சியம் குளி பதினேழு தசம் ஒன்று இரண்டும் நில பர 0 குளி 17.12 கிணறும் இதற்கெல்லை.

கிழக்கு - அந்தோனிப்பிள்ளை பெண் ஞானபூரணத்தின் ஆதனம்
வடக்கு - அருள்ராசா பெண் வசந்தகுமாரியின் ஆதனம்
மேற்கு - ஒழுங்கை
தெற்கு - குறித்த படத்தில் துண்டு 2 இதடங்கலும்

தற்போது இராசநாயகம் அன்ரன் ராஜ்குமார் பெண் கிறிஸ்ரில்டா பிரிவிடல் செய்யப்பட்டதின்படி இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு/ முழுவதற்கும் உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது இராசநாயகம் அன்ரன் ராஜ்குமார் பெண் கிறிஸ்ரில்டா என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப் பொறுப்புக்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்**





காலைக்கதிர் Kalaikkathir

# சாரா ஜெஸ்மின் உயிரிழந்தார் எனக் கூறப்பட்டுள்ளமை உண்மைகளை முற்றாக மறைப்பதற்கான சதித் திட்டம்



முஜிபுர் ரஹ்மான் சாடல்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய பிரதான சாட்சியாகக் கருதப்படும் சாரா ஜெஸ்மின் எனப்படும் புலஸ்தினி மகேந்திரன் உயி ரிழந்துவிட்டார் எனக் கூறப்பட்டுள்ளமை உண்மைகளை முற்றாக மறைப்பதற்கான சதித்திட்டமாகும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த சதித்திட்டங்களுக்கு இடமளிக்காமல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேச விசாரணைப் பிரிவின் ஊடாகவேனும் உண்மைகளை வெளிக் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

உயிரிழந்துவிட்டார் எனக் கூறப்படும் சாரா ஜெஸ்மின் எனப்படும் புலஸ்தினி மகேந்திரன் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய பிரதான சாட்சியாவார் என்றும், எனவே அவர் தேடிக் கண்டுபிடிக்கப்பட வேண்டும் என்றும் பரவலாகத் தெரிவிக்கப்பட்டது.

சாரா ஜெஸ்மின் உயிருடன் இருக்கின்றாரா, இல்லையா என்பதைக் கண்டறிவதற்காக 3 மரபணு பரிசோதனைகளை செய்ய வேண்டுமென தீர்மானித்தது யார்? இதற்கு முன்னர் செய்யப்பட்ட இரு மரபணு பரிசோதனைகளும் தவறு எனத் தீர்மானித்தது யார்? நீதிமன்றமா அல்லது பொலிஸ்மா அதிபரா?

இவ்வாறு ஒவ்வொரு விசாரணைக்கும் ஒன்றுக்கும் மேற்பட்ட மரபணு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டால், நீதிமன்றத்தில் இருப்பில் உள்ள அனைத்துக்கும் அவ்வாறே மேற்கொள்ள வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய சூத்திரதாரிகளை இனங்கண்டு, அவர்களுக்கு தண்டனை வழங்கப்படும் என்பதே கோட்டாபய ராஜபக்ஷ வின் பிரதான தேர்தல் பிரசாரமாகக் காணப்பட்டது.

இந்நிலையிலேயே தற்போது பிரதான சாட்சியாகக் கருதப்படும் சாரா ஜெஸ்மின் உயிரிழந்துவிட்டார் எனக் காண்பிக்க முயற்சிக்கின்றனர்.

சாய்ந்தமருது பிரதேசத்தில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தார் எனக் கூறப்படும் சஹ்ரானின் குடும்ப அங்கத்தவர்கள் உட்பட 16 பேரின் பெயர்ப்பட்டியல் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்போது எந்தவொரு சடலமும் அடையாளம் காணப்படாமல் இருக்கவில்லை. 2019 ஏப்ரல் 26 ஆம் திகதி சாய்ந்தமருது குண்டுத்தாக்குதலில் இனங்காணப்படாத சடலங்கள் எவையும் காணப்படவில்லை என்ற வகையிலேயே காரணிகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அவ்வாறிருக்கையில், திடீரென எவ்வாறு சாராவின் சடலம் அங்கு தோன்றியது?

இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட 2 மரபணு பரிசோதனைகளிலும் சாரா அங்கு இருக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. எனினும், மூன்றாவது பரிசோதனையில் அவர் அங்கு இருந்ததார் எனக் கூறப்படுகிறது. அவ்வாறெனில், யாருடைய அழுத்தத்தின் பேரில் மூன்றாவது மரபணு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது?

தாக்குதல்களின் பின்னர் சாராவின் குரலைக் கேட்டதாக சஹ்ரானின் மனைவி சாட்சியமளித்துள்ளார் என ஜனாதிபதி விசாரணைக்குழு தெரிவித்துள்ள நிலையில், தனது மகள் விபத்தொன்றுக்குள்ளானதாக சாராவின் தாயார் தெரிவித்துள்ள நிலையில், சாரா தப்பிச் செல்ல உதவியதாக பொலிஸ் போக்குவரத்து பிரிவின் பொறுப்பதிகாரியொருவர் கடந்த இரு வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது எவ்வாறு திடீரென அவர் இறந்துவிட்டார் எனக் கூற முடியும்?

உண்மைகளை மறைப்பதற்காக ராஜபக்ஷ அரசாங்கம் முன்னெடுத்துள்ள முயற்சியே இதுவாகும். சாரா ஜெஸ்மின் உயிரிழந்தார் எனக் குறிப்பிட்டு இதனை நிறைவு செய்யத் திட்டமிடுகின்றனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவி வகித்தபோது வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும். சர்வதேச விசாரணை பிரிவினரின் ஒத்துழைப்பைப் பெற்று உண்மைகளை வெளிக் கொண்டு வர ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும். - என்றார்.

# போராட்டக்காரர்களுக்கு புனர்வாழ்வளிக்கத் தயார்

## நீதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நாடு என்ற ரீதியில் நிறைவேற்ற வேண்டும். பொருளாதார முன்னேற்றத்துக்கும், மக்களின் இயல்பு வாழ்க்கைக்கும் தடை ஏற்படுத்தும் வகையில் போராட்டங்களில் ஈடுபடுபவர்களுக்குத் தேவையாயின், புனர்வாழ்வளிக்கத் தயாராக உள்ளோம் என நீதி இராஜாங்க அமைச் சர் அனுராத ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவை வருமாறு -

பொருளாதார நெருக்கடிக்கு குறுகிய காலத்தில் தீர்வு காண்போம் என நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றியுள்ளோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தின் கீழ் முழுமையான நம்பிக்கை உள்ளது. நாட்டு மக்களும் தற் போது உண்மையை விளங்கிக் கொண்டுள்ளார்கள்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை விமர்சிக்கும் எதிர்தரப்பினர் பொருளாதார மீட்சிக்கான மாற்றுத்திட்டங்களை முன்வைக்க வேண்டும்.

நாடு என்ற ரீதியில் முன்னேற்றமடைய வேண்டுமாயின், சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும்.

எரிபொருள் கட்டமைப்பின் போட்டித்தன்மை வினைத்திறனான முறையில் மேற்கொள்வதற்காகவே எரிபொருள் விநியோக கட்டமைப்புக்கு வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனால் எவ்வித பாதிப்பும் ஏற்படாது.

குறுகிய அரசியல் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு தொழிற்சங்கத்தினர் முன்னெடுக்கும் போராட்டங்களுக்கு அடிபணியப் போவதில்லை.

நாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் போராட்டக்காரர்களுக்கு புனர் வாழ்வளிப்பதற்கு பின்வாங்கப் போவதில்லை.

ஊழல் ஒழிப்பு சட்ட மூலம் நாடாளுமன்றத்துக்கு வெகுவிரைவில் சமர்ப்பிக்கப்படும். சிறந்த மாற்றத்துக்கான அனைத்து நடவடிக்கைகளையும் சட்டத்தின் ஊடாக முன்னெடுத்துள்ளோம். பொருளாதார முன்னேற்றத்துக்கும், மக்களின் இயல்பு வாழ்க்கைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் போராட்டங்களுக்கு இடமளிக்க முடியாது. - என்றார்.

# போலி ஆவணம் தயாரித்து காணி விற்றவருக்கு சிறை

## 24 வருடத் தண்டனை



போலி ஆவணங்களை தயாரித்து 47 1/2 லட்சம் ரூபாவுக்கு காணி ஒன்றை விற்பனை செய்த நபருக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா 24 வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

பிரதிவாதிக்கு எதி ரான குற்றச்சாட்டுகள் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளன எனத் தீர்மானித்து, சிறைத் தண்டனையுடன் அபராதத்தையும் அறிவித்த நீதிபதி, அபரா தத் தொகையை செலுத்தாவிடின் மேலதிகமாக 6 மாத கடூழியச் சிறைத் தண்டனையும் விதித்தார்.

குற்றச்சாட்டின் பேரில் ரஞ்சன் லியனகே என்பவர் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்ட நிலையிலேயே இந்தத் தண்டனை விதிக்கப்பட்டது.




காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை ஆட்சியாளர்கள் கைவிடவேண்டும்

**இந்த ஆட்சி அறிமுகப்படுத்தியுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு தற்போது அனைத்துத் தரப்புக்களில் இருந்தும் கடுமையான எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பாதிப்பை அண்மைக் காலமாக சிங்களத் தரப்புக்களும் அனுபவித்ததன் விளைவாக, ஆட்சித் தரப்பைத் தவிர்த்து எதிர்த் தரப்பிலுள்ள பெரும்பாலான கட்சிகள் புதிய சட்டத்திற்கான வரைபைக் கடுமையாக எதிர்த்துள்ளன. அதுபோன்றே பொது அமைப்புக்களும் அதனை எதிர்த்துள்ளன.**

**தற்போது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் குழுவும்கூட அத்தகைய ஒரு சட்டத்தை நீக்கும்படியே பரிந்துரைத்துள்ளது. நடைமுறையில் உள்ள பயங்கரவாத் தடைச்சட்டத்தை முழுமையாக நீக்குமாறும் வலியுறுத்தியுள்ளது.**

**நீக்கப்படும் பங்கரவாத தடைச்சட்டத்திற்குப் பதிலாக பயங்கரவாதம் தொடர்பான குறுகிய வரையறைகளை உள்ளடக்கிய சட்டத்தினை உருவாக்குமாறும் அந்தச் சட்டமானது சிவில், அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கைகளுக்கு அமைவாக இருக்க வேண்டுமென்றும் சுட்டிக்காட்டியுள்ளது.**

**பாரிஸ் கழகத்தின் கோட்பாடுகளுக்கு இணங்கி பணியாற்றுதல், மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கான நியமனங்களை வெளிப்படைத்தன்மையுடன் வழங்குதல், பொறுப்புகளை நேர்த்தியான முறையில் நிறைவேற்றுவதற்குத் தேவையான விடயங்களை மேற்கொள்ளுதல் ஆகியவற்றை இலங்கை ஆட்சியாளர்கள் முன்னெடுக்கவேண்டும்.**

**சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கைக்கு அமைய, ஒன்பதாவது சரத்தின் பிரகாரம், பாதுகாப்பை ஆட்சியாளர்கள் உறுதிசெய்யவேண்டும்.**

**பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் நிலமையைப் பரிசோதிப்பதற்காக, அவர்களைத் தடுத்து வைத்துள்ள இடங்களைச் சுயாதீனமாக கண்காணிப்பதற்கான வசதிகள் ஏற்படுத்தப்படவேண்டும் – என்றும் ஐ.நா. மனித உரிமைகள் குழு வலியுறுத்தியுள்ளது.**

**புதிய சட்டத்தை எதிர்த்து நீதிமன்றத்தை நாடப் போவதாக நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்தெரிவித்துள்ளார். இப்படி அனைத்துத் தரப்பினரும் புதிய சட்டத்தைக் கடுமையாக எதிர்த்துள்ளனர்.**

**தற்போதைய அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுமேகூட பயங்கரவாதத் தடைச் சட்டம் தற்போதைய வடிவத்திலிருந்து மாற்றப்படவேண்டும் என்பதை 2015 முதலான தனது ஆட்சிக் காலத்தில் ஏற்றுக்கொண்டிருந்தார் அதற்கான வாக்குறுதிகளையும் வழங்கியிருந்தார்.**

**அப்படிப்பட்டதொரு நிலையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைவிடவும் மிக மோசமானதான புதிய சட்டத்தை நிறைவேற்றுவதை ஆட்சியாளர்கள் கைவிடவேண்டும். ஏற்கனவே சாதாரண சட்டங்களின் கீழேயே பயங்கரவாதக் குற்றச்சாட்டுக்களையும் விசாரணை செய்ய முடியும் என்று தெரிவிக்கப்பட்டுவரும் நிலையில் தேவைப்பட்டால் அந்தச் சட்டங்களில் திருத்தங்களைச் செய்து அவற்றை வலுப்படுத்திக்கொள்வதுடன், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தையும்கூட ஆட்சியாளர்கள் முற்றாகக் கைவிடவேண்டும்.**

### வடக்கில் சிங்கள அதிகாரிகளை தொடர்ந்து நியமித்தால்

# வடக்கு மாகாண சபையை முடக்கிப் போராடுவோம்

### மக்கள் பண்பாட்டுப் பேரவை அறிவிப்பு

வடமாகாண இறைவரித் திணைக்களத்திற்கு ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ள பெரும்பான்மையின உயர் அதிகாரிக்கு சேவை நீடிப்பு வழங்கினால் வட மாகாண சபையை முடக்கிப் போராடுவோம் என தமிழ் மக்கள் பண்பாட்டு பேரவையின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சுவீகரன் நிஷாந்தன் தெரிவித்தார்.




வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில்செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண சபையில் தகுதி யுள்ள தமிழ் அதிகாரிகள் இருக்கின்றநிலையில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த அதிகாரிகள் வடக்கில் தொடர்ச்சியாக நியமிக்கப்பட்ட வருகின்றனர்.

மாகாண இறைவரித் திணைக்களத்தின்ஆணையாளராக இருக்கின்ற பந்துல என்பவர் அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றதன் பின் ஒரு வருட சேவை நீடிப்பு வழங்கி மாகாண இறைவரித் திணைக்களத்துக்கு வடக்கு ஆளுநரின் சம்மதத்துடன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவரின் பதவிக் காலம் மார்ச் 31 நேற்றைய தினம் வெள்ளிக்கிழமையுடன் முடிவடைகின்ற நிலையில் மீண்டும் அவருக்கு சேவை நீடிப்பு வழங்குவதற்கு வட மாகாண பிரதம செயலாளரும் ஆளுநரும் நடவடிக்கை எடுத்து வருவதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

வட மாகாணத்தில் தகுதியான அதிகாரிகள் பலர் இருக்கின்ற நிலையில் அனுராதபுரத்தில் இருந்து பெரும்பான்மை இனத்தை சேர்ந்த ஒருவரை அதுவும் அரச சேவையிலிருந்துஓய்வுபெற்றவருக்கு சேவை நீடிப்பு வழங்குவதன் நோக்கம் என்ன?

போர்க்காலத்தில்அனைத்துத் துறைகளிலும் வடக்கு மாகாணத்தைச்சேர்ந்த உயர் அதிகாரிகள் கடமையாற்றிய நிலையில் சிறந்த நிர்வாகம் இருந்தது. ஆனால் இன்று தமிழ் அதிகாரிகளை அரசியல் நோக்கத்துக்காக உயர் பதவிகளில் அமர்த்தாமல் மத்திய அரசு தமக்கு ஏற்ற வகையில் பெரும்பான்மையின் அதிகாரிகளை வடக்கில் நியமனம் செய்கிறது.

வட மாகாண சுகாதார பணிப்பாளராக தற்போது கடமை ஆற்றும் திலீப் லியனகேயை விட சேவை மூப்பு கொண்ட தமிழ் அதிகாரிகள் வடக்கில் இருக்கின்ற நிலையில் சிங்களவருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண அரசு நிர்வாகங்களில் திட்டமிட்ட முறையில் இவ்வாளு சிங்கள பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த அதிகாரிகளைதொடர்ந்தும் நியமிப்பதை ஆளுநர் தடுக்க வேண்டும்.

இல்லாவிட்டால் வட மாகாண சபையை முடக்கிக் கட்சி பேதம் இன்றிப் போராட்டம் நடத்துவோம் - என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஊழல் ஒழிப்பு சட்டமூலத்தை மே மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க ஏற்பாடு

### நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தகவல்

நாட்டின் அபிவிருத்திக்கு ஊழல் ஒழிப்பு சட்டம் பலம்மிக்கதாக இருக்கவேண்டும். அதன்பிரகாரம்சர்வதேசம் ஏற்றுக்கொள்ளும் வகையில் புதியஊழில்ஒழிப்புசட்டமூலம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

எதிர்வரும் மே மாதமளவில் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க எதிர்பார்க்கிறோம். அத்துடன் இந்த சட்டமூலம் சர்வதேச நாணய நிதியத்தின் தேவைக்கு அல்ல. நாட்டில் ஊழலை ஒழிப்பதற்கே கொண்டுவரப்படுகிறது என நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

நீதி, சிறைசாலைகள் மற்றும் அரசமைப்பு சீர்திருத்த அமைச்சில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

நாடொன்றை நிரவகிப்பதில் பாரிய பிரச்சினையாக ஊழல் தலைதூக்கி இருக்கிறது. இது அரச, தனியார் துறை மற்றும் அரசியல்வாதி, அதிகாரிகள் என வித்தியாசம் இல்லாமல் இடம்பெறுகிறது. ஊழலை ஒழிப்பதற்கு லஞ்சம் ஒழிக்கப்படவேண்டும். லஞ்சம் ஒழிப்பு சட்டம் எமது நாட்டில் 1971 காலப்பகுதியில் இருந்து வந்தது.

என்றாலும் காலப்பகுதியில் அதில் மாற்றங்கள் ஏற்பட்டு, இலஞ்சஊழில்ஆணைக்குழு அமைக்கப்பட்டபோதும் அதுதொடர்பாகவும் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டு வந்தன. 1994இல் சந்திரிக்கா குமாரதுங்கவின் காலத்தில் ஊழில் ஒழிப்பு விடயம் பாரியளவில் தேர்தல் மேடைகளில் பேசப்பட்டு வந்தன.

லஞ்சம் ஊழலை ஒழுப்பதற்கு சட்டம் கொண்டு வருவதாக சந்திரிக்கா குமாரதுங்க பகிரங்கமாக தெரிவித்து வந்தார். அதன் பிரகாரம் இலஞ்ச ஊழல் ஒழிப்பு சட்டம் நாடாளுமன்றத்தில் அனுமதிக்கப்பட்டு ஆணைக்குழு அமைக்கப்பட்டது.

என்றாலும்அந்தஆணைக்குழு முறையாக செயற்படத் தவறியதுடன் சுயாதீன ஆணைக்குழு என்றவகையில் அதன் ஆணையாளர்கள் நினைத்த பிரகாரம் செயற்பட ஆரம்பித்தனர். ஆணைக்குழுவும் அரசியல் மயமாக்கப்பட்டது. 5 வருடங்களுக்குஒருவழக்குகூடமுறையாகத் தொடுக்கவில்லை.

அதனால்அந்தஆணைக் குழுவில் எந்த பிரயோசனமும் இல்லை என்பது தெரிய வந்தது. பின்னர் அனைத்து கட்சிகளும் ஒன்றுபட்டு நாங்கள் 2004 இல் ஐக்கிய நாடுகளின் ஊழல் ஒழிப்பு சமவாயத்தில் கைச்சாத்திட்டோம்.

அதில் சர்வதேச தரம் வாய்ந்த இலஞ்ச ஊழல் ஒழிப்பு சட்டமூலம் ஒன்றைத் தயாரிப்பதென நாங்கள் வாக்குறுதி அளித்திருந்தோம். என்றாலும் 2015 வரை அது தொடர்பில் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

2015இல்நாங்கள்19ஆம் திருத்தத்தை கொண்டுவந்து இலஞ்ச ஊழலை தடுப்பதற்கு அதனூடாக நடவடிக்கை எடுத்தோம். அதற்காக பெறுகை ஆணைக்குழு மற்றும் கணக்காய்வு ஆணைக்குழு என இரண்டு ஆணைக்குழுக்களைபுதிதாக நியமித்தோம். தற்போதும் அந்த ஆணைக்குழுக்கள் செயற் பட்டு வருகின்றன.

அத்துடன் தற்போது தயாரிக்கப்பட்டுள்ள ஊழல் ஒழிப்பு சட்டத்தில் சுயாதீன ஆணைக்குகுழுக்களின் ஆணையாளர்கள் தாங்கள் சுயதீனம் எனத் தெரிவித்துக்கொண்டு நினைத்த பிரகாரம் செயற்பட முடியாது.

ஆணையாளர் தனது கடமையை முறையாக மேற்கொள்கிறாரா எனத் தேடிப்பார்த்து அவரை நீக்கும் முறை உள்வாங்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று ஆணைக்குழுக்களுக்கும் ஓய்வுபெற்ற நீதிபதிகளை நியமிப்பதை நீக்கி இருக்கிறோம். சேவையில் இருப்பவர்களையேநியமிக்கநடவடிக்கை எடுத்திருக்கிறது.

மேலும் பொதுக்கள் மற்றும் பொறுப்புக்கள் சட்டம் நீக்கப்பட்டு, அதனை ஊழல் ஒழிப்பு சட்டத்துக்கு கீழ் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. தற்போதுள்ள அந்த சட்டம்காலம்கடந்தசட்டமாகும்.

பொது சொத்துக்கள் தொடர்பாக ஆவணங்கள் வழங்கப்பட்டாலும் அதனை கண்காணித்து நடவடிக்கை எடுப்பதற்கு எந்த முறையும் அதில் இல்லை. விசேடமாக சொத்துக்கள் பொறுப்புக்கள் தொடர்பாக விதிவிலக்களிக்கப்பட்டவர்கள் அனைவரும் இதில் உள்வாங்கப்பட்டிருக்கின்றனர்.

ஜனாதிபதி, வெளிநாடுகளுக்கானதூதுவர்கள், ஆணையாளர்கள்உட்படபலரும்இதில் உள்வாங்கப்பட்டிருப்பதுடன் அதன் நடவடிக்கைகள் ஒன்லைன் முறையில் மேற்கொள்ளமுடியுமானவகையில் இலகுபடுத்தி இருக்கி றோம். சொத்துக்கள் தொடர் பாகக் கண்காணிக்கும் அதிகாரம் ஆணையாளருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன்னர் இவ்வாறானதொரு அதிகாரம் இருக்கவில்லை.

அத்துடன் ஊழல் ஒழிப்பு சட்டத்தில் தகவல் வழங்குநரின் உரிமையைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில் அரச துறையில் தனது உயர் அதிகாரியின் ஊழல் மோசடிகள் தொடர்பில் கீழ் நிலை அதிகாரி தெரிவிப்பதில்லை.

அதனால் தனது தொழிலுக்கு ஆபத்து ஏற்படும் என்ற அச்சம் அவருக்கு இருக்கிறது. அவர் பழிவாங்கப்படலாம். அதனால் அவ்வாறு தகவல் வழங்குபவர்களின் உரிமையை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

மேலும் இந்த சட்டமூலம் தொடர்பாக சர்வதே நாணய நிதியத்துடன் கலந்துரையாடி அவர்களின் கருத்துக்களையும் பெற்றுக்கொண்டிருக்கிறோம். அவர்களின் கருத்துக்கள் நாட்டுக்கு தேவை என்பதற்காகவே ஏற்றுக் கொண்டோம். மாறாக அவர்களுக்கு கீழ்படிவதற்கு அல்ல. சர்வதேச நாணய நிதியத்தின் பிரேரணைகள் பெரும்பாலும் தொழிநுட்பம் சார்த்தனவாகவே இருந்தன.

எனவே நாட்டில் முதலீட்டாளர்கள் முதலீடு செய்வதற்கு அச்சப்படுவதுக்குக் காரணம் ஊழலாகும். இதனை ஒழிக்காமல் முதலீட்டாளர்களுக்கு எந்த ஊக்குவிப்புகளை மேற்கொண்டாலும் அதில் பயனில்லை. அதனால் எதிர்வரும் மே மாதமளவில் ஊழல் ஒழிப்பு சட்டமூலத்தை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பித்து அனுமதித்துக்கொள்ள எதிர்பார்க்கிறோம். - என்றார்.

# இந்தியாவிலிருந்து இறக்குமதியான முட்டைகள் பேக்கரி உரிமையாளரிடம் கையளிக்கப்பட்டன

இந்தியாவிலிருந்துஇறக்குமதி செய்யப்பட்ட முட்டைகள் பேக்கரி உரிமை யாளர்களிடம் கையளிக்கப்பட்டன.

அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தின் அனுமதியுடன் முதற்கட்டமாக இந்தியாவிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்ட சுமார் 10 லட்சம் முட்டைகள் கெரவலப்பிட்டிய ஸ்பெட் ஆர் களஞ்சியசாலையில் வைத்து சந்தைக்கு விடுவிக்கப்பட்டது.

இதன்போது கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன கூறுகையில் -

இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகள் நாட்டில் உள்ள அனைத்து பேக்கரி உற்பத்தியாளர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன. அதன்படி, 10 லட்சம் முட்டைகள் 35 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும்.

மேலும், இறக்குமதி செய்யப்பட்டுள்ள முட்டைகளின் உற்பத்தித் திகதி மார்ச் மாதம் 18 ஆம் திகதி எனவும் அவை எதிர்வரும் ஜூன் மாதம் 15 ஆம் திகதியோடு காலாவதியாகும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை முட்டைகளை பேக்கரிகள், ஹோட்டல்கள் மற்றும் சிற்றுண்டிச் சாலைகளுக்கும் அதிகளவில் வழங்க முடியும்.

எதிர்வரும் நாள்களில் உள்ளூர் முட்டைகளின் விலைகளும் குறைவடையலாம். அதன்படி, பேக்கரி உற்பத்திகளின் விலைகள் குறைக்கப்படும்.

நுகர்வோரை கருத்திற் கொண்டு இவ்வாறான தீர்மானங்களை மேற்கொண்ட வர்த்தக அமைச்சர் உள்ளிட்ட தரப்பினருக்கு நன்றி தெரிவிப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

# நீண்டகாலக் கொள்கை அடிப்படையில் அரச நிறுவனங்கள் மறுசீரமைக்கப்படும்

## ரஞ்சித் பண்டார கூறுகிறார்



அரச சேவை தொடர்பில் நாட்டு மக்கள் மாறுபட்ட கருத்துக்களைக் குறிப்பிடுகிறார்கள். எதிர்காலத்துக்குப் பொருந்தும் வகையில் அரச சேவை நிச்சயம் மறுசீரமைக்கப்படும். காலம் காலமாக காணப்படும் குறைபாடுகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல முடியாது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் பண்டார தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்சந்திப்பில்கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

அரச சேவையின் செயற்பாடு தொடர்பில் நாட்டு மக்கள் மாறுப்பட்ட கருத்துக்களை குறிப்பிடுகிறார்கள். எதிர்காலத்துக்கு பொருந்தும் வகையில்அரசசேவைநிச்சயம்மறுசீரமைக்கப்பட வேண்டும். காலம் காலமாகக் காணப்படும் குறைபாடுகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல முடியாது.

அரச நிறுவனங்கள் தொடர்பில் கோப் குழுவில் பல விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எதிர்வரும் நாள்களில் பல அரச நிறுவனங்கள் மறுசீரமைக்கப்படும். அரச நிறுவனங்களை முழுமையாக தனியார்மயப்படுத்தும் நோக்கம் அரசாங்கத்துக்கு கிடையாது.

ஒருசில அரச நிறுவனங்களின் மந்தகரமான செயற்பாடுகளால் முழு அரசாங்கமும் நெருக்கடிக்குள்ளாகுகிறது. கடந்த காலங்களில் இவ்வா றான தன்மையே காணப்பட்டது. தொழிற்சங்க நடவடிக்கை என்று குறிப்பிட்டுக் கொண்டு அரச சேவையாளர்கள் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் போராட்டங்களில் ஈடுபடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

ஊழல் ஒழிப்பு சட்டத்தை உரு வாக்க அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. நாட்டு மக்கள் முறைமை மாற்றத்தைஎதிர்த்துள்ளார்கள்.ஆகவே 224 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஊழல் ஒழிப்பு சட்டத்துக்கு ஆதரவாகச் செயற்பட வேண்டும்.

ஊழல் மோசடி தொடர்பில் பிரதான பிரசாரங்களை முன்னெடுக்கும் மக்கள் விடுதலை முன்னணி ஊழல் ஒழிப்பு சட்டத்துக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம்.அடிப்படைகட்டமைப்புக்களில் மாற்றம் ஏற்படுத்தால் அரசகட்டமைப்புசிறந்ததாகத்தொழிற்படும். - என்றார்.

# வவுனியாவில் 10 வயது மாணவியை சீரழித்த மூவர் வசமாகச் சிக்கினர்

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியைச் சேர்ந்த 10 வயது பாடசாலை மாணவி ஒருவரைக் கடந்த 4 வருடங்களாக பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கினார்கள் என்ற குற்றச்சாட்டின் கீழ் சிறுமியின் சகோதரன் மற்றும் சிறிய தந்தை உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வவுனியா பொலிஸார் இன்று தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட மாணவி வவுனியாநகர்ப்புறபாடசாலை ஒன்றில் தரம் 5 இல் கல்வி கற்று வருகின்றார். குறித்த

மாணவி கடந்த புதன் கிழமை தனது வகுப்பு சக மாணவிக்கு தனக்கு வீட்டில் நடக்கும் கொடுமைகளையும், பாலியல் துஷ்பிரயோகங்களையும் கூறி அழுதார். இதையடுத்து அந்த மாணவி குறித்த விடயத்தை தமது வகுப்பாசிரியரிடம் தெரி யப்படுத்தினார். ஆசிரியர் சம்பந்தப்பட்ட மாணவியிடம் சம்பவத்தின் உண்மைத்தன்மையைவிசாரித்து அறிந்துகொண்டுஉடனடியாக வவுனியாமாவட்டசெயலகத்தின் சிறுவர் நன் னடத்தைப் பிரிவுக்குத்தெரியப்படுத்தினார். அவர்கள்வவுனியா பொலிஸ் நிலைய சிறுவர் - பெண்கள் பிரிவுக்குத் தெரியப்படுத்தியதை அடுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

குறித்த 10 வயது மாணவி மூவரால் கடந்த 4 வருடங்களாகத் தொடர்ச்சியாக பாலியல் ரீதியில் துன்புறுத்தப்பட்டுள்ளார் என்பது பொலிஸ் விசார ணைகளில் தெரியவந்ததையடுத்து துரிதமாகச் செயற்பட்ட வவுனியா குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார்சம்பவத்துடன்தொடர்பான மூவரைக் கைது செய்தனர்.

பாதிக்கப்பட்ட மாணவி வழங்கிய வாக்கு மூலத்தின் அடிப்படையில் தாயின் இரண்டாவது கணவரான இறம்பைக்குளம்அலகரபகுதியைச்சேர்ந்த 32 வயது நபர், மாணவியின் உடன் பிறந்த சகோதரனான சமனங்குளம் பகுதியை சேர்ந்த 16 வயது இளைஞர், உறவினரான வைரவபுளியங்குளம் பகுதியைச் சேர்ந்த 53 வயது நபர் ஆகிய மூவரே கைது செய்யப்பட்டனர்.

மேலதிக விசாரணைகளின் பின் மூவரும் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் என்றும், சிறுமி வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.




# தந்தை செல்வா பிறந்த தின நிகழ்வு முள்ளியவளையில்







இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிறுவுனத்தலைவரான தந்தை செல்வாவின் 125ஆவதுபிறந்ததினம்வெள்ளிக்கிழமை முள்ளியவளையிலும் இடம்பெற்றது.

முள்ளியவளை, சஞ்சீவன் குடியிருப்பு பகுதியில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முள்ளியவளை மேற்கு மூலக் கிளையின் வட்டார வேட்பாளர் குருதித்தினம் ஜெகதீசனின் ஒழுங்குபடுத்தலில் முன்னெடுக்கப்பட்டது.

தந்தை செல்வாவின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டதுடன், சுடரேற்றப்பட்டு, மலர்தூவி அஞ்சலிசெலுத்தப்பட்டது. தொடர்ந்து விருந்தினர்களது உரைகள் இடம்பெற்றிருந்தன.

சமூக சேவையாளர்கள் பலரும் இந்த நிகழ்வில் பொன்னாடை போர்த்து மதிப்பளிக்கப்பட்டனர். தந்தை செல்வா பிறந்த நாள் நினைவுச் சான்றும் வழங்கப்பட்டு மதிப்பளிக்கப்பட்டனர்.

தந்தை செல்வாவின் 125ஆவதுபிறந்ததினத்தைப் போற்றும் வகையில், 125 பழமரக் கன்றுகளும் இந் நிகழ்வில் வழங்கப்பட்டன.

# சரஸ்வதி மண்டபத்தில் இன்று மட்டும் சித்திரை புத்தாண்டு மலிவு விற்பனை

கொழும்பு மகளிர் இந்து மன்றத்தின் சித்திரை புத்தாண்டுமலிவுவிற்பனை, பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில், இன்று காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை இடம்பெறவுள்ளது.

இந்தநிகழ்வில்உணவுப் பொருட்கள், சேலைகள், ஆடைகள், அழகுசாதனப் பொருட்கள் என்பன மலிவு விலையில் விற்பனை செய் யப்படவுள்ளன என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர் விசேட நிகழ்வுகளும்அதிர்ஷ்டஇலாபசீட்டிழுப்பும் நடைபெறவுள்ளன.

15/1, பகதலே வீதியில், கொழும்பு மகளிர் இந்து மன்றம்நடத்திவரும் - அன்பு இல்லம் என்ற முதியோர் இல்லத்துக்குத்தேவையானவசதிகளைச் செய்துகொடுக்கும் பொருட்டே, இந்த மலிவு விற்பனை நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## இலங்கையில் ....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் அதற்கான நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்படவேண்டும்.

இலங்கை இந்திய ஒப்பந்தம் உரிய முறையில் முழுமையாக அமுல்படுத்தப்படுவதுடன் தமிழ் மக்களுடைய பிரச்சி னைகளுக்கு உடனடியாகத்தீர்வு ஏற்படுத்தப்படவேண்டும்.

தொல்லியல் திணைக்களம், வனவளதிணைகளம், வனஉயிரிகள்திணைக்களம் என்பவற்றின்பெயரில்தமிழர் நிலங்களை ஆக்கிரமிப்பையும் கண்டிப்பதுடன்

இந்த அமைப்புக்கள் சைவ சமயத்திற்கு செய்யும் இடையூறுகளையும் நிறுத்த வேண்டும்.

கிண்ணியா கோவிலை இடித்தது மட்டுமல்லாமல் வரலாற்று சின்னங்கள் அழிக்கப்பட்டு பௌத்த மயமாக்குவதையும் நிறுத்த வேண்டும். சைவ மக்களின் ஆலயங்கள் உட்பட அனைத்தும் சைவ மக்களிடமே கையளிக்கப்பட வேண்டும்

சைவசமய சின்னங்கள் நிறுவுவது குறித்து கிறிஸ்தவ பாதிரியார் எமக்கு அறிவுரை சொல்வதுவருத்தமளிக்கிறது. சைவ மக்களின் நிலத்தில் சைவர்கள் சின்னங்களை வைப்பதை கண்டிப்பது மா பெரும் தவறு.

வடக்கு கிழக்கில் இருக்கின்ற சைவர்களை மதமாற் றம் செய்கின்றதையும் நாங்கள் கண்டிப்பதுடன் மத மாற்றதடைச்சட்டம்கொண்டு வரப்பட வேண்டுமெனவும் கோருகிறோம்.

இனிமேல் இந்தத் துன்பங்கள்நடைபெறாமல்சைவ சமயத்தையும் சைவர்களையும் பாதுகாக்க இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிஉதவவேண்டுமெனவும் கோருகிறோம்.

இங்கு தற்போது பல சைவப் பாடசாலைகள் மூடப்பட்டு இருக்கின்றன. அவ்வாறு மூடிய பாடசாலைகளை அந்தந்த சைவ நிறுவனங்களிடமே மீளவும் ஒப்படைக்கவேண்டும். அதனை விடுத்து அந்தப் பாடசாலைகளைவேறுநபர்களிடம் கையளிக்க கூடாது எனவும் கோருகிறோம்.

இவ்வாறு பல தீர்மானங்களை நாங்கள் எடுத்திருக்கின்ற நிலையில் இவை தொடர்பில் இலங்கை ஆட்சியாளர்கள் உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் மீளவும் வலியுறுத்திக் கொள்கின்றோம்.


நாங்கள்எடுத்துள்ளஇந்த தீர்மானங்களை இலங்கை ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கும் இந்தியப் பிரதமருக்கும் அனுப்பி வைக்க உள்ளோம்.

சைவ சமயத்தவர்களாக நாங்கள் பலரும் ஒன்று கூடி எடுத்துள்ள இந்தத் தீர்மானங்களுக்கு உரிய நடவடிக்கைகளை ஆட்சியாளர்கள் எடுக்கத் தவறினால் எதிர்ப்புக் கூட்டங்களை நடத்துவதுடன் விரைவில் பூரண அடைப்புப் போராட்டம்நடத்தவும் தீர்மானித்துள்ளோம் - என்றார்.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road, Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# நல்லூரில் ஞானம் பெற்ற நல்ஞானி



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ் மொழிக்கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா

சித் என்றால் அறிவு , ஞானம் , தெள்ளிய பார்வை ,கூர் நோக்கு, விரிந்த நோக்கு என்று பொருள் சொல்லப்படுவதால் – சித்தர்களை அறிவாளிகள் , ஞானிகள், தெளிந்த பார்வையினை உடையவர்கள் , கூர்ந்த நோக்கினை உடையவர்கள்,கடந்து சிந்திப்பவர்கள் என்றும் எடுத்துக் கொள்ளலாம் அல்லவா !

சித்தர்கள் என்பவர்கள் மானிடம் செழித்திட வாழ்ந்த மகா ஞானிகள் எனலாம். அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு என்னும் தத்துவமே அவர்களது இறுக்கமான தத்துவமாய் இலங்கியது எனலாம். எதை யும் விரும்பார். எதையும் தமக்காக் கிட எண்ணார். மற்றவர் நலனுக்காய் அவர்கள் எப்பொழுதும் கைகொ டுத்திடவே எண்ணுவார்கள். அதன் வழியில் பயணப்படுவார்கள்.

மக்கள் சேவையினை மகேசன் சேவையாய் எண்ணி இப்பூவுலகில் வாழ்ந்தவர் – பல சித்தர்கள் இருக்கிறார்கள், அப்படியான சித்தருக்கென்று ஒரு பரம்பரையே இருக்கிறது என்பதை வரலாற்றால் அறிகிறோம்.

பாரத நாட்டில் திருமூலருடன் சித்தர் பரம்பரையினை இணைத்துக் கூறுவது வழக்கம். திருமூலர் மூவாயிரம் வருடங்கள் இம்மண்ணுலகில் வாழ்ந்து பல அரிய , பெரிய, பணிகளையெல்லாம் ஆற்றினார் என்று அறிகிறோம். அவரின் பேராற்றல் வியந்து பார்க்கக் கூடியதாகும். அவரின் திருமந்திரம் என்னும் திவ்விய நூல் பலவித கருத்துக்களின் பொக்கிமாய் மிளிர்கிறது எனலாம். திருமூலரைத் தொடர்ந்து பல சித்தர்கள் பாரத மண்ணில் வந்தார்கள். அவர்களில் சிலர் ஈழத்திலும் கால்பதித்து சமூக நலனுக்காய் பலவற்றைச் செய்தார்கள் என்றும் அறிய முடிகிறது.

ஈழத்துச் சித்தர்கள் என்றும் சொல்லும் பொழுது மற்றய சித்தர்களை விட மாறு பட்டவராய் , வேறு பட்டபராய் ஒருவர் யாழ்ப்பாண மண்ணிலே பிறந்து, எல்லா இடமும் திரிந்து,யாவருக்கும் சுமை தாங்கியாய், ஆன்மீக வெளிச்சமாய் விளங்கியிருக்கிறார் என்பதை நினைவில் கொள்ளுவது சாலவும் பொருந்தும் என எண்ணுகின்றேன். ஆடையில் ஆரம்பரம் இல்லை. தனிப்பட்ட எந்த அலங்காரங்களும் இல்லை. எளிமையான் வாழ்வு. பரிவாரங்கள் இல்லை.பவனி இல்லை. யாரும் சந்திக்கலாம். ஏற்றத் தாழ்வுகள் பார்ப்பதும் இல்லை. நாடியவர்களின் நலன் காக்கும் நன்மருந்து.

நல்லூரில் தேரடியில் ஞானம் பெற்று , கொழும்புத் துறையில் குடிசையில் அமர்ந்து அருளாட்சி புரிந்து இறையடியைச் சரண் புகுந்த யோகர் சுவாமிகள்தான் அப்பெரும் சித்தராவார்.

மாவிட்டபுரத்தில் சைவக்குடும்பத்தில் பிறந்து சதாசிவன் என்னும் பெயர் பெற்று , கத்தோலிக்க பள்ளியில் யோன் என்று பெயர் மாற்றப்பட்டு நிறைவில் யோகநாதனாகிப் பின் யோகர் சுவாமி என்னும் சித்தராய் மலர்கிறார் இந்த மகான். தாயார் சிறுவயதில் இறக்கிறார். தந்தையார் மலை நாட்டில் வேலை செய்கிறார். மகனை எப்படியாவது படிக்க வைக்கத் தந்தை விரும்புகிறார்.

தந்தையின் உடன் பிறந்த சகோதரன் சின்னையாவோ கொழும்புத் துறையில் கத்தோலிக்கப் பெண்ணை மணம் முடித்து அம்மதத்துள் நிற்கின்றார். அந்தச் சூழலில் சதாசிவன் – யோனாகி கல்வி கற்கும் சூழ் நிலை ஏபட்டதைக் கண்டதும்; தந்தையுடன் பிறந்த சகோதரி முத்துப்பிள்ளை என்பவர் மருமகனை மீட்டு சைவத்துள் கொண்டுவர முயலுகின்றார். சமணத்துக்குச் சென்ற தம்பியை மீட்ட திலவதியார் போல – மருமகனைச் சைவத்துக்குள் இழுத்திட மாமியார் முன்வந்து நின்றார் எனலாம். மருமகனை மாற்று மதம் தீண்டா வண்ணம் சைவப் பற்றினை ஊட்டுவதற்காக மாமியார் முத்துப்பிள்ளை கையாண்ட வழிகள் நல்ல வெளிச்சமாய் அமைந்தது எனலாம். மாமியாயின் நெறிப்படுத்தலினால் – யாழ் மண்ணுக்கு நல்லதொரு சித்தர் கிடைக்கப் பெற்றார் என்பதும் பொருந்தும் அல்லவா!

கந்தப்பெருமான் அருள்புரியும் மாவிட்டபுரத்தில் பிறந்தவர் கந்தப் பெருமான் அருள் புரியும் நல்லூரில் ஞானம் பெற்றார் என்பது திருவ ருள் அல்லால் வேறு எப்படி என்று எடுக்க முடியும்!

எல்லோரையும் போலவே சாதரணமாகவே பிறந்தார். சாதாரண மாகவே வளர்ந்தார். சாதாரணமாகவே படித்தார். அதன் பின் அரச உத்தியோகமும் பார்த்தார். அவரின் பிறப்பில்கூட எந்த அதிசயமும் நிகழவில்லை என்பதும் நோக்கத்தக்கத்தது. ஆனால் பெரும் மகானாக , பெரும் சித்தராக அவர் வளர்ந்து நின்றார் என்பதற்கு இறையருளை த்தான் காரணம் எனச் சொல்லக் கூடியதாக இருக்கிறது .

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை
பற்றுக பற்று விடற்கு

என்ற வள்ளுவத்தின் கருவே யாழ் மண்ணின் சித்தரிடம் நிறைந்து காணப்பட்டது எனலாம்.

மற்றவர்கள் துயிலும் பொழுது ஞானி விழித்திருப்பான் என்று கீதையில் சொல்லப்பட்டிருக்கிறது. அது முற்றிலும் எங்கள் யாழ் மண்ணின் ஆன்மீக ஜோதி யோகர் சுவாமிகளுக்கு மிகவும் பொருத்தமாய் அமை ந்தது எனலாம்.கிளிநொச்சியில் சுவாமிகள் நீர்ப்பாசனப் பகுதியில் கடமையாற்றும் வேளை – வேலை முடி ந்து மற்றவர்கள் நித்திரைக்குச் சென்று விடுவர்.சுவாமியோ அவ்வேளை நித்திரையை விட்டு விட்டு நெடு நேரம் தியானத்தில் இருந்திருக்கிறார் என்பதை அறிய முடிகிறது. சுவாமிகள் இப்படி இரவில் நடந்து கொள்ளுவதை – அங்கு சென்று வரும் அவரின் மாமியாரின் மகனாகிய வயித்தியலிங்கம் என்பார் சுவாமிகளுக்கு விசர்போக்கு ஆரம்பித்து விட்டது என்று கூறியதாகவும் அறிய முடிகின்றது. கிளி நொச்சியில் இருந்த காலத்தில் – தேவாரம், திருவாசகம் , திருமந்திரம், அருணகிரியார் பாடல்கள், தாயுமானவர் பாடல்கள், சித்தர் பாடல்கள், ஔயார் பாடல்கள், ஆகியவற்றை மனனம் செய்திருக்கிறார் என்றும் அறிய வருகிறது.

சுவாமிகளின் வாழ்கையில் அவரது இருபத்தைந்தாவது வயது குறிப்பிடத் தக்க காலம் எனலாம். அவர் வேலையை விட்டு யாழ்மண்ணுக்கு வருகிறார். இலங்கைவந்த வீரத்துறவி சுவாமி விவேகானந்தரைக் காணும் பேறும் அவருக்கு வாய்க்கின்றது. சுவாமி விவேகானந்தருக்கு யாழ்மண்ணில் கொடுக்கப்பட்ட வரவேற்பு நிகழ்வில் பங்குபற்றும் வாய்ப்பும் கிடைக்கிறது.

இராமகிருஷ்ண பரமஹம்சரிடத்தும், விவேகானாந்தரிடத்தும், இராமகிருஷ்ண அமைப்பிலும் சுவாமி களுக்கு மிகுந்த நம்பிக்கையும் ஈடுபடும் இருந்தது எனலாம். மயில்வாகனம் என்னும் மட்டுநகர் பெருமகன் இராமகிருஷ்ண அமைப்பில் இணைய விழைந்த வேளை அவரை ஆசீர்வதித்து வரவேற்று நின்றவர் யோகர் சுவாமிகளாவர். அந்த மயில்வாகனே பிற்காலத்தில் முத்தமிழ் வித்தகராய் முகிழ்த்த சுவாமி பிபுலானந்த அடிகள் ஆவர்.

எப்பவோ முடிந்த காரியம்
முழுவதும் உண்மை
நாமறியோம்
முழுவதும் உண்மை

இவையாவும் உபநிடத வாக்கியங்களின் மொழி பெயர்ப்புப்போல் தென்படுகிறதல்லவா? ஆம் .... யாழ்மண்ணில் வந்து நின்ற மகா சித்தரான செல்லப்பாசுவாமிகளின்உள்ளத்திநின்றும்வெளிவந்த வாக்கியங்களே இம் மகா வாக்கியங்களாகும். இவற்றை உபநிடதம் அல்லால் வேறு என்ன வென்று சொல்ல முடியும் !

நல்லூர் தெரிவில் சிரித்தபடி திரிந்தார்.வெறித்த பார்வையராய் இருந்தார்.வேடம் எதையுமே விரும் பினர் அல்லர். கறுப்பு நிற மேனியும், கந்தையுமே அவரடையாளம். அவரைப் பித்தன் என்று மற்றவர்கள் பேசித்திரிவார்கள். அவரை நாடி வந்தால் வந்தவரைப்பார்த்துச் சீறுவார். வீதியால் செல்லுபவர் களைப் பேசுவார். புகழ்ச்சியே இகழ்ச்சியோ எல்லாவற்றையும் ஒன்றாகவே எடுத்துக்கொள்ளுவார். திருநீறு அணிய மாட்டார். நெற்றியில் பொட்டும் இருக்காது. முதல் கூறியதைத் திரும்பக் கூறாதவர். சாதியை, சமயத்தைப் பேசி சங்கடத்துக்குள் அகப்படாதவர். இப்படியெல்லாம் இருந்தவர்தான் நல்லூர் தேரடியில் இருந்த பெரு ஞானி, சித்தர், செல்லப்பராவர்.

அந்த ஞானியை யோகர் சுவாமிகள் 1904 ஆம் ஆண்டில் நல்லூர் தேரடியில் காணுகிறார். டேய் நீ யார் என ஒரு உலுக்கு உலுக்கி ஒரு பொல்லாப்பும் இல்லை என்று உறுமினார். தேரடாவுள், தீரடா பற்று என்னும் உபதேசங்கள் அங்கு அவருக்குக் கிடைத்தன. செல்லப்பரின் உறுமல் யோகர் சுவாமிகளைக் கட்டிப் போட்டது.

ஞான தேசிகனைச் சந்தித்ததும் அதனால் தன்னுள் ஏற்பட்ட பரிபூரண நிலையையும் சுவாமிகள் பாட்டாகவே காட்டியுள்ளார்.

இருவருந் தேடிக் காணா இறைவன் என்போல் உருத்தாங்கி
இணங்கி யெவரும் வணங்கும் நல்லையில் இன்னான் இவனென்ன
ஒருவரு மறியா தோடியுலாவி உவகை பூத்த முகத்தினராய்
ஒருநாள் என்றனை உற்று நோக்கி ஓர் பொல்லாப்பு மில்லையென்று
அருவமுங் காட்டி உருவமுங் காட்டி அப்பாற் கப்பாலாம்
அருள்நிலை காட்டிக் காட்டிக் காட்டிக் அந்த மாதி யில்லாச்
சொரூபமும் காட்டிச் சும்மா விருக்கும் சூட்சுமத்தில் மாட்டிவிட்டான்
துன்பம் இறந்தன இன்பம் இறந்தன சோதிசோதி சிவசோதி

உபதேசம் கிடைத்தும் சுவாமிகள் குருவை விட்டகலாதே இருந்தார். ஆனால் குருவோ அவருக்குச் சோதனைமேல் சோதனைகள் கொடுத்தார்.தேறினார் யோகர் சுவாமிகள். ஆனால் செல்லபரோ ஏறியே விழுந்தார். இறுதியில் இரு யானைகள் ஒரு தறியில் கட்டப்படாது என்று செல்லப்பர் கூறி சுவமிகளைக் கலைத்துவிட்டார்.

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை
பற்றுக பற்று விடற்கு

இக்குறள் வழியில் யோகர் சுவாமிகள் இருந்தார். அதனால் குருவின் ஏச்சோ, பேச்சோ அவரை மாற்றி விடக் கூடியதாக அமையவில்லை. எல்லாமே தனக்கு வாய்த்த உபதேசம் என்று சுவானிகள் எடுத்துக்கொண்டார்.

குருநாதர் செல்லப்பர் உடல்நலம் இல்லாது படுத்திருந்த வேளை சுவாமிகள் அவரைப் பார்க்கச் சென்றாராம். என்ன பார்க்கப் போகிறாய்? நில் அங்கே, உன்னைச் சிந்தித்துப் பார். என்றாராம் செல்லப்பர். அவ்வார்த்தையுடன் திரும்பிய சுவாமிகள் அந்தப்பக்கமே போகவில்லை என்று அறிய முடிகிறது.

யோகர் சுவாமிகள் கொழும்புத்துறையில் ஒரு சிறு கொட்டிலில் தனது வாழ்வினை ஆரம்பிக்கிறார். அங்கு ஆன்மீக ஒளி அனைவருக்கும் கிடைக் கிறது. சாதி, சமய, இன, மொழி , வேறுபாடுகளைக் கடந்து பலருமே அவரை வந்து வணங்குகிறார்கள். ஆசிகளை, வாழ்த்துகளைப் பெற்று திருப்தி அடை கிறார்கள்.

யோகர் சுவாமிகளை நாம் இன்றும் நினைத்து அவருக்குக் குருபூசை வழிபாடுகள் செய்வதற்குக் காரணம் அவரின் வாழ்வியல் முறைகளே எனலாம்.

அவரின் பூரணமான துறவு நிலை அவரை பெரும் ஞானியாய் சித்தராய் மிளிர வைத்திருக்கிறது எனலாம். பலரும் சமூகத்தில் துறவு நிலையினை மேற்கொண்டு பிரமச்சாரிகளாய் வாழ்ந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களின் வாழ்வியலையும் யோகர் சுவாமிகளின் வாழ்வியலையும் ஒப்பிட்டுப் பார்ப்பது பொருத்தமானதன்று. அவர்களின் நிலை வேறு. சுவாமிகளின் நிலை வேறு.

தமக்கென வாழா பிறர்க்குரியவராய் சுவாமிகள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டார்.தனக்கு நாளைக்குத் தேவை என்று கருதி எதையும் அவர் வைத்திருக்க எண்ணுவதே இல்லை. அன்பர்கள் கொடுப்பதில் ஒரு சிறுபகுதியை பயன்படுத்துவார். மற்றவற்றை எல்லாம் பங்கிட்டு அளித்து விடுவார். பணம்கூட அவருக்கு ஒரு பொருட்டல்ல. தேவையான பொழுது அவருக்குக் கிடைக்கும். தேவைக்கு அதிகமாக பொன்னோ, பொருளோ எதையும் சுவாமிகள் மனம் நாடுவதே இல்லை.

பற்று இல்லாதவனிடத்து எல்லாப் பொருள்களும் வந்து சேரும் என்பதற்கு சுவாமிகள் அவர்கள் நல்லதோர் எடுத்துக்காட்டு எனலாம். இன்று சித்தர்கள் , ஞானிகள், ஆன்மீக வழிகாட்டிகள் என்று நாட்டில் தலைவிரித்து நிற்கும் பலர் பொருள் ஒன்றே குறிக்கோளாய் மனமிருத்தி மக்களை ஏமாற்றி ஆன்மீகத்தையே இழிவு படுத்திக் கேவலத்துக்கு ஆளாகி நிற்பதை இன்று யதார்தமாகவே காணமுடிகிறதல்லவா? ஆனால் யோகர் சுவாமிகளோ

பற்றினைப் பற்றா நின்றவர். பரமனைப் பற்றினார். பண்புகளைப் பற்றினார். சமூக நலன்களைப் பற்றினார். ஆன்மீகத்தைப் பற்றினார். அக ஒழுக்கத்தைப் பற்றினார். அன்பைப் பற்றினார். ஆறுதலைப் பற்றினார்.

பலவித கொள்கையினை உடைவர்கள், அரசியலில் உயர் நிலையில் இருப்பவர்கள், அரச உயர்பதைகளில் இருப்பவர்கள் என்று பலவகைப் பட்டவர்கள் சுவாமிகளை நாடி வருவர். வருபவர்களின் நம்பிக்கைக்கு ஊறு விளைவிக்கும் வண்ணம் நடந்திட சுவாமிகள் விரும்பியதே இல்லையாம். இப்படி சுவாமிகள் நடப்பதால் வருபவர்கள் மனதில் ‘தங்க ளின் கொள்கையினை உடையவர்தான் சுவாமிகள்’ என்னும் எண்ணம் உருவாகிவிடுகிறது எனலாம்.

பார்க்கும் இடமெங்கும் நீக்கமறப் பரம் பொருளையே சுவாமிகள் காண்பதனால் அவருக்கு வருபவர்கள் வேறுபாடுகள் தென்படு வதில்லை எனலாம். ஒவ்வொருவரும் தத்தம் கடமையைச் செய்ய வேண்டும் என்பதை வருபவர்களுக்கு சுவாமிகள் பெரும் உபதே சமாக வழங்குவார். பஞ்சமா பாதகங்களை ஒருவன் ஒழித்தாலே வாழ்வு சிறக்கும் என்பது சுவாமிகளின் பெரு நம்பிக்கையாய் அமைந்தது. துறவு பூண்டுதான் உண்மையினை உணர வேண்டும் என்பதில்லை. இல்லறத்தே இருந்தாலும் நல்லறமாய் வாழ்க்கை யினை அமைத்துக் கொண்டால் உண்மையினை உணரலாம் என்பது சுவாமிகளின் நல்ல தொரு தத்துவமாயும் வாழ்வியலுக்கு ஏற்ற வழிகாட்டியாயும் அமைந்தது எனலாம்.

உலகத்தைத் திருத்த முயலுதல் என்பது நாய் வாலை நிமிர்த்த முயல்வது போலாகும்.உன்னை முதலில் திருத்த முயற்சி செய்.உலகத்துக்கு நன்மை செய்ய முற்பட்டால் நாமே அதிக நன்மையை அடைகிறோம் என்பதை நாம் அனைவருமே உணருதல் வேண்டும் என்னும் அரிய தத்துவத்தை சுவாமிகள் மொழிந்திடுவார். இது யோகர் சுவாமிகளின் சமுதாய அக்கறையினைப்பறைசாற்றிநிற்கிறதல்லவா? முற்றும் துறந்த பற்றற்ற சித்தரான யோகர் சுவாமிகளின் இச்சிந்தனையாலேதான் இன்றும் நாம் அவரை நினைக்கவும் பூசிக்கவுமான நிலை ஏற்படுகிறது எனலாம். துறவி என்றால் காட்டுக்குப் போய் கடுந்தவம் ஆற்றுவதல்ல. நாட்டுக்குள், நாட்டு மக்களுக்கு மத்தியில் வாழ்ந்து நாட்டுமக்களின் நல் வாழ்வுக்கு வெளிச்சமாய் இருப்பதுதான் சரியான துறவியின் இலட்சணம், இலக்கு என்பதைக் காட்டியவர் யோகர் சுவாமிகள் என்பதை எவருமே மறுத்துரைத்துவிட முடியாது! அதனால்த்தான் அவரை நாடு கடந்தும் மொழி கடந்தும் இனங்கடந்து பின்பற்றிப் பல சீடர் பரம்பரையும் , நல்ல வழிகாட்டுதல்களும் மலர்ந்திருக்கின்றன என்பது மனங்கொள்ளத்தக்கதாகும்.

யோகர் சுவாமிகளின் நெறிப்படுத்தலால் பல இளைஞர்கள் வாழ்விலே திருந்தி இருக்கிறார்கள். பொதுமக்களுக்கான சேவைகளை இன்றும் யாழ்மண்ணில் செய்து கொண்டு பல உள்ளங்கள் இருக்கின்றன என்றால் அதற்கெல்லாம் வித்தாகி உரமாகி நிற்பவர் யோகர் சுவாமிகளே ஆவர். ஆண்டவன் இல்லை என்று அடித்துக் கூறியவர்கள் பலர் சுவாமிகளின் அறிவுரைகளால் ஆன்மீககத்தில் நாட்டங் கொண்டு ஆண்டவன் புகழ் பாடும் நிலை யில் வந்து நின்றார்கள் என்பதும் அறியக்கூடிய ஆனந்தமான அவசியமான தகவல் எனலாம்.

திருவாசகத்தை பெரிதும் சுவாமிகள் விரும்பினார். திருவாசகத்துள்ளும் சிவபுராணத்தை அவர் முக்கியத்துவப் படுத்தினார். ஈழத்தில் சிவபுராணம் பள்ளிகள் தோறும் வெள்ளிக் கிழமைகளில் பிராத்தனை மண்டபத்தில் படிக்கப்படுவதற்கும் யோகர் சுவாமிகளின் வழிகாட்டலே துணையாய் அமைந்திருக்கும் என்றும் எண்ணத் தோன்றுகிறது.சிவதொண்டன் நிலையம் சுவாமிகளை நினைவூட்டிக் கொண்டே இருக்கும். இராகமாகப் பாடி திருமுறைகளை ஓதுவதில் சுவாமிகள் பெரு விருப்புடையவராக இருந்தார் எனலாம். அவரின் திருவாக்காய் மலர்ந்திருக்கும் நற்சிந்தனைகள் மிகப் பெரிய தத்துவக் கருத்துகளை உள்ளடக்கிய எமக்கு வாய்த பொக்கிம் என்றே சொல்லலாம்.

சித்தர் என்றால் , யோகி என்றால், ஞானி என்றால், சாத்திரம் சொல்லுவார். தொட்டவுடன் நோய்களைப் போக்குவார். கேட்டவற்றை உடனே கண்முன்னே வரவழைத்துக் கொடுப்பார். உருவை மாற்றுவார். சித்துக்கள் காட்டுவார். என்றெல்லாம் நாம் அனைவரும் எண்ணியே நிற்கின்றோம். இப்படியெல்லாம் செய்யும் நிலைக்கும் ஞானத்துக்கும் எந்தவித தொடர்புமே இல்லை என்பதுதான் உண்மை நிலையாகும். இதை நம்மில் பலர் அறியவில்லை எனலாம்.

யாழ்மண்ணின் யோக புருரான யோக சுவாமிகள் மானிடம் தளைக்க நல்ல ஆன்மீக ஒளி பாய்ச்சிட வந்த மகானாகவே விளங்கினார். அவரிடமும் எதிர்காலத்தை அறியும் ஆற்றலும் , வருகின்ற அல்லல்களை அறியும் ஆற்றலும், நிரம்பியே இருந்தது. ஆனால் அவர் அவற்றை மக்கள் மத்தியில் காட்டி செல்வாக்கினைப் பெற்றிட ஒரு நாளுமே எண்ணம் கொண்டவராக இருந்ததே இல்லை. தனது மனதுக்குப் பட்டால் சிலவேளை சிலருக்கு வழி காட்டியிருக்கிறார் என்பதை அவரின் வரலாற்றால் அறிந்து கொள்ள முடிகிறது. பெரியோர்களை நாடுவதன் தலையாய நோக்கம் நம்மைச் சீர்படுத்துவதற்கே அன்றி வேண்டியதைப் பெறுவதற்கு அல்ல என்னும் கருவினைத் தமது உள்ளத்தில் கொண்டு செயற்பட்ட படியால்த்தான் இன்றும் நாம் யோகர் சுவாமிகளை நினைத்து அவரைப் போற்றுகிறோம் எனலாம்.

ஒரு பொல்லாப்புமில்லை. முழுதும் உண்மை. அது அப்படித்தான்
நூதனமொன்றில்லை.சுற்றிச் சுற்றிச் சுப்பருடைய கொல்லைதான்.
காயமொரு சித்திரக் கோயில்.எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்.
சர்வம் சிவன் செயல்.சர்வம் சிவமயம். தன்னை அறி.
சும்மா இரு!




# உரலார் கேள்வியும் உலக்கையார் பதிலும்

- கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் -

**1. உரலார் கேள்வி:-** வெடுக்குநாறியில் தொல்பொருள் ஆய்வு நிலையத்தின் பொறுப்பிலிருந்த சிவன் கோயிலை முற்றாக இடித்துத் தள்ளிவிட்டார்களாமே. இதற்கு என்னதான் செய்யலாம்;?

**உலக்கையார் பதில்:-** காலாகாலமாய் எழுபவர் வீழ்வதும், வீழ்பவர் எழுவதும் உலகின் இயற்கையாய் இருந்து வருகிறது. எத்தனை இரணியர்கள்? எத்தனை சூரர்கள்? எத்தனை இராவணர்கள்? இம்மண்ணில் தோன்றி மற்றவர்களை வருத்தி இறுதியில் தாமே அழிந்து போய் இருக்கிறார்கள். இந்த வரலாற்றை அறியாத முட்டாள்கள் தம் எழுச்சி நோக்கி மற்றவர்களை வீழ்த்தி மகிழ்கிறார்கள். காலம் மாறுகிறபொழுது, இதே நிலை தமக்கும் ஏற்படும் என்பதை உணரத் தவறும் இவர்களுக்குக் காலந்தான் பதில் சொல்லவேண்டும்.

இன்னொன்றும் செய்யலாம். இனத்திற்காகப் போராடுவதாய்ச் சொல்லிக் கொண்டிருக்கும் நம் தமிழ்த் தலைவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து (?) இச் சம்பவத்தை முன்னிறுத்தி தமது நாடாளுமன்றப் பதவிகளை ஒரே நாளில் துறப்பார்களேயானால், உலகம் ஒரு தரம் அதிர்ச்சியுறும். அதனால் இந்தப் பாதகர்களின் பாதங்களுக்கு ஒருவேளை விலங்கு பூட்டப்படலாம். இது எனது ஆசைதான். அந்த அளவுக்கு நம் தலைவர்களிடம் பதவிச் சுகத்தைக் கடந்த இனப்பற்று இருந்தால் நாங்கள் என்றோ உருப்பட்டிருப்போமே!

**சல்லடையாரின் சலிப்பு * இல்லாத ஊருக்குப் போக வழி சொல்கிறார் வாரிதியார். நம் தலைவர்களாவது பதவிப் பல்லக்கிலிருந்து இறங்குவதாவது!**

**2. உரலார் கேள்வி:-** திருவள்ளுவரின் சிலைக்கு விபூதி பூசியது பற்றியும் காவியுடை உடுத்தது பற்றியும் கடுமையான சர்ச்சைகள் நடக்கின்றனவே. அது பற்றி நீங்கள் ஒன்றும் சொல்லமாட்டீர்களா?

**உலக்கையார் பதில்:-** 'டம்ளரில்' தரப்பட்ட பாலைக் குடிப்பதில்த்தான் எனக்கு அக்கறை. 'டம்ளர்' என்ன நிறம் என்றோ? அதன் வடிவம் எப்படி இருக்கவேண்டும் என்றோ? நான் கவலைப் படுவதில்லை. மேற்சொன்ன சர்ச்சைகளில் ஈடுபடுவோரில் பலர் பாலைக் குடிப்பதாய்த் தெரியவில்லை. அவர்களுடைய விருப்பம் எல்லாம் 'டம்ளர்' பற்றிய சர்ச்சையில்த் தான் இருக்கிறது. இவர்களுக்காகவும் 'காணாதான் காட்டுவான் தான்காணான்' என்று தொடங்கும் ஒரு குறளை வள்ளுவர் இயற்றி இருக்கிறார். இக் குறளைப் படித்ததாலும் 'அறிவிலார்க்கு உரைப்பவர் அவரிலும் அறிவிலார்' என்பதைத் தெரிந்ததாலும்தான் இச் சர்ச்சைகளில் நான் கருத்துக் கூறப் போவதில்லை.

**சல்லடையாரின் சலிப்பு * வாரிதியார் வள்ளுவர் தந்த முப்பாலைச் சொல்லுறார் போல.**

**3. உரலார் கேள்வி:-** டொலரினதும், தங்கத்தினதும் விலைகள் நாளுக்குநாள் ஏறி இறங்குவதைப் பார்த்தீர்களா?

**உலக்கையார் பதில்:-** அதைப்பற்றிப் பொதுமக்கள் கவலைப்படுவதே யில்லை. இருக்கிறவர்களும், வாங்கப் போகிற வர்களும்தான் அதைப்பற்றிக் கவலைப்படவேண்டும். பாணுக்கும், சீனிக்கும் விலை ஏறி இறங்குவது பற்றித்தான் பொதுமக்களின் கவலையெல்லாம்.

**சல்லடையாரின் சலிப்பு * பாணும், ரின் மீனும், பாலும் கலந்துனக்கு நான் தருவேன்.**

**4. உரலார் கேள்வி:-** தமிழ்நாட்டில், தமது ஆட்சி வந்தால் ஜெயலலிதாவின் இறப்புப் பற்றி ஆராயப்படும் என்றார்கள். இதுவரை மூச்சுப் பேச்சைக் காணோமே?

**உலக்கையார் பதில்:-** கூட்டுக் களவாணிகளின் வீட்டு விடயம் அது. ஒரு நாளும் உண்மை வெளிவரப் போவதில்லை. ஏதோ பெயருக்கு ஓர் ஆணைக் குழு நடந்து கொண்டிருப்பதாய்க் கேள்வி. திராவிடர் கழகங்களின் ஆட்சியில் ஜெயலலிதாவின் ஆத்மா சாந்தி அடையப் போவதில்லை என்பது மட்டும் நிச்சயம்.

**சல்லடையாரின் சலிப்பு * யேசுநாதர் போல ஜெயலலிதா உயிர்த்தெழுந்து வந்தால்த்தான் உண்மை வெளிவருமுங்கோ.**

**5. உரலார் கேள்வி:-** நீங்கள் முன்பொரு தரம் பாராட்டி எழுதிய ஆஸ்திரேலிய எழுத்தாளர் ஜே.கே, அவர்கள் அண்மையில் 'பூப்புனிதக் கொலைகள்' எனும் தலைப்பில் எழுதிவரும் தொடரின் மூன்றாம் பாகத்தில், உங்களையும் ஆறு.திருமுருகன் அவர்களையும் கிண்டலடிக்குமாப் போல குறிப்பால் சில பாத்திரங்களைக் காட்டியிருப்பதைப் பார்த்தீர்களா?

**உலக்கையார் பதில்:-** பார்த்தேன். அக்கட்டுரைத் தொடர் என்னை ஈர்த்தது. அறிவார்ந்த சிந்தனை, சமுதாயத்தின் பொய்மை, கற்றவர்களின் வஞ்சனை எனப் பல விடயங்களைக் கிண்டலும் கேலியுமாகச் சொல்லி இருக்கிறார். பாத்திரங்களை உருவாக்குவதில் ஒரு எழுத்தாளனுக்கு இருக்கும் சுதந்திரத்தில் யாரும் தலையிடக்கூடாது என்பது எனது கருத்து. குறிப்பிட்ட அத்தொடரில் ஜே.கே. ஒரு சமுதாயத்தின் தலைமைப் பிரஜைகளின் பொய்மையை வெளிப்படுத்த எங்களையெல்லாம் குறிப்பால் பயன்படுத்தி இருக்கிறார். பெயர் மாற்றங்கள் செய்திருந்தாலும் கற்பனைப் பாத்திரங்களில் யதார்த்தப் பாத்திரங்கள் இனம் காணப்படுவது உண்மையே. நாங்கள் மட்டும் தெய்வப் பிறவிகளா என்ன? சமுதாய மனிதர்களாய் எங்களை மற்றவர்கள் அடையாளப்படுத்தி இருந்தாலும் நாங்களும் தேவகுமாரர்கள் அல்லர். மனிதர்கள் தான். எங்களிலும் குறைகள் இல்லாமலா இருக்கப் போகிறது. ஜே.கே. எங்களில் பொய்ம்மைக் கூறுகளைக் கண்டிருக்கலாம். அது அவரின் சுதந்திரம். மற்றும் படிக்கு அதில் கொந்தளிக்க வேறொன்றும் இல்லை. என் கட்டுரைகளில் மற்றவர்களைப் பற்றி நான் செய்யாத கிண்டலா? இதெல்லாம் இலக்கியத்தில் சகஜமப்பா.

இனத்தை அடையாளப்படுத்துகிற ஆற்றல்மிக்க நல்ல ஒரு எழுத்தாளனை தட்டிக் கொடுக்கவேண்டுமே தவிர, தட்டி விழுத்தக் கூடாது. 'வெல்டன் ஜே.கே'! ஆற்றல் மிக்க உங்கள் பணி தொடரட்டும்.

**சல்லடையாரின் சலிப்பு * மனதைத் தொடுகின்ற பெருந்தன்மை.**

**6. உரலார் கேள்வி:-** எழுத்தாளர் சிவசங்கரியின் பேட்டி பற்றி அவ்வளவு புகழ்ந்து எழுதியிருந்தீர்களே. தமிழ்நாட்டில் இருந்து ஏதாவது 'றியாக்ஷன்' வந்ததா?

**உலக்கையார் பதில்:-** அதை ஏன் கேட்கிறீர்கள்? ஒரு மாலைப் பொழுதில் என்னைத் தொலைபேசி அழைத்தது. யாராய் இருக்குமெனச் சற்றுச் சலிப்போடு அதனைக் கையில் எடுக்க, மறுமுனையில் 'ஐயா, நான் சிவசங்கரி பேசுகிறேன்' என்ற குரல் கேட்டதும் நான் என்னை மறந்தேன். கனவா?, நனவா? என ஒரு சிறு ஐயம். நனவுதான் எனத்; தெரிய, நான் அடைந்த மகிழ்ச்சிக்கு ஓர் அளவேயில்லை.

அவரது பேட்டியை நான் புகழ்ந்தது போக, எனது பதிலை அவர் புகழ்ந்தார். கண்ணீரோடு என் பதிலைப் படித்ததாய் அவர் சொன்னபோது, மிகப்பெரிய பட்டம் பெற்றதாய் உணர்ந்து நெகிழ்ந்தேன். அவரை நான் புகழ்வது அவர் அறிவுக்கான பாராட்டு. அவர் என்னைப் புகழ்வது அவரின் அன்பிற்கான அடையாளம்.

என் பேச்சுக்களை எல்லாம் கேட்பதாய் அவர் சொன்னபோது, வான்வரையும் என் மனம் துள்ளிற்று. இந்தியப் பேச்சாளர் வக்கீல் சுமதி, எங்கள் கழக வாசுவின் 'வாட்சப்' பின் ஊடாக அப் பதிலைப் பார்த்து, அதனை அம்மையாருக்கு அனுப்பிவைத்திருக்கிறார். அதைப் படித்து நெகிழ்ந்து, தான் அதனை 'பாண்டேக்கு' அனுப்பி வைத்திருப்பதாக அம்மையார் சொன்னார். அவர் என்னை, ஐயா என்று அழைத்துப் பேச, பெரிதும் நாணமுற்றேன். 'தம்பி' என்று என்னை அழையுங்கள் என நான் வேண்டிக் கொள்ள சம்மதித்தார்.

சென்னைக் கம்பன் கழக விழா ஒன்றில், அம்மையாருக்கும், எனக்கும் ஒருமுறை ஒன்றாக விருது அளித்தார்கள். அப்போது அம்மையாரின் பெருமை எனக்குத் தெரியவில்லை. பாண்டேயின் பேட்டிதான் அம்மையாரின் உண்மைத் தரிசனத்தைத் தந்தது. அம்மையாரோடு பேசிய அந்த நாள் என் வாழ்நாளில் மறக்க முடியாத மகிழ்ச்சி நாட்களில் ஒன்றாயிற்று.

**சல்லடையாரின் சலிப்பு * சந்தேகம் இல்லை. மகிழவேண்டிய நாள்தான்.**

**7. உரலார் கேள்வி:-** உங்கள் கழகத்தின் இசைவேள்விகளில் தவறாது கலந்துகொள்ளும் பாடகி, பம்பாய் ஜெயஸ்ரீ அவர்கள், கச்சேரிக்கு இலண்டன் சென்ற இடத்தில் கடும் நோய்க்கு ஆளாகியதாய் அறிந்தோம். அவர் பற்றிய உங்கள் எண்ணங்களையும் அவர் உடல்நலம் பற்றிய விபரத்தையும் பதிவு செய்யுங்களேன்.

**உலக்கையார் பதில்:-** 2002ஆம் ஆண்டில் நடந்த எமது விழா ஒன்றில் முதல்முறையாக அவர் கலந்துகொண்டார். அப்பொழுது இங்கு கடுமையாய்ப் போர் நடந்துகொண்டிருந்தது. விமான நிலையம் முழுவதும் இராணுவ மயமாகியிருந்தது. அந்த நிலையில் அவர் வருவாரோ, மாட்டாரோ என நாங்களே ஐயப்பட்டிருந்தோம். ஆனால் எந்தவித தயக்கமும் இன்றித் துணிவாகத் தனியே அவர் இங்கு வந்து இறங்கினார். ஆச்சரியப்பட்டுப் போனோம். இந்தப் போர்மண்ணுக்குத் துணிவாக வந்து சேர்ந்த அவரையும், துணிவாக அவரை அனுப்பிவைத்த அவர்; குடும்பத்தாரையும் எங்களால் என்றும் மறக்க முடியாது.

ஜெயஸ்ரீயின் பாடல் சிறப்புப் பற்றி நான் சொல்லத் தேவையில்லை. அவர் எங்கள்மேல் காட்டிய அன்பைப் பற்றித்தான் நான் சொல்லவேண்டும். ஏதோ முற்பிறப்புத் தொடர்பான அன்பு அது. இங்கு வந்ததும் அவர் என்னை அண்ணா! என்று அழைப்பதும், வீழ்ந்து நமஸ்காரம் செய்வதும் அவரது பெருமைக்காம் அடையாளங்கள். அண்ணா! என்று அவர் அழைக்கையில் என் உயிர் உருகிப்போய்விடும். அந்த அழைப்பில்; துளியளவேனும் பொய்மை இருக்காது. அவரது பேச்சே சங்கீதமாய் இனிக்கும்;. அவரது பேச்சு, செயல் அனைத்திலும் நாகரீகத்தின் உச்சந் தொடும் பண்பு வெளிப்படும். இப்படி ஒரு உயர் பிறவியா? என அவரைக் காணும் போதெல்லாம் நினைந்து வியப்பேன்.

பின் நாட்களில் முக்கிய கலைஞர்களையெல்லாம் வருவித்து எங்கள் இசை வேள்வியின் பெருமையை உயர்த்திவைத்தவர் அவர்தான். எங்கிருந்தாலும் மாதம் ஓரிரு தடவை தொலைபேசியில் அன்பொழுகப் பேசுவார். நோய்வாய்ப்படுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்புகூட லண்டனிலிருந்து பேசினார். அங்கிருந்தும் எங்களுக்காகச் சில காரியங்களைச் செய்தார்.

இவ்வாண்டுக்கான 'சங்கீத கலாநிதி' விருது பெற்றமையைப் பாராட்டி நான் கவிதை எழுதி முடிந்த கையோடு, திடீரென அவர் நோய்வாய்ப்பட்ட செய்தி வர நடுநடுங்கிப்போனேன். இரண்டுநாட்களாக என் இடக்கண் துடித்தபடியே இருந்தது. (நம்பவா போகிறீர்கள்). ஏற்கனவே ஒரு தங்கையை இழந்தவன் நான். இப்போது இந்தத் தங்கையையாவது மீட்டுத்தந்து விடு என வருந்தி வேண்டினேன். என் மாணவர்களையும் வேண்டச் சொன்னேன். எங்கள் வேண்டுதல்கள் பலித்தது. தற்போது அவர் நலமடைந்து வருவதாய் அறிகிறேன். மிக விரைவில் மேடையேறி அவர் பாடுவதை நாம் கேட்கவேண்டுமென எல்லோரும் வேண்டிக் கொள்ளுங்கள்.

**சல்லடையாரின் சலிப்பு * இசை கேட்டு இனித்த ஈழத்தார் நெஞ்சமெலாம் நிச்சயம் பிரார்த்திக்கும்.**



காலைக்கதிர் Kalaikkathir

# மத அரசியலுக்கு இனச் சாயம்

**அக்கரை / அக்கறை அலசல்**



**என்.சத்தியமூர்த்தி**

அண்மையில், கச்ச தீவு புனித அந்தோணியார் ஆலயத்தின் அருகில் திடீரென சிறிதாக ஒரு புத்தர் சிலையும், அதன் மேல் சிறிதாகவே ஒரு கூரை மற்றும் பௌத்த மதத்தினரின் சின்னமான அரச மரமும் தோன்றி உள்ளது குறித்து செய்திகள் வெளியாயின. அந்தோணியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவில் பங்கெடுக்கச் சென்ற மீனவர்களே மேற்படி விவரங்களை சமூக வலைதளங்களில் பரவ விட்டனர்.

இதில் வரவேற்க தக்க விடயம் என்னவென்றால், அவ்வாறு புத்தர் சிலையே இல்லை என்றோ, அல்லது அந்தோணியார் ஆலயத்திற்கு பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரே அங்கு ஒரு புத்தர் சிலையோ அல்லது வேறு ஏதாவது பௌத்த மத சின்னங்களோ இருந்ததாகவோ யாரும் இது வரை கூறவில்லை. கடந்த ஆண்டு, கச்சதீவு திருவிழாவிற்கு சென்று திரும்பிய தமிழ் கிறிஸ்தவ மீனவர்கள், அவ்வாறு ஒரு சிலையை பார்த்ததாகக் கூறவில்லை.

இந்த பின்னணியில், புத்தர் சிலை நிறுவும் நிகழ்வு, கடந்த வருட மார்ச் மாதத்திற்கும் தற்போதைக்கும் இடையேயான காலகட்டத்திலேயே நிகழ்ந்தேறி உள்ளது. அப்போது ஆட்சியில் இருந்தது, ஜனாதிபதி கோட்டாபயவா அல்லது தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவா என்ற கேள்வியும் எழுகிறது.

### இனப்பிரச்சினைக்கு அப்பால்

கச்சதீவைப் பாதுகாத்து, அந்தோணியார் ஆலயத்தை பராமரித்து வரும் கடற்படை, தங்களது வீரர்கள் வழிபடுவதற்காகவே அந்த புத்தர் சிலையை அங்கு நிறுவி உள்ளதாக தெரிவித்துள்ளது. மற்றபடி, அங்கு வேறு எந்தவொரு பௌத்த விகாரையோ அல்லது மத சின்னங்களோ நிறுவப்படாது என்றும் உறுதி அளித்துள்ளது.

அதேசமயம், கச்சதீவில் புத்தர் சிலை நிறுவிய கடற்படை வீரர்கள், தங்களது தலைமையகத்திடம் முன் அனுமதி பெற்றார்களா? அதுபோன்றே, கடற்படை தலைமையகம், பாதுகாப்பு மற்றும் அயல்நாட்டு அமைச்சகங்களின் அனுமதியை பெற்றார்களா?

இது போன்ற கேள்விகள், இனப்பிரச்சினையை மட்டும் குறித்த விடயமல்ல. அதற்கும் அப்பால் சென்று, கச்சதீவு உரிமை குறித்த பிரச்சினையில் இந்திய அரசு இலங்கைக்கு எதிராக செயல்படாதமை குறித்த நல்லெண்ணத்தை முன்னெடுக்கவேண்டிய சமகால கட்டாயமும்கூட முக்கியம் பெற்றது. என்றாலும், வடக்கிலும் கிழக்கிலும், குறிப்பாக கடந்த மூன்று – நான்கு ஆண்டுகளில் இராணுவத்தினரும், அரசின் தொல்பொருள் திணைகளமும், முழு மூச்சுடன் தமிழ் இந்துக்களின் கோவில்களையும் பிற சின்னங்களையும் அழித்தொழிக்கும் பின்னணியில், கச்சதீவு புத்தர் சிலை விவகாரம், ஒரு தனிப்பட்ட சம்பவமே என்று ஏற்றுக்கொள்வது கடினமான விடயமே.

### சிலை திருட்டு

அண்மையில் வவுனியா மாவட்டம், வெடுக்குநாறி ஆதி லிங்கம் ஆலயத்தில் அடித்தழிக்கப்பட்ட தெய்வ சிலைகள் குறித்து மக்கள் போராட்டம் நடத்துகின்றனர். இதற்கும் அப்பால் சென்று, தொல்பொருள் திணைக்களத்திற்கு எதிராக வழக்கு தொடுக்கப் போவதாக சுமந்திரன் கூறியுள்ளார்.

அதேசமயம், அந்த சிலைகளை கிறிஸ்தவ மதத்தினரே உடைத்தனர் என்று அமைச்சர் கூறியதாக சமூக வலைதளங்கள் கூறுகின்றன. இதன் உண்மைத் தன்மை கண்டறியப்படவேண்டும். அதேநேரம், அமைச்சர் அவ்வாறு கூறியிருந்தால், தன்னிடம் உள்ள செய்தியை பொலீஸாருடன் மட்டுமே அவர் பகர்ந்திருக்கவேண்டும்.

அதேசமயம், இனியாவது, இந்த அரசாவது, தமிழ் மற்றும் பௌத்தர் அல்லாத பிற மதத்தினரது உணர்வுகளை மதித்து நடக்கவேண்டும் என்று அரச உத்தரவாகவே படையினருக்கும், பிற அரச ஊழியர்களுக்கும் உத்தரவு கொடுத்தால், அதுவே முதல் வெற்றி. தொடர்ந்து, அந்த உத்தரவுகளை மீறும் அதிகாரிகளுக்கு உரிய தண்டனை கொடுத்தால் மட்டுமே, இந்த மதவெறி அடங்கும். அல்லது, அதற்கான வழி பிறக்கும் வாயப்பாவது ஏற்படும்.

இதில், மத உணர்வுகளுக்கு அப்பால், மக்கள் மற்றும் பொது ஆர்வலர்கள் செய்ய வேண்டிய விடயம் ஒன்றுள்ளது. உண்மையிலேயே அனைத்து கடவுளர் சிலைகளும் சின்னாபின்னப்படுத்தப்பட்டுளனவா, அல்லது வேறு ஏதாவது நடந்திருக்கும் வாய்ப்பு இருக்கிறதா? அதாவது, ஒரு சில சிலைகளை மட்டும் உடைத்து விட்டு, பிறவற்றை, நாட்டை விட்டே கடத்தி விற்பனை செய்கிறார்களா, என்றும் அவர்கள் கணக்கெடுக்கவேண்டும்.

அவ்வாறு சிலை திருட்டு சம்பவங்கள் ஏற்பட்டுள்ளன என்றால் அதில், தொல்பொருள் திணைகளத்தின் ஊழியர்களே கூட்டாளிகளாக இருக்கலாம். அல்லது, அவர்கள் மீது பழி விழும் விதமாக, சிலை திருடர்கள் செயலாற்றி இருக்கலாம். இவ்வாறு கூறுவதால் எல்லாம், சிலை திருட்டு நடைபெறுகிறது என்பதல்ல பொருள். ஆனால், சிலை திருட்டு நடைபெறவில்லை என்பதை உறுதி செய்யவேண்டும் என்பது அவசியம்.

காரணம், இலங்கையில் கடற்தொழிலை போலவே கடத்தல் தொழிலும் முக்கியமான ஒன்று என்ற நிலைமை தோன்றி கன காலம் ஆகிவிட்டது. அண்டை நாடான இந்தியாவில், குறிப்பாக தமிழ் நாட்டில், கோவில் சிலைகள் திருடப்படுவதும், தசாம்சங்களுக்கு பின்னர் அவை அமெரிக்கா, அவுஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இருந்து, திரும்பி பெறப்படுவதும் ஒரு வழக்கமாகவே ஆகிவிட்டது. தமிழ் நாட்டு பொலீஸில் சிலை திருட்டு வழக்குகளை வெளி நாடுகளுக்கு சென்று விசாரிப்பதற்காக, உயர் அதிகாரி தலைமையில் தனியாக ஒரு பிரிவே உள்ளது.

இவ்வாறு, குறிப்பாக தமிழ் நாட்டில் இருந்து மட்டுமே நூறாண்டுகள் பழமையில் திருடப்படும் பல சிலைகளும் உலோகத்தால் ஆனவை. என்றாலும், பலநூறாண்டு பழமை உள்ள கற்சிலைகளும் இவ்வாறு திருடப்பட்டு, மேலை நாடுகளில் உள்ள பொது மற்றும் தனியார் அருங்காட்சியகங்களுக்கு மில்லியன்களுக்கு விற்கப்படுகின்றன.

### பிரசங்கம், பிரச்சாரம்

அண்மையில் பாலாலி விமான நிலையத்தில் வந்திறங்கிய, சென்னையை சேர்ந்த கிறிஸ்தவ மத போதகர், திரும்பி அனுப்பப்பட்ட நிகழ்வின் பின்னால், சில சைவ அமைப்புகளும் இருந்ததாக செய்திகள் தெரிவித்தன. அவரது வருகையை எதிர்த்து அவர்கள் சுவரொட்டி பிரச்சாரங்களையும் மேற்கொண்டார்கள்.

அவர்களது எதிர்ப்பு காரணமாக மதபோதகர் திரும்பி அனுப்பபட்டாரா, அல்லது, முன்னர் அவர் கொழும்பு மற்றும் கண்டி நகரங்களில் மேற்கொண்ட மத பிரச்சங்கங்களுக்காக வெளியேற்றப்பட்டாரா, என்பது தெரியவில்லை. இதில் குறிப்பிடத்தக்க அம்சங்கள் உள்ளன.

பிரசங்கம் வேறு. பிரச்சாரம் வேறு. இலங்கையில், குறிப்பாக, கொழும்பு, சுற்றுவட்டாரம் மற்றும் யாழ்பாணத்தில் அதிக எண்ணிக்கையில் தமிழ் மற்றும் ஆங்கிலம் பேசும் கிறிஸ்தவர்களும் வாழ்கிறார்கள். அவர்களிடையே அந்த மதத்தை சார்ந்த போதகர்கள் பிரசங்கம் செய்வது ஒன்று.

அதற்கு அப்பால், தங்களது மதமே சிறந்தது, உயர்ந்தது, என்று பிற மதத்தவர்களிடையே பிரச்சாரம் செய்து, அவர்களை மதமாற்றம் செய்வதற்கு முயல்வது என்பது வேறு. இதுவே, இலங்கையில், இந்தியா மற்றும் பிற நாடுகளில் இருந்து வந்து இஸ்லாமிய மதபோதகர்களுக்கும் பொருந்தும்.

இது நிச்சயமாக நிறுத்தப்படவேண்டும். அவசியமென்றால், தண்டிக்கப்படவும் வேண்டும். அதே சமயம், மதபோதகர்கள் தங்களுடைய மதத்தவரி டையே தங்களது மதம் குறித்து பிரசங்கம் செய்வதை தடைசெய்யவதோ, அல்லது தடைசெய்வதற்கு கோருவதோ, ஏற்புடையது அல்ல.

இதை இப்படியே தொடரவிட்டால், நாளை, சைவர்கள் மற்றும் பிற இந்து மத பிரிவினர் குறைந்த அளவில் வாழும் பகுதிகளில் அவர்களுடைய கோவில்களும், அவற்றில் விழாக்களும், அவை சார்ந்த மத பிரச்சங்கங்களும்கூட தடைசெய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழலாம். அதுவே கூட, தமிழ் பேசும் மக்களிடையே இப்பொழுது புகைந்து கொண்டிருக்கும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதாக அமையலாம்.

### குண்டுசட்டிக்குள்...

இதில் பிரச்சினையே, யாழ்பாணத்தில் சைவம் மற்றும் இந்து மதத்தின் பெயரால், பிரச்சினை செய்ய நினைப்போர்கள், குண்டு சட்டிக்குள் இன்னமும் குதிரை ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். தமிழர்களுக்கும், அவர்களது மொழிக்கும், கலாச்சாரத்திற்கும், பௌத்த பேரினவாதிகளிடம் இருந்து சம உரிமை மற்றும் சம அந்தஸ்து கோரும் இவர்கள், அதே இடத்தை தங்கள் மத்தியில் வாழும் பிற சமூகத்தினருக்கு ஏன் தருவதில்லை? இவ்வாறு தானே, கடந்த 1990ஆம் ஆண்டு, விடுதலை புலிகள் அமைப்பு. வடக்கு மாகாணத்தில் தமிழ் பேசும் முஸ்லீம் சகோதரர்களை, துரோகிகள் என்று முத்திரை குத்தி, ஓரே நாளில் துரத்தியது?

### சரியா, தவறா?

தந்தை செல்வா காலம் தொடங்கி, தமிழர் பிரச்சினை என்பது, மதங்களைக் கடந்த இனப்பிரச்சினையாகவே இருந்து வந்துள்ளது. ஒரு காலகட்டம் வரை, தமிழ் பேசும் பௌத்தர்களும் வட மாகாணத்திலும் வாழ்ந்து வந்திருக்கிறார்கள்.

இன்னும் சொல்லப்போனால், தமிழ் நாட்டில், கடந்த ஏழாம் நூற்றாண்டில் தொடங்கிய இந்து மத மறுமலர்ச்சியின் காரணமாக, அங்கே தழைத்திருந்த பௌத்தம் மற்றும் சமண மதங்கள் குறுகி, பெரும்பாலான பௌத்தர்கள் இலங்கையில் தஞ்சம் அடைந்தார்கள் என்பது வரலாறு. இவ்வாறான பின்னணியில், சைவம் சார்ந்த இந்து மத கோவில்களை பௌத்த மதத்தினர் திட்டமிட்டு தகர்க்கிறார்கள் என்று கூறிவருவோர், அதே தவறை தாங்களே வேறு ஒரு விதத்தில் செய்து வருகிறார்கள்.

அதாவது, தமிழர்கள் என்றால் சைவர்கள், சைவர்கள் என்றால் தமிழர்கள் என்ற குறுகிய வட்டத்தில் இன உணர்வை அடக்கப் பார்க்கிறார்கள். இளைய தலைமுறையினர் மத்தியில், தமிழின் பெயரால் மதம் என்ற விச வித்தை விதைக்கிறார்கள்.

இதன் காரணமாகத் தானோ என்னவோ, யாழ்பாணத்தின் மையத்தில் தமிழ் முனிவர் திருவள்ளுவருக்கு புதிதாக நிறுவப்பட்ட சிலையில் திருநீறு அணிவித்தது சரியா, தவறா, என்ற பட்டிமன்றம் சமூக வலைதளங்களில் இன்னமும் தொடர்கிறது. இதே விவாதம் அவ்வப்போது, தமிழ் நாட்டிலும் தோன்றி மறைகிறது.

ஆனால், இலங்கைத் தமிழர்களிடையே உள்ள இனப்பிரச்சினை, தமிழ் நாட்டில் இல்லை. அதன் காரணமாக, மதத்தையும் இனத்தையும் மொழி வழியாகவே காண வேண்டும் என்ற கட்டாயமும் அங்கு இல்லை.

இன்னும் சொல்லப்போனால், கொல்லாமை, புலால் உண்ணாமை, போன்ற அதிகார தலைப்புகளையும், அதேபோன்று ‘அகர முதல எழுத்தெல்லாம்..’ என்ற முதல் குறளின் அடிப்படையிலும், திருவள்ளுவர் சமண மதத்தை சார்ந்தவர் என்ற ஒரு கருத்தும் தமிழ் நாட்டில் கடந்த நூறாண்டுகளாக நிலவுகிறது.

திருவள்ளுவர் மட்டுமல்ல, கலிங்கத்து பரணி பாடிய ஜெயங்கொண்டார், நன்னூல் என்ற இலங்கண நூலை எழுதிய பவணந்தி முனிவரும் கூட சமண சமயத்தை சார்ந்தவர்கள். அந்த வகையில், மயிலை சீனி வெங்கடசாமி எழுதிய ‘சமணமும் தமிழும்’ என்ற நூலை பிரசுரித்தவர்கள், சென்னையை சேர்ந்த சைவசிந்தாந்த நூற்பதிப்பு கழகத்தார். அதாவது, சைவ சமயத்தினர், தமிழின் பெயரால் சமணத்தையும் மதித்தனர்!

காலைக்கதிர் Kalaikkathir

# புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை உயர்நீதிமன்றில் சவாலுக்குட்படுத்துவோம்

## ஜி.எல்.பீரிஸ் திட்டவட்டம்



நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை காட்டிலும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள உத்தேச புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் அபாயகரமானது.

ஜனநாயகம், மனித உரிமை ஆகிய அடிப் படை அம்சங்களுக்கு எதி ரான விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆகவே, பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட-மூலத்தை உயர் நீதிமன்றில் சவாலுக்குட்படுத்துவோம்என நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தலைமையிலான அரசாங்கத்தின் முதலாவது அமைச்சரவை கூட்டத்தில் ஊழல் ஒழிப்பு சட்டமூலத்தை நீதி மற்றும் அரசமைப்பு அமைச்சர் என்ற ரீதியில் சமர்ப்பித்தேன்.

நாடு வங்குரோத்து நிலையை அடைவதற்கு நிதி மோசடி பிரதான காரணியாக உள்ளது.

ஊழல் ஒழிப்புக்கு எதிராக பல சட்டங்கள் நாட்டில் உள்ளன. ஆனால், அந்த சட்டங்கள் முறையாக செயற்படுத்தப்படுகின்றனவா என்பது பிரச்சினைக்குரியதாக உள்ளது.

நாட்டுநலனுக்காக இயற்றப்பட்ட சட்டங்கள் முறையாக செயற்படுத்தப்பட்டால் எந்த பிரச்சினையும் தோற்றம் பெறா.

நாட்டில் சுயாதீன ஆணைக்குழு என்பதொன்று கிடையாது. சுயாதீனம் என்பது பெயரளவில் மாத்திரம் குறிப்பிடப்படுகிறது. இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக, தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவை குறிப்பிட வேண்டும்.

அரசமைப்பின் 17 ஆவது திருத்தத்தில் சுயாதீன தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அறிமுகப்படுத்தப்பட்டு, 21 ஆவது திருத்தம் வரை தொடர்கிறது.

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு சுயாதீனம் இல்லை என்பது நடைமுறை நிலைவரங்கள் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எப்போது நடக்கும் என்று குறிப்பிட முடியாத அளவுக்கு தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கி நடைமுறைக்கு சாத்தியமான வகையில் தேசிய பாதுகாப்புச் சட்டத்தை உருவாக்குமாறு சர்வதேசம் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்ற நிலையில், மீண்டும் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் வகையில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பான வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை காட்டிலும் இந்த பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் மிகவும் பாரதூரமானது. ஜனநாயகம், மனித உரிமைகள் ஆகிய அடிப்படை அம்சங்களுக்கு எதிரான விடயங்களை மாத்திரம் கொண்டுள்ளது.

அரசாங்கத்துக்கு எதிராக நாட்டு மக்கள் போராட்டங்களில் ஈடுபட முடியாது. நாட்டின் இறையாண்மைக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுவது பயங்கரவாத செயற்பாடாகக் கருதப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இறையாண்மை என்ற பதத்துக்குள் உள்ளடங்கும் விடயங்கள் தொடர்பில் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை.

அரசாங்கம் கருதும் அனைத்து விடயங்களும் இறையாண்மைக்குள் உள்வாங்கப்படலாம். இது மிகவும் பாரதூரமானது. அரசாங்கத்துக்கு எதிராக செய்தி வெளியிடும் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் பயங்கரவாதிகளாகச் சித்திரிக்கப்படுவார்கள்.

நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைதுசெய்யப்படும் ஒருவருக்கு எதிராக தடுப்புக்காவல் உத்தரவு பிறப்பிக்கும் அதிகாரம் பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதிக்கு உண்டு. ஆனால், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தில் இந்த அதிகாரம் மாகாண பிரதி பொலிஸ்மா அதிபருக்கு வழங்கப்படவுள்ளது.

நாட்டின் பொலிஸ் சேவை தொடர்பில் மக்கள் அதிருப்தியடைந்துள்ளார்கள். மறுபுறம், பொலிஸ் உயர் அதிகாரிகள் தொடர்பில் பாரிய மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் காணப்படுகின்றன. ஆகவே, தடுப்புக் காவல் பிறப்பிக்கும் அதிகாரம் பொலிஸாருக்கு வழங்குவது சிறந்த அறிகுறியாக அமையாது.

நாட்டு மக்களின் ஜனநாயகத்தை முழுமையாக இல்லாதொழிக்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை உயர் நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்துவோம்.

பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீள்வதற்காக கடினமான தீர்மானங்களை செயற்படுத்துகிறோம் என குறிப்பிட்டுக்கொண்டு அரசாங்கம் முன்னெடுக்கும் ஜனநாயகத்துக்கு எதிரான செயற்பாடுகளுக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. - என்றார்.

# பிராந்திய இணைப்பை மேம்படுத்த இலங்கையுடன் கூட்டு ஒத்துழைப்பு

## இந்திய ஜப்பான் தூதர்கள் கருத்து

இலங்கைக்கான இந்திய ஜப்பான் தூதுவர்கள் பிராந்திய இணைப்பை மேம்படுத்துவதற்காக இலங்கையுடன் கூட்டு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ளனர்.

பாத்பைன்டர் மன்றம் தொகுத்துள்ள அறிக்கையை வெளியிட்டு வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையில் இந்திய - ஜப்பான் தூதுவர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவும் ஜப்பானும் அமைதியான முற்போக்கான வளமான இந்தோபசுபிக் குறித்து பரந்துபட்ட நலன்களை பகிர்ந்துகொள்கின்றன என இலங்கைக்கான இந்தியத் தூதுவர் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.

ஜப்பான் பிரதமர் சமீபத்தில் இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டு சுதந்திரமான வெளிப்படையான இந்தோபசுபிக்கிற்கான தனது நோக்கத்தை வெளிப்படுத்தினார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐஆர்ஓஏ அமைப்பில் இந்தியா முக்கியமான தொரு நாடு என்பதை வலியுறுத்தியுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் இங்குள்ள மக்களின் செழிப்பிற்காகவும் அனைத்து தரப்பினரினதும் நன்மைக்காகவும் இந்தியா - ஜப்பான் இலங்கை இணைந்து செயற்படுவதற்கான பல வாய்ப்புகள் உள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது இலங்கையின் முன்னுரிமைகளின் அடிப்படையில் காணப்படவேண்டும் என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் வெளியுறவுக்கொள்கையின் மூன்று முக்கியமான தூண்களின் சங்கமத்தில் இலங்கை உள்ளது என இந்திய உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடங்களில் ஜப்பானும் இந்தியாவும் பிராந்தியத்தில் சாதகமான தாக்கத்தை செலுத்தியுள்ளன என இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோசி ஹிடியாகி தெரிவித்துள்ளார்.

இரண்டு நாடுகளும் இலங்கை உட்பட பிராந்தியத்துக்கு எவ்வாறு நன்மைகளை கொண்டுவரமுடியும் என்பதை வெளிப்படுத்துவதற்கு இணைப்பு சிறந்த விடயமாகும் எனக் கருது-வதாகத் தெரிவித்துள்ள ஜப்பான் தூதுவர், இந்த நோக்கத்துக்காக பிராந்தியத்தில் உள்ள நாடுகளின் முன்னோக்கு நுண்ணறிவு மேலும் முக்கியமானது. இந்த அறிக்கை அதனை துல்லியமாக குறிக்கின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

ஜப்பான் பிரதமரின் இந்திய விஜயத்தின் போது இரு நாடுகளின் தலைவர்களும் இலங்கையுடனான ஒத்துழைப்பு தொடர்பாகக் கருத்து பரிமாறிக்கொண்டனர் இலங்கையின் கடன் விவகாரம் உட்பட அனைத்து விடயங்களிலும் நெருக்கமாக இணைந்து செயற்பட இணங்கினார்கள் எனவும் ஜப்பான் தூதுவர் தெரிவித்துள்ளார்.

கடன் விவகாரத்தைப் பொறுத்தவரை மார்ச் 20 ஆம் திகதி சர்வதேச நாணயநிதியம் இலங்கைக்கு நிதி உதவி வழங்க இணங்கியது. இலங்கையின் பொருளாதாரத்துக்கு புத்துயிர் கொடுப்பதற்கு இது மிக முக்கியமான நடவடிக்கை எனவும் ஜப்பான் தூதுவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் நிதி உத்தரவாதம் குறித்த கடிதத்தை ஜப்பான் பாராட்டுகின்றது எனவும் தெரிவித்துள்ள ஜப்பான் தூதுவர், இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு இந்தியாவும் ஜப்பானும் தொடர்ந்தும் பங்களிப்பு செய்யும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# சர்வதேச சமூகத்தை ஏமாற்றவே இலங்கை அரசின் உண்மை நல்லிணக்க ஆணைக்குழு உருவாக்கம்

## பிரித்தானிய தமிழர் பேரவை காட்டம்

பலதசாப்த காலமாக தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் ஒடுக்குமுறைகளுக்குத் தீர்வைக் காண்பதற்கு தென்னாபிரிக்கா பாணியிலான உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் மாதிரியை பயன்படுத்த இலங்கை அவசரப்படுவது சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் ஒரு முயற்சி என பிரித்தானிய தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

தமிழ்மக்களின் இனப்படுகொலை யுத்தக் குற்றங்கள் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் செயற்பாடுகள் மிக முக்கியமான கட்டத்தை அடைந்துகொண்டிருக்கும் தருணத்தில் இலங்கை தென்னாபிரிக்க பாணியை பின்பற்ற முயல்கின்றது எனவும் பிரித்தானிய தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

தென்னாபிரிக்க பாணியை இலங்கை பின்பற்றினால் பாரிய மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களுக்கு தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படுவதை இலங்கை மேலும் பல வருடங்களுக்குத் தொடரமுடியும் எனவும் பிரித்தானிய தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

இலங்கையின் அரசியல் வரலாற்றை அறிந்தவர்களுக்கு குறிப்பாக சீருடை மற்றும் காவி உடை அணிந்தவர்களின் குற்றங்களைப் பாதுகாக்கும் இலங்கை அரசாங்கத்தின் வரலாற்றை அறிந்தவர்களுக்கு இலங்கை அரசாங்கத்தின் இந்த வகையான சூழ்ச்சிகள் புதியவை அல்ல எனவும் பிரித்தானிய தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

இலங்கையின் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கும் கலாசாரம் மற்றும் பேரினவாத பௌத்த மத குருமாரைப் பாதுகாப்பது தொடர்பாக அதன் வரலாறு சுய விளக்கமளிக்கும் விதத்தில் காணப்படுகின்றது எனவும் பிரித்தானிய தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

இலங்கை தானாகவே உருவாக்கிக்கொண்ட பொருளாதார வீழ்ச்சி குறித்து உலகம் பெருமளவிற்கு அனுதாபம் கொண்டுள்ள போதிலும் இலங்கையின் தமிழ் மக்கள் பொருளாதாரம் கழுத்தை நெரித்தல் மற்றும் முன்கூட்டியே திட்டமிடப்பட்ட ஒடுக்குமுறை என்ற இரட்டைமுனை கொண்ட வாளை எதிர்கொள்கின்றனர் என்பதை சர்வதேச சமூகம் புரிந்துகொள்ளத் தவறிவிட்டது எனவும் பிரித்தானிய தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

இராணுவமயமாக்கல் (19 படையணிகளில் 16 படையணிகள் தமிழர் தாயாகத்திலேயே உள்ளன,) தமிழர் தொல்பொருள்கள் அழிக்கப்படுதல் வரலாற்று ரீதியாக இந்து கோவில்கள் காணப்படும் பகுதிகளில் பௌத்த ஆலயங்கள் பெருமளவில் ஏற்படுத்தப்படுதல், தமிழ் விவசாயிகளின் நிலங்கள் அபகரிக்கப்படுதல், தமிழ் மக்களின் வாழ்வாதாரம் ஸ்திரமிழக்க செய்யப்படுதல், தமிழ் மக்களை அவர்களின் தாயகத்திலேயே பகைத்தல், இலங்கையில் தமிழ் மக்கள் இன்னமும் எதிர்கொள்ளும் முடிவற்ற நெருக்கடிகளாகக் காணப்படுகின்றன என பிரித்தானிய தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

இவை அனைத்தும் இலங்கையின் பொருளாதார நெருக்கடி என்ற போர்வையின் கீழ் மூடிமறைக்கப்படுகின்றன எனவும் பிரித்தானிய தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கம் தனது தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படும் வரலாற்றை மூடி மறைப்பதற்காக ஆணைக்குழுக்களையும் விசாரணைகளையும் தனது தீமைகள் மறக்கப்பட்டு மறையும் வரை அதற்கான கால அவகாசத்தை பெறுவதற்காக பயன்படுத்தியுள்ளது எனவும் பிரித்தானிய தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

இதற்கு அப்பாலும் இலங்கையின் இரு அமைச்சர்கள் தென்னாபிரிக்காவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளனர். இலங்கை விவகாரத்துக்கு தீர்வைக் காண்பதற்கு தென்னாபிரிக்க பாணியை எவ்வாறு பயன்படுத்துவது என ஆராய்வதற்காகவே இந்த கற்றல் பயணம் என பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர் எனவும் பிரித்தானிய தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

அத்தகைய முயற்சி புரளியை தவிர வேறு இல்லை. சர்வதேச சமூகத்தைக் குறிப்பாக எதிர்வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் அமர்வுகளில் முக்கியமான முடிவுகளை எடுக்கப்போகும் நாடுகளை ஏமாற்றுவதற்கான முயற்சியே இது எனவும் பிரித்தானிய தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

# தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் நுரையீரல் பரிசோதனைப் பிரிவு திறப்பு

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் நுரையீரல் மற்றும் ஆஸ்துமா தொடர்பான சோதனைகளை மேற் கொள்வதற்கு உரிய பிரிவு இன்று (வெள்ளிக்கிழமை) திறந்துவைக்கப்பட்டது.

இந்தத் தொகுதியை சுவாச நோய் சிரேஷ்ட வைத்தியநிபுணர், யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கௌரி செல்வரட்ணமும் நன்கொடையாளர் சார்பில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன் புரிச் சங்க பொதுச்சபை உறுப்பினர், தொழிலதிபர் லயன் துரை பிரணவனும் இணைந்து திறந்துவைத்தனர்.

இந்த இயந்திரம் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தால் வழங்கப்பட்டு, அதனை முறையாகப் பொருத்திப் பாவிப்பதற்குரிய அதி சக்தி வலு கொண்ட கணிணி இயந்திரம் திணைக்களத்தால் வழங்கமுடியாத நிலை இருந்தது. இதனால் சத்திரசிகிச்சை மேற்கொள்ளவேண்டிய நோயாளர்கள், அவர்களின் நுரையீரல் தொடர்பான உடல் தரத்தைப் பரிசோதிப்பதற்கு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கே சென்று பரீட்சிக்கவேண்டிய அவலம் ஏற்பட்டது.

இந்த நிலை தொடர்பாக வைத்தியசாலையின் பொது வைத்திய நிபுணர்களால் நோயாளர் நலன்புரிச் சங்கத்தினரிடம் உதவி கோரப்பட்டது. இது தொடர்பில் ஆஸ்திரேலியாவில் வதியும் வைத்தியர் த.சொரூபனிடம்



நோயாளர் நலன்புரிச் சங்கம் வைத்தியசாலையின் இந்த நிலை தொடர்பில் எடுத்துரைத்தபோது, அவர் உடனடியாக அதற்குச் சம்மதித்து 2 லட்சத்து 82 ஆயிரத்து 200 ரூபாவுக்கு அதி சக்தி வலு கொண்ட கணிணி ஒன்றை நலன்புரிச்சங்கத்தின் ஊடாக வைத்தியசாலைக்கு அன்பளிப்புச் செய்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# காற்றின் தரம் குறித்த கண்காணிப்பு, அறிக்கையிடலுக்கு 3 லட்சம் யூரோவை மானியமாக வழங்குகிறது பிரான்ஸ்

இலங்கையில் காற்றின் தரத்தை மேம் படுத்தும் கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடலுக்கு ஆதரவளிக்கும் 3 லட்சம் பிரான்ஸ் யூரோ மானிய ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

பிரான்ஸ் அபிவிருத்தி முகவரகத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் எம்.ரெடா சொயுர்ஜி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் அனில்ஜாசிங்க ஆகியோரால், இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் ஜீன் பிரசென்ஸ் மற்றும் சுற்றாடல் துறை அமைச்சர் நசீர் அஹமட் முன்னிலையில் வியாழக்கிழமை இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவன அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் உள்ள பல முக்கிய நகரங்களைப் போலவே கொழும்பு மற்றும் கண்டி போன்ற நகரங்களுக்கும் காற்றுமாசுபாடு ஒரு முக்கியமான பிரச்சினையாக உள்ளது. டில்லி மற்றும் டாக்கா போன்ற சில பிராந்திய நகரங்களுடன் ஒப்பிடுகையில், இலங்கை இன்னும் சிறந்த காற்றின் தரக் குறியீட்டைக் கொண்டுள்ளது.

இருப்பினும், ஆண்டுதோறும் காற்றின் தரம் பாரிய பிரச்சினையாக மாறி வருகிறது என்பது தெளிவாகிறது. ஒவ்வொரு ஆண்டும், இலங்கை பருவகால காற்று மாசினால் பாதிக்கப்படுகிறது. குறிப்பாக இந்தியாவிலிருந்து வரும் தூய்மையற்ற காற்று மற்றும் உள்நாட்டு நடவடிக்கைகளால் இது அதிகரித்து வருகிறது.

இந்த ஆண்டில் நாட்டின் பல பகுதிகளில் காற்றின் தரம் ஆபத்தான நிலைகளை அடிக்கடி காண்பித்தன. கொவிட் - 19 பயணக் கட்டுப்பாடு மற்றும் 2022 இல் ஏற்பட்ட மிக சமீபத்திய எரிபொருள் நெருக்கடி ஆகிய வற்றின் காரணமாக நகர்ப்புறம் வாழ் மக்களுக்கு சிறந்த காற்றைக் சுவாசிப்பதற்கான அரிய வாய்ப்பு கிடைக்கப் பெற்றது.

காற்றின் தரம் ஒரு முக்கியமான அபிவிருத்தி குறிகாட்டியாகும். உண்மையில், காற்று மாசுபாடு அதிக பொருளாதார மற்றும் சமூக செலவுகளைக் கொண்டுள்ளது. நகர் புற மக்களின் நல்வாழ்வு மற்றும் வாழ்க்கைத் தரத்தில் ஒட்டுமொத்த தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

முதலாவதாக இது ஆஸ்துமா, நுரையீரல் நோய் மற்றும் பல்வேறு சுவாச நோய்களுக்கு வழிவகுக்கும் என்பதால் இது அதிக மனித செலவுடன் வருகிறது. இது சுகாதாரத் துறையில் பொருளாதாரச் சுமையை உருவாக்கி, பொது மக்களின் ஒட்டுமொத்த உற்பத்தித் திறனைக் குறைக்கிறது. நல்ல காற்றின் தரம் ஒரு நகரத்தின் கவர்ச்சியின் ஒரு முக்கிய குறிகாட்டியாகும்.

அந்த வகையிலேயே இலங்கையில் காற்றின் தரம் குறித்த கண்காணிப்பிற்கும், அது குறித்த அறிக்கையைத் தயாரிப்பதற்கும் மானிய உதவியை வழங்க பிரான்ஸ் முன்வந்துள்ளதாக சுற்றாடல் அமைச்சு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.04.2023இல் வெளியிடப்பெற்றது.

நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 05

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 17 வெள்ளிக்கிழமை 31.03.2023 கதிர் 14

## பஸ் கட்டணமும் திடீர் குறைப்பு



நாட்டில் இன்று முதல் பஸ் பயணக் கட்டணம் 12.09 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஆகக்குறைந்த பஸ் பயணக் கட்டணம் 4 ரூபாவால் குறைக்கப்படுகின்றது.

இதற்கமைய 34 ரூபா என்ற ஆகக் குறைந்த பஸ் பயணக் கட்டணம் 30 ரூபாவாகக் குறைவடைந்துள்ளது

## தேர்தல்கள் எப்போது நடக்கும்?

### அரசு நழுவல் பதில்



எதிர்வரும் நவம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான தீர்மானத்தை அரசு எடுக்கவில்லை. அதேவேளை, உள்ளூராட்சிசபைத்தேர்தல் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுதான் தீர்மானிக்க வேண்டும்.

இவ்வாறு நிதி இராஜாங்கஅமைச்சர்ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

தேர்தல்கள் தொடர்பில் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளும், அவர் வழங்கிய பதில்களும் வருமாறு:

கேள்வி:- நவம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறுமா?

பதில்:- அப்படியொரு தீர்மானத்தை நாம் எடுக்கவில்லை. அரசு முன்னுரிமை கொடுப்பது பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்குத்தான். இதை நாம் வேகமாகச் செய்து முடிப்போம்

கேள்வி:- நவம்பரில் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும் என்று 2

# 13 ஐ முழுமையாக அமுல்படுத்துங்கள்

## சந்திரிகா அம்மையார் வலியுறுத்து



அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தினார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார்.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் ஊடகங்கள் முன்னிலையில் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எனக்கு இன்று வயதாகிவிட்டது. இளம் வயது முதல் இன்றுவரை இனப்பிரச்சினை பற்றி கதைத்துக்கொண்டிருக்கின்றோம். அப்பிரச்சினைக்கு அரசமைப்பு ரீதியில் நிலையானதொரு தீர்வு அவசியம்.

வடக்கு, கிழக்கை அபிவிருத்தி செய்து, அப்பகுதியில் உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கினால் போதும், வேறொன்றும் அவசியமில்லை எனச் சிலர் கூறுகின்றனர். இது ஏற்புடைய கருத்து அல்ல. இவ்வாறான கருத்தை நம்ப வேண்டாம். 2

## அடுத்த தடவையும் 'மொட்டு' ஆட்சியே!

### அடித்துக் கூறுகின்றார் பஸில்



அடுத்த நாடாளுமன்றத் தேர்தலிலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவே வெற்றியடைந்து ஆட்சியமைக்கும்.

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ச தெரிவித்தார். 2

## ஜனாதிபதி உள்ளிட்ட சகல தரப்பினரும் சொத்து விபரத்தை வெளியிட வேண்டும்

### புதிய ஊழல் எதிர்ப்புச் சட்டமூலத்தில் ஏற்பாடு



இலங்கையில் சொத்து விபரங்களை வெளியிடுவது ஒரு சிலருக்கு விலக்களிக்கப்பட்டு வந்தது. எனினும், புதிய சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதி, மாகாண முதலமைச்சர்கள், ஆளுநர்கள், தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோரும் சொத்து விபரங்களை வெளியிட வேண்டும்.

இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

ஊழல்எதிர்ப்புச்சட்டமூலத்துக்குஅமைச்சரவை அனுமதிவழங்கியுள்ளது.

இந்தச் சட்டமூலம் முன்வைக்கப்பட வேண்டும் என்பது சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளில் ஒன்று. இந்நிலையில் இந்தச் சட்டமூலம் தொடர்பில் கருத்து வெளியிட்ட நீதி அமைச்சர் தெரிவித்ததாவது:

புதிய ஊழல் எதிர்ப்புச் சட்டத்துக்கான, சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. அது வர்த்தமானியில் வெளியிடப்படுவதற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. 2

## ஊழல் ஆட்சிக்கு முடிவுகட்டவே தனி அரசைக் கேட்கின்றோம்!

### ஜே.வி.பி. தெரிவிப்பு



ஊழல் அரசியல் கட்சிகளின் ஆட்சிக்கு முடிவு கட்டி நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லவே எம்மைத் தனி அரசாக நியமிக்குமாறு மக்களிடம் கேட்கின்றோம்.

- இவ்வாறு ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

'உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நீங்கள் வெற்றி பெற்றால் தனி அரசை உங்களால் அமைக்க முடியுமா?' என்ற கேள்விக்கு ஜே.வி.பியின் முக்கியஸ்தரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் நலிந்த ஜயதிஸ்ஸ பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் மக்களிடம் மீண்டும் மீண்டும் கேட்பது எம்மைத் தனி அரசாக நியமிக்குமாறுதான். சலுகைகள் கொடுத்து - இலஞ்சம் கொடுத்து ஆட்களை எம்முடன் சேர்த்து ஆட்சி அமைப்பதற்கு நாம் தயாரில்லை. எங்களுக்குப் பெரும்பான்மை ஆதரவு கிடைக்காவிட்டால் ஊழல் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து ஆட்சி அமைப்பார்கள். 2

## இலங்கையில் அதிகரிக்கும் சோம்பேறிகள்



இலங்கையில் உள்ளவர்களில் மூன்று பேரில் ஒருவர் சோம்பேறியாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று தொற்றா சுகாதார இயக்குநரகத்தின் சமூக விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் ஷெரின் பாலசிங்கம் தெரிவித்தார்.

மடிக்கணினி பாவனை, தொலைக்காட்சி பார்க்கும் பழக்கம், கைத்தொலைபேசிக்கு அடிமையாதல் போன்ற காரணங்களால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதனால், இதய நோய், சர்க்கரை நோய், குருதி அழுத்தம் போன்றவை ஏற்படும் அபாயம் உள்ளது என்றும், தினமும் உடற்பயிற்சி செய்ய ஒவ்வொருவரையும் ஊக்குவிப்பதன் மூலம் பல நோய்களைத் தடுக்க முடியும் என்றும் அவர் மேலும் கூறினார்.

## பன்னாட்டு நீதியே வேண்டும் உறவுகள் நேற்றுப் போராட்டம்



வலிந்துகாணாமலாக்கப்பட்ட வர்களின் உறவுகளின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் இன்று(31) கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் நல்லை ஆதீனத்துக்கு முன்னால் இந்தப் போராட்டம் இன்று முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்றது.

இதன்போது, வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கு இறப்புச் சான்றிதழ் வேண்டாம், இழப்பீடு வேண்டாம், காணாமலாக்கப்பட்டோர் அலுவலகம் வேண்டாம், சர்வதேசமே உரிய தீர்வு வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

## நாளை கலந்துரையாடல்

வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலயம் அழிக்கப்பட்டது தொடர்பாகவும் வடக்கு கிழக்கில் தமிழின அடையாளங்கள் அழிக்கப்படுவது தொடர்பாகவும் பெருமளவில் போராட்டங்களை முன்னெடுப்பதற்கான கலந்துரையாடல் ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியின் ஏற்பாட்டில் நாளை பிற்பகல் 3 மணிக்கு நடக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் அமைந்துள்ள தந்தை செல்வா அரங்கத்தில் கூட்டம் இடம்பெறவுள்ளது. இக்கலந்துரையாடலில் தமிழ் தேசியம் சார்ந்த கட்சிகள், தொழிற்சங்கங்கள், மத அமைப்புகள், மதத்தலைவர்கள், சமூகசெயற்பாட்டாளர்கள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் ற்றும் சமூக ஆர்வலர்கள் எனப் பல்வேறு தரப்பினரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது

## எரிக் சொல்கெய்ம் மன்னாரில்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சர்வதேச காலநிலை ஆலோசகர் எரிக்கொல்கெய்ம் இன்று ஒரு நாள் பயணமாக மன்னார் மாவட்டத்திற்கு வருகை தந்தார்.

மன்னார் தலைமன்னார் பகுதிக்கு வருகை தந்த எரிக்கொல்கெய்ம் தலைமன்னார் பயணத்தின் பின் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோவுடன் மன்னார் 2

## தந்தை கழுத்தறுத்துக் கொலை பதின்ம வயது மகன்கள் கைது

யாழ், கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிருசுவில் - கரம்பகம் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் கழுத்து வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இன்று காலை வெட்டுக்காயங்களுடன் ஒருவரது சடலம் கிடப்பதாகக் கிடைத்த தகவலை அடுத்து கொடிகாமம் பொலிஸார் சடலத்தை மீட்டு விசாரணை நடத்தினர்.

இந்தக் கொலையை இறந்தவரின் பதின்ம வயது மகன்கள் இருவரும் அவரது நண்பனுமாக இந்தக் கொலையைச் செய்துள்ளார்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகத்தின் பேரில் அவர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கரம்பகத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான சிவசோதி சிவகுமார் (வயது 43) என்பவரே கொலை செய்யப்பட்டுள்ளார். கடந்த இரண்டு வருடங்களாகக் குடும்பத்தைப் பிரிந்து வாழும் இவர், தனது தோட்டத்தில் குடில் ஒன்றை அமைத்து அங்கு தங்குவதை வழமையாகக் கொண்டிருந்துள்ளார்.

இன்று காலை கழுத்தில் பெரும் வெட்டுக் காயங்களுடன் சடலமாக அவர் காணப்பட்டார். கொலை தொடர்பில் யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணையை அடுத்து அவரது மகன்கள் இருவரும் அவர்களது நண்பனும் கைது செய்யப்பட்டனர் என்று கொடிகாமம் 2

## குளவி கொட்டி ஒருவர் இறப்பு



குளவிக் கொட்டுக்கு இலக்காகி வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தலவாக்கலை, லிந்துலை - பெர்ஹாம் தோட்டத்தில் 2

## குளவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ன்றுஇடம்பெற்றுள்ளது.குளவிக்கொட்டுக்கு லக்கான இருவர் லிந்துலை பிரதேச வைத்தி சாலையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் 2 வயதுடைய நபர் உயிரிழந்துள்ளார் ன்று லிந்துலை பிரதேச வைத்தியசாலை ட்டாரங்கள் தெரிவித்தன.

இந்நிலையில், குளவிக் கொட்டுக்கு லக்கானமற்றையநபர்வைத்தியசாலையில் கிச்சை பெற்று வருகின்றார் என்று ந்துலை பிரதேச வைத்தியசாலையின் ரதான வைத்திய அதிகாரி ஏ.ஜெயராஜன் தரிவித்தார்.

## பாரிய...

யாழ்.,கொடிகாமம்பொலிஸ்பிரிவுக்குட்பட்ட ருசுவில் – கரம்பகம் பகுதியில் குடும்பஸ்தர் ருவர் கழுத்து வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார் ன்று பொலிஸார் தெரிவித்தனர். இன்று ாலை வெட்டுக்காயங்களுடன் ஒருவரது டலம் கிடப்பதாகக் கிடைத்த தகவலை அடுத்து கொடிகாமம் பொலிஸார் சடலத்தை ட்டு விசாரணை நடத்தினர்.

கரம்பகத்தைச் சேர்ந்த இரண்டு
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ள்ளைகளின் தந்தையான சிவசோதி வகுமார் (வயது 43) என்பவரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த இரண்டு வருடங்களாகக் டும்பத்தைப் பிரிந்து வாழும் இவர், தனது

## அடுத்த ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ற்போது குறுக்கு வழியில் ஆட்சியைப் டிக்க எதிர்க்கட்சியினர் முயற்சிக்கின்றனர் ன்றும், அவர்களின் அந்த முயற்சி யனற்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மொட்டுக் கட்சியின் நாடாளுமன்ற றுப்பினர்கள் சிலர் எதிரணிப் பக்கம் சென்றாலும் நாடாளுமன்றத்தில் தற்போது மொட்டுக் கட்சி பெரும்பான்மையை ழக்கவில்லை என்றும் அவர் சுட்டிக்காட் னார்.

அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் திர்க்கட்சிகள் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டாலும் மொட்டுக் கட்சியே வெற்றிவாகை சூடும் என்றும் அவர் அடித்துக் றினார்.

மொட்டுக் கட்சியின் வியூகங்களை ந்தக் கட்சியாலும் முறியடிக்க முடியாது ன்றும் பஸில் ராஜபக்ச மேலும் தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் ருத்துரைக்கும் போதே அவர் மேற்படி டயங்களைக் கூறினார்.

## ஊழல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தனால் நாம் தனி அரசை மக்களிடம் கட்கின்றோம். நாட்டை முன்னேற்றப் ாதையில் கொண்டு செல்வோம்.

உள்ளூராட்சிசபைத் தேர்தல் நடைபெற் ால் அது முடிந்து நான்கு மாதங்களுக்குள் ாடாளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டி ரும் – என்றார்.

## தேர்தல்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி றியுள்ளாரே...?

பதில்:– அதை அவரிடம்தான் கேட்க வண்டும். அரசைப் பொறுத்தவரை அப்படியொரு தீர்மானத்தை எடுக்கவில்லை.

கேள்வி:– அப்படியாயின் உள்ளூராட்சி பைத் தேர்தல் எப்போது நடைபெறும்?

பதில்:– அதைத் தேர்தல்கள் ஆணைக்குழுதான் தீர்மானிக்கவேண்டும் என்றார்.

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு தொடர்பில் மக்கள் மத்தியில் நம்பிக்கை குறைவடைந் துள்ளது. எனவே, அந்த ஆணைக்குழுவுக்கு புதிய சட்டத்தின் பிரகாரம் கூடுதல் அதி காரம் வழங்கப்படும்.

கடந்த காலங்களில் சுயாதீனத் தன்மையைக் கருதி ஓய்வுபெற்றவர்கள் ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்பட்டனர். ஆனால், சேவைகள் சிறப்பாக இடம்பெற வில்லை. எனவே, சிறப்பாகச் செயற்படக் கூடியவர்களை நியமிப்பதற்கும் ஏற்பாடு கள் உள்ளன.

புதிய ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதி உள்ளிட்ட அனை வரும் சொத்து விபரங்களை வெளியிட வேண்டும் – என்றார்.

## 13ஐ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர்களுக்கான (வடக்கு, கிழக்கு மக்கள்) உரிமைகளை ஏன் வழங்க முடியாது? உரிமைகளைவழங்காவிடின் இப்பிரச்சினை தீரப்போவதில்லை. இனப்பிரச்சினையை இனியும் நீடிக்க இடமளிக்கக்கூடாது.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் பற்றி கதைக்க வேண்டாம் என எனக்குச் சொல்கின்றனர். அவ்வாறு கதைக்காமல் இருக்க முடியாது. 13 போதும் என்று வடக்கு, கிழக்கு மக்கள் கூறுவார்களாயின் குறைந்தபட்சம் அதைச் செய்வதற்காவது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

நாட்டை நேசிப்பவர்கள் போராடி யாவது 13 ஐ வடக்கு, கிழக்கு மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். – என்றார்

# அம்பாறை – நிந்தவூரில் இராணுவ முகாமை அகற்றுவதற்கான நடவடிக்கை முன்னெடுப்பு

*அம்பாறை-நிந்தவூரில் அமைந்துள்ள இராணுவ முகாமினை அகற்றுவதற் கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.*

*அதனடிப்படையில் பிரதேச சபையின் பழைய கட்டடத்தில் அமைந்திருக்கின்ற இராணுவ முகாமை அகற்றுவதன் ஓர் அங்கமாக அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணைய-ாளர் எஸ்.எல்.ஏ.கமல் நெத்மினி அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரை நேரில் அழைத்து வந்து பார்வையிட்டிருந்தனர்.*

*நிந்தவூர்பிரதேசசபை அம்பாறை மாவட்ட உள்ளூராட்சிமன்றங்களுக் குள் முதலிடம் பெற்றமையால் பரிசுத் தொகையாக 100,000 அமெ ரிக்க டொலர் நிதி கிடைக்கப் பெற்றது. இதனைக்கொண்டு நிந்தவூர் பிரதேச சபைக்கு சொந்த மான பிரதேச சபையின் பழைய கட்டடம் அமைந்துள்ள இடத்தில் பண்ணை தொழிலாளர்களின் மே ம்பாட்டுக்கான வர்த்தக கட்டட தொகுதியை அமைப்பதற்கான முன்னெடுப்புக்கள் இடம்பெற்று வருகின்றன.*

*இராணுவ உயர் அதிகாரி, அம்பாறை உதவி பொலிஸ் அத்தி யட்சகர், நிந்தவூர் பிரதேச செயலாளர் ஏ.எல்.அப்துல்லதீப், நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எம்.ஏ.எம்.அஷ்ரப் தாஹிர், பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள் ம ற்றும் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர்களென பலரும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.*







# மீனாட்சி அம்மன் ஆலயத்தை உடைத்து யானைகள் அட்டகாசம்; பெரும் சேதம்











(வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற நிந்தவூர் ம ாட்டுப்பழை மடத்தடி ஸ்ரீ மீனாட்சிஅம்மன் ஆலயத்தில் வியாழக்கிழமை நள்ளிரவில் புகுந்த ஐந்து யானைகள் அங்கு பெரும் சேதத்தை விளைவித்துள்ளன.

ஆலயத்தில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த நெல்லை உண்ப தற்காக யானைகள் ஆலயத்தை உடைத் துள்ளன.

நள்ளிரவு 12 மணியளவில் சுமார் 5 யானைகள் ஆலய சுற்றுமதிலை உடைத்துக் கொண்டு அங்கிருந்த அலுவலக அறை களஞ்சியசாலை என்பவற்றை முற்றாக உடைத்து சேதப்படுத்தி நெல்லை முழு வதுமாக உண்டன என்று ஆலய நிர்வாகத்தி னர் தெரிவித்தனர்.

அருகில் இருந்த பெரிய மாமரத் தின் கிளையை முறித்து எறிந்து என சுமார் ஒரு மணி நேரம் அங்கு தரித்து நின்ற யானைகள் அட்டகாசம் புரிந்தன. அச்சம யம் அங்கிருந்த காவலாளி எதுவும் செய்ய முடியாத நிலையில் அச்சத்தில் இருந்தார் என்று ஆலய தலைவர் கி.ஜெயசிறில் கூறினார் . இது தொடர்பாக போலீசிலும் முறைப்பாடு செய்யப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

## எரிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆயர் இல்லத்தில் சிநேகபூர்வ கலந்துரை யாடல் ஒன்றையும் மேற்கொண்டிருந்தார்.

அதனைத் தொடர்ந்து மதியம் 3 மணியளவில் மன்னார் செபஸ்ரியார் பேராலயத்தில் அமைந்துள்ள மறைந்த முன்னால் மன்னார் மறைமாவட்ட ஆஜர் இராஜப்பு ஜோசப்பின் நினைவிடத்திற்கு வருகை தந்து அஞ்சலி செலுத்தினார். ம றைந்த மன்னார் மறை மாவட்ட முன்னால் ஆயர் இராஜப்பு ஜோசப் ஆண்டகையின் நினைவு நாள் பேருரையையும் ஆற்றினார்.

இந்த நிகழ்வில் எரிக்சொல்கெய்ம், ம ன்னார் மறை மாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாடோ திருகோணமலை ஆயர் கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ம ன்னார் மாவட்டச் செயலர் ஸ்ரான்லி டிமெல், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சால்ஸ் நிர்ம லநாதன் உட்பட்ட அரச திணைக்களின் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## தந்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொலிஸார் தெரிவித்தனர். தந்தை தங்க ளோடு மோசமாக நடந்து கொண்ட தாலேயே அவரைக் கொலை செய்தனர் என்று மகன்கள் வாக்குமூலம் வழங்கி யதாகப் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. கைதானவர்கள் பாடசாலையில் உயர்தரத்தில் கல்வி பயிலும் 17 மற்றும் 19 வயதுடைய ம ாணவர்கள். கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட கத்திகள் இரண்டு அருகில் இருந்த குளத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளன என்கிறது பொலிஸ். கைதானவர்களை சாவகச்சேரி நீதி மன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக் கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# தன்னை ஏமாற்றிய காதலிக்கு மோசமாக செயற்பட்ட சிப்பாய்

பல்லேகலை முகாமில் கடமையாற்றும் இராணுவ சிப்பாய் ஒருவர் தனது முன்னாள் காதலியின் நிர்வாண புகைப்படங்களை இணையத்தளங்களில் சமூக ஊடகங்களில் வெளியிட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத் தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் நீண்டகாலமாக காதல் உறவில் ஈடுபட்டிருந்த பெண் வேறு ஒரு வரை திருமணம் செய்து கொண்டதன் காரண மாகவே அவரது நிர்வாண புகைப்படங் களை சமூக வலைத்தளங்களில் வெளி யிட்டுள்ளார் என விசாரணை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் 24 வயதுடைய மாத்தளை பிரதேசத்தை சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு கணினி குற்றத்தடுப்பு பிரிவிற்கு கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய விசாரணை மேற்கொண்ட போது சந்தேக நபர் கண்டி பல்லேகலை படை முகாமில் கடமையாற்றியவர் எனத் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளது டன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கண்டி கணினி குற்றப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# குருந்தூர் மலைக்கு நேரடி விஜயத்தை மேற்கொண்டு வலிதான கட்டளையை நீதிமன்றம் வழங்க வேண்டும்!

## ஆலய நிர்வாகம் கோரிக்கை

குருந்தூர்மலை பிரதேசத்துக்கு நீதிவான் நேரில் விஜயம் மேற்கொண்டு அங்கு கட்டுமானங்கள் இடம்பெறுகின்றனவா என்பதைப் பார்வையிட்டு வலிதாக பிணிக்கும் கட்டளையை வழங்க வேண்டும் என ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தினர் நீதிமன்றில் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தின் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணிகள் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலையில் நீதி மன்றக் கட்டளையை மீறி பௌத்தவிகாரை அமைக்கும் பணிகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாக குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயதினர்சார்பில் 02.03.2023 அன்று நீதிமன்றில் மன்றில் முறையீடு ஒன்று செய்யப்பட்டது.

இந்நிலையில் குருந்தூர் மலை விவகாரத்தில் அவ்வாறு நீதிமன்றக்கட்டளை மீறப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் மற்றும் தொல்லியல் திணைக்களம் ஆகிய தரப்பினர் 30.03.2023 ஆம் திகதியன்று நீதிமன்றில் தோன்றி தமது அறிக்கைகளை சமர்ப்பிக்கவேண்டுமென முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் ரி.சரணராஜா உத்தரவிட்டிருந்தார்.

அதற்கமைய குறித்த வழக்கு முல்லைத்தீவு நேற்று (வியாழக்கிழமை) விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

அந்தவகையில் தொல்லியல் திணைக்களம் சார்பில், தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் அனுரமானதுங்க உள்ளிட்ட குழுவினரும், பொலிஸாரும் மன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகம் சார்பில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், சமூக ஆர்வலர் ஜூட் நிக்சன் உள்ளிட்டவர்கள் மன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

இதன்போது தமது சிரேஷ்ட சட்டத்தரணிகளும், சிரேஷ்ட அலுவலர்களும் நீதிமன்றிற்கு வரமுடியாத காரணத்தால், தமது விளக்கங்களைச் சமர்ப்பிப்பதற்கு பிறிதொரு தவணையை வழங்குமாறு பொலிஸாரும், தொல்பொருள் திணைக்களம் சார்ந்தவர்களும் நீதிமன்றிடம் விண்ணப்பம் செய்திருந்தனர்.

இந்நிலையில் குருந்தூர் மலைப் பிரதேசத்திலே நீதி மன்றக் கட்டளையை மீறி பௌத்த விகாரைக்குரிய கட்டுமானப் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதானது, நீதிமன்றத்தை அவமதித்து இடம்பெறுகின்ற செயற்பாடு என, குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயம் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

அத்தோடு பொதுமக்கள் நீதிமன்றின் மேல் வைத்திருக்கின்ற நம்பிக்கையைக் கேள்விக்குள்ளாக்கக்கூடியதொரு செயற்பாடு எனவும் இதன்போது ஆலய நிர்வாகம் சார்பான சட்டத்தரணிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

இதேவேளை குறித்த குருந்தூர் மலைப் பிரதேசத்துக்கு நீதிவான் நேரடியாக வருகைதந்து அங்கு இடம்பெறும் விடயங்களைப் பார்வையிட்டு, ஏற்கனவே இருந்த நிலையை விட புதிதாக கட்டடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றனவா, அல்லது மேம்படுத்தல் செய்யப்பட்டிருக்கின்றனவா என்பதைப் பார்வையிட்டு, அதனடிப்படை யில் வலிதான பிணிக்கும் தன்மையுடைய கட்டளை ஒன்றை வழங்கவேண்டுமெனவும் குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயம் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணிகளால் வேண்டுகோளும் முன்வைக்கப்பட்டது.

அதனடிப்படையில் இருதரப்பு சமர்ப்பணங்களைத் தொடர்ந்து தொல்லியல் திணைக்களம் மற்றும், பொலிஸார் அறிக்கைகள் சமர்ப்பிப்பதற்காக எதிர்வரும் ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி வழக்குத் திகதியிடப்பட்டுள்ளது.

மேலும் குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயம் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணிகளில் ஒருவரான எஸ். தனஞ்சயன் கருத்துத் தெரிவிக்கையில் –

குருந்தூர்மலைதொடர்பான வழக்கு முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றிலே, நீதிவான் ரி.சரவணராஜா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஏற்கனவே நீதிமன்றால் வழங்கப்பட்ட இரண்டு கட்டளைகளைமீறி, நீதிமன்றக்கட்டளைகளை அவமதிப்பு செய்யும் விதமாக குருந்தூர்மலைப் பிரதேசத்தில் பௌத்த விகாரைக் கட்டுமானங்கள் தொடர்ந்து இடம்பெறுவதை, இதற்கு முந்திய வழக்குத் தவணையில் நீதிமன்றிற்குச் சுட்டிக்காட்டியிருந்தோம்.

இந்நிலையில் தொல்பொருள் திணைக்களத்தினரும், பொலிஸாரும், இது தொடர்பில் பதிலளிப்பதற்காக இன்றைய திகதிக்கு (நேற்று) இந்த வழக்குத் தவணையிடப்பட்டிருந்தது.

அந்தவகையில் தொல்பொருள் திணைக்களத்தைச் சார்ந்தவர்களும் பொலிஸாரும் மன்றிலே சமுகமாகியிருந்தனர்.

இதன்போது தமது சிரேஷ்ட சட்டத்தரணிகளும், சிரேஷ்ர அலுவலர்களும் நீதிமன்றுக்கு வரமுடியாத காரணத்தால் பிறிதொரு தவணையை வழங்குமாறுபொலிஸாரும், தொல்பொருள் திணைக்களம் சார்ந்தவர்களும் நீதிமன்றிடம் விண்ணப்பம் செய்திருந்தனர்.

இந்நிலையில் குருந்தூர் மலைப் பிரதேசத்திலே நீதி மன்றக் கட்டளையை மீறி பௌத்த விகாரைக்குரிய கட்டுமானப் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன என்ற விடயத்தை மீண்டும் நீதிமன்றின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கின்றோம்.

எனவே இந்தச் செயற்பாடு நீதிமன்றத்தை அவமதித்து இடம்பெறுகின்ற செயற்பாடாகக் கருத முடியும் எனவும் சுட்டிக்காட்டியிருக்கின்றோம்.

அத்தோடு பொதுமக்கள் நீதிமன்றின் மேல் வைத்திருக்கின்ற நம்பிக்கையைக் கேள்விக்குள்ளாக்கக்கூடியதொரு செயற்பாடாகவும் இதனைக் கருதமுடியுமெனவும் நாம் மன்றிலே எமது சமர்ப்பணங்களைச் செய்திருந்தோம்.

மேலும், குறித்த குருந்தூர் மலைப் பிரதேசத்துக்கு நீதிவான் நேரடியாக வருகைதந்து அங்கு இடம்பெறும் விடயங்களைப் பார்வையிட்டு, ஏற்கனவே இருந்த நிலையை விட புதிதாக கட்டடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றனவா? அல்லது மேம்படுத்தல் செய்யப்பட்டிருக்கின்றனவா? என்பதைப் பார்வையிட்டு, அதனடிப்படையில் வலிதான பிணிக்கும் தன்மையு டைய கட்டளை ஒன்றை வழங்க வேண்டுமென நாம் குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயம் சார்பிலே கேட்டிருக்கின்றோம்.

அந்தவகையில் இந்த வழக்கு தொல்பொருள் திணைக்களத்தினதும், சம்பந்தப்பட்ட தரப்பினரதும் பதிலுக்காக எதிர்வரும் ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டிருக்கின்றது.–என்றார்.



# இலகு ரயில் சேவை மீண்டும் ஆரம்பம் குறித்து இன்னும் தீர்மானிக்கவில்லை

## ஜப்பான் தூதுவர் கூறுகிறார்

கொழும்பு - மாலபே இடையிலான இலகு ரயில் சேவைத்திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பில் இது வரை தீர்மானிக்கப்படவில்லைஎன இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் ஹிடேகி மிசுகோஷி தெரிவித்துள்ளார்.

இலங்கை மோட்டார் வர்த்தக சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வொன்றின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலகு ரயில் திட்டம் தொடர்பில் இன்னும் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. ஆனால், இவை அனைத்தும் இலங்கை அரசாங்கத் தின் சீர்திருத்தங்கள் எவ்வாறு முன்னெடுக்கப்படுகின்றன மற்றும் ஜப்பான் வர்த்தக சமூ கத்தின் நம்பிக்கையை இலங்கையால் மீண்டும் பெற முடியுமா என்பதைப் பொறுத்தது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஜப்பானின் ஜைக்கா நிறுவனத்தால் 2.2 பில்லியன் டொலர் கடன் திட்டத்தின் கீழ் கொழும்பு, கோட்டையிலிருந்து மாலம்பே வரையான இலகு ரயில் சேவைத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

கொழும்பில் ஏற்படும் போக்கு– வரத்து நெரிசலைக் குறைப்பதற்காக மக்களுக்கு சிறந்த போக்கு– வரத்து வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக கடந்த 2016ஆம் ஆண்டு ஜப்பான் கடன் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டத்தை 2020 ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கம் தன்னிச்சையாக இரத்து செய்தது.

ஜைக்கா நிறுவனத்தால் 12 ஆண்டுகள் சலுகை காலம் உள்ளடங்கலாக, 40 ஆண்டுகளுக்கு 0.1 சதவீத வட்டியுடன் கடனை மீள செலுத்து– வதற்கு இணக்கம் காணப்பட்டிருந்தது.

எவ்வாறிருப்பினும், இதனை ஏற்றுக்கொள்ளக்கூடிய எவ்வித காரணமும் இன்றி, இலங்கை அரசாங்கம் இரத்து செய்துள்ளது. 2020 செப்ரெம்பர் 24ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை பத்திரத்துக் கமையவே இந்தத் திட்டம் இரத்து செய்யப்பட்டது.

இந்நிலையில், சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாடு எட்டப்பட்டதன் பின்னர், இந்தத் திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஜப்பான் இணங்கியுள்ளதாக முன்னர் தெரிவிக்கப்பட்டது. எவ்வாறிருப்பினும், ஜப்பான் தூதுவர் அதற்கு மாறுபட்ட கருத்தை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சி மாவட்ட காணி பயன்பாட்டு திட்டமிடல் குழு நேற்றுக் கூடி ஆராய்வு

கிளிநொச்சி மாவட்ட காணிப் பயன்பாட்டு திட்டமிடல் குழுக் கூட்டத்தில் வனவளத்திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களங்களின் எல்லையிடப்பட்ட பகுதிகளில் விடுவிக்கபட வேண்டிய காணிகள் தொடர்பான விடயங்கள் திணைக்கள அதிகாரிகளுடன் ஆராயப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தின் நடப்பாண்டுக்கான முதலாவது காணிப்பயன்பாட்டு திட்டமிடல் குழுக் கூட்டம் கிளிநொச்சி மாவட்ட செயல மாநாட்டு மண்டபத்தில் நேற்று (வியாழக்கிழமை) காலை 9.30 மணிக்கு இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரும், மாவட்ட காணிப் பயன்பாட்டு திட்டமிடல் குழுவின் தலைவருமான திருமதி றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் பிரதேச மட்ட காணிப் பயன்பாட்டுதிட்டமிடல் குழுக் கூட்டத்தில் சிபாரிசு செய்– யப்பட்டு, மாவட்ட காணிப் பயன்பாட்டுதிட்டமிடல் குழுக் கூட்டத்தில் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள காணி தொடர்பான விடயங்கள் பிரதேச செயலாளர் ரீதியாக ஆராயப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மேலும், கடந்த மாவட்ட மட்ட காணிப் பயன்பாட்டு திட்டமிடல் குழுக் கூட்டத்தின் கூட்ட தீர்மானங்கள் தொடர்பாகவும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.

மேலும் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வனவளத்திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களங்களின் எல்லையிடப்பட்ட பகுதிகளில் விடுவிக்கபட வேண்டிய காணிகள் தொடர்பான விடயங்கள் குறித்த திணைக்கள அதிகாரிகளுடன் ஆராயப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர் (காணி), காணிப் பயன்பாட்டு திட்டமிடல் பிரிவின் உதவிப் பணிப்பாளர், கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச செயலகங்களின் பிரதேசசெயலாளர்கள், சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர், உள்ளூராட்சி திணைக்கள உதவி ஆணையாளர், பூநகரி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர், சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் அதிகாரிகள், மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலகங்களின் காணிப் பயன்பாட்டுத் திட்ட மிடல் பிரிவின் உத்தியோகத்தர்கள் மற்றும் காணிப் பிரிவு உத்தியோகத்தர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டனர்.

# இலாபமடையும் அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்த இடமளிக்கோம்

## சந்திம வீரக்கொடி திட்டவட்டம்



நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைக்கும் நடவடிக்கைகள் வெளிப்படைத்தன்மையாகக் காணப்பட வேண்டும்.

இலாபமடையும் அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்த இடமளிக்கப் போவதில்லை. நீதிமன்றத்தை நாடுவோம் என நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.

காலி பகுதியில் இடம்பெற்ற ஊடகவி– யலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளாமல் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண முடியும் என எதிர்க்கட்சிகளின் ஒருசில உறுப்பினர்கள் குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு இல்லாமல் தற்போதைய நிதி நெருக்கடியில் இருந்து மீள முடியாது.

பொருளாதார நெருக்கடி தீவிரமடைவதற்கு முன்னர் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை நாடுமாறு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷ தலைமையிலான அரசாங்கத்திடம் பலமுறை சுட்டிக்காட்டினோம். நிதி நெருக்கடி இல்லை எனக் குறிப்பிட்டு தன்னிச்சையாக செயற்பட்டார்கள், இறுதியில் நாடு வங்குரோத்து நிலை அடைந்தது.

சர்வதேச நாணய நிதியம் முன்வைத்துள்ள நிபந்தனைகளில் ஒருசிலவற்றைத் தாராளமாக செயற்படுத்தலாம்.

நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைக்கும் பணிகள் வெளிப்படைத் தன்மையாகக் காணப்பட வேண்டும். மறுசீரமைப்பு என்று குறிப்பிட்டுக் கொண்டு அரசாங்கம் இலாபமடையும் அரச நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்த முயற்சிக்கிறது.

அரச நிறுவனங்களைப் பாதுகாக்கும் நோக்கில் முன்னெடுக்கப்பட்டுள்ள தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் முறையற்ற வகையில் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. சகல தரப்பினருடன் பேச்சுகளை மேற்கொண்டு அரசாங்கம் வெளிப்படைத்தன்மையுடன் செயற்பட வேண்டும் அதனை விடுத்து தன்னிச்சையாக செயற்பட்டால் நீதிமன்றத்தை நாடுவோம். – என்றார்.

# மொனராகலையில் 14 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் தப்பியோட்டம்; இருவர் கைதாகினர்

மொனராகலை, ஒக்கம்பிட்டிய பகுதியில் 14 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் தப்பிச்சென்றுள்ளரதயுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக ஒக்கம்பிட்டி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியின் யால வனப்பகுதியின் கையிலகும்புர பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் 12 கிலோ 710 கிராம் கஞ் சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதோடு 14 கிலோ 5 கிராம் நிறையுடைய கஞ்சாவுடன் சந்தேகநபர் ஒருவர் தப்பிச் சென்றுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது கைது செய்யப்பட்டவர்கள் 23 மற்றும் 26 வயதுடைய எம்பிலிப்பிட்டிய மற்றும் மொனராகலை பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் வெல்லவாய நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் ஒக்கம்பிட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# மஹிந்தவின் கருத்துக்கு அரசுக்குள் எவ்வித மதிப்பும் தற்போது கிடையாது

## அடித்துக்கூறுகின்றார் டிலான் பெரேரா



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கருத்துக்கு அரசாங்கத்திற்குள் எவ்வித மதிப்பும் தற்போது கிடையாது.

பொதுஜன பெரமுனவில் இருந்து விலகிய நாங்கள் இனியொருபோதும் பொதுஜன பெரமுனவுடன் ஒன்றிணையப் போவதில்லை என்பதை உறுதியாகக் குறிப்பிட்டுக் கொள்கிறேன் என நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

சுதந்திர மக்கள் கூட்டணி காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும் வரை எந்தத் தேர்தலையும் நடத்த இடமளிக்க முடியாது என்ற நிலைப்பாட்டில் இருந்து கொண்டு ஜனாதிபதி செயற்படுகிறார்.

அரசாங்கத்தின் தேவைக்கு அமைய தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது, ஜனாதிபதி தேர்தலைக் காண்பித்து உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தாமலிருக்க இடமளிக்க முடியாது.

எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து உள்ளூராட்சிமன்றத் தேர்தல் உரிமையை பெற்றுக்கொள்ள அமைதிவழி போராட்டத்தில் ஈடுபட வேண்டும். தேர்தல் செயற்பாடுகளுக்கு ஏற்பட்டுள்ள தடைகளுக்கு தீர்வு காணும் நோக்கம் அரசாங்கத்துக்குக் கிடையாது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நடவடிக்கைகளுக்கு நாடாளுமன்றத்தின் ஊடாக வலுவான தடை ஏற்படுத்த அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது, ஆகவே தற்போதைய நிலையில் சகல எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து பொறுப்புடன் செயற்பட வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிடும் கருத்துகளுக்கு அரசாங்கத்திற்குள் தற்போது மதிப்பு கிடையாது. பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தில் இருந்து விலகியவர்கள் மீண்டும் அரசாங்கத்துடன் ஒன்றிணைவார்கள் எனக் குறிப்பிட்டுள்ளார்.

பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி தற்போது சுயாதீனமாகச் செயற்படும் தரப்பினர் எவரும் பொதுஜன பெரமுனவுடன் இனி ஒன்றிணையப் போவதில்லை என்பதை உறுதியாக குறிப்பிட்டுக் கொள்கிறோம். – என்றார்.

# விபசார விடுதி சுற்றிவளைப்பு கல்கிசையில் இருவர் கைது!

கல்கிஸை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியிலுள்ள விபசார விடுதியொன்று சுற்றிவளைக்கப்பட்டதில் பெண்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக கல்கிஸை, கடுகுருதுவத்த பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்த விபசார விடுதி சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

இதன்போது விடுதியின் முகாமையாளர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 28 மற்றும் 32 வயதுடையவர்கள் எனவும் அவர்கள் வெல்லம்பிட்டிய மற்றும் விதாரன்தெனியே பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர்.

சந்தேகநபர்கள் கல்கிஸ்ஸ நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர். கல்கிஸ்ஸ பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## சட்டங்களை இயற்றுவது மட்டும் போதாது

**“ஊழல் ஒழிப்புக்கு எதிராக பல சட்டங்கள் நாட்டில் உள்ளன. ஆனால், அந்தச் சட்டங்கள் முறையாகச் செயற்படுத்தப்படுகின்றனவா என்பது பிரச்சினைக்குரியதாக உள்ளது. நாட்டு நலனுக்காக இயற்றப்பட்ட சட்டங்கள் முறையாக செயற்படுத்தப்பட்டால் எந்த பிரச்சினையும் தோற்றம் பெறாது” என்று தெரிவித்திருக்கிறார் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்.**

**இலங்கை மன்றக் கல்லூரியில் புதன்கிழமை மாலை இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். இலங்கையின் ஊழல் ஆட்சி என்று பெயரெடுத்த ராஜபக்சக்களின் ஆட்சியில் அமைச்சராக இருந்தவர் அவர். 2015ஆம் ஆண்டில் ஊழல்வாதிகள் என்று குற்றஞ்சாட்டப்பட்டு பதவியிறக்கப்பட்ட ராஜபக்சக்களுடன் மிக நெருக்கமானவராக இருந்தவர், அவர்களுடைய கட்சியின் தலைவர் பதவியில் அமர்த்தப்பட்டு அழகு பார்க்கப்பட்டவர் ஜி.எல்.பீரிஸ்.**

**அவர்தான் இப்போது– ஊழல் ஒழிப்புச் சட்டங்கள் முறையாகச் செயற்படுத்தப்படுவதில்லை என்று குற்றஞ்சாட்டுகின்றார். இலங்கையின் பொருளாதார மறுசீரமைப்பில் பன்னாட்டு செலாவணி நிதியம் (ஐஎம்எவ்) முன்வைத்துள்ள நிபந்தனைகளில் ஒன்றாக ஊழல் ஒழிப்பு இருக்கின்ற நிலையிலும் ஊழல் ஒழிப்புக்காகப் புதிய சட்டத்தைக் கொண்டுவரப்போவதாக அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சி பறை தட்டித் திரிகையிலும் பீரிஸின் இந்தக் கருத்து முக்கியத்துவம் பெறுகின்றது.**

**இலங்கையின் அடி முதல் நுனிவரை ஊழல் விரவிக் கிடக்கின்றது. திருடனைப் பிடிப்பது பொலிஸாரின் கடமை, ஆனால் திருடியவனைப் பிடித்து பொலிஸாரிடம் கொடுத்து அவன் மீது நடவடிக்கை எடுப்பதற்கு லஞ்சமும் கொடுக்கவேண்டும் என்கிற நிலை அளவுக்கு ஊழல் தலைவிரித்தாடுகின்றது. அரச நிறுவனங்களில் உரிய காலத்தில் ஒரு காரியத்தை ஆற்றவேண்டுமானால் லஞ்சம் கொடுக்கவேண்டியிருக்கிறது. சட்டத்துக்குப் புறம்பானவற்றைப் பெறுவதற்காக லஞ்சமும் கொடுப்பது என்கிற நிலைபோய் சட்டப்படி நடக்கவேண்டிய– வற்றை நடக்கவைப்பதற்கே லஞ்சமும் ஊழலும்தான் என்கிற நிலை வரைக்கும் ஒரு புற்றுநோயாக இது வளர்ந்துவிட்டது.**

**இதனை அகற்றாமல், கட்டுப்படுத்தாமல் நாட்டின் அபிவிருத்தியும் மேம்பாடும் இல்லை என்பதுதான் செலாவணி நிதியத்தின் கருத்து. அதனால்தான் அதனையும் ஒரு நிபந்தனையாக அது விததித் துள்ளது. அதற்காகவே புதிய ஊழல் ஒழிப்புச் சட்டம் கொண்டுவரப்படவுள்ளது என்று நீதி அமைச்சர் சொல்லித் திரிகிறார்.**

**எந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தாலும் அதனை நேர்மையாக நடத்துவதற்கான விருப்பமும் பொறிமுறையும் இல்லாத நிலையில் அவை வெற்றியளிக்கப்போவதில்லை என்பதைத்தான் பீரிஸ் சுட்டிக்காட்டுகின்றார். அது உண்மையும்கூட.**

**அரசுத் தலைமையும் ஆட்சித் தலைமையும் இந்த விடயத்தில் இதயசுத்தியுடனான முயற்சியை எடுத்தால் தவிர இது விடயத்தில் வெற்றியோ முன்னேற்றமோ சாத்தியமில்லை.**

**சிறப்பான சட்டங்களை நடைமுறைப்படுத்தாமல் விடுவதும் இருக்கிற சட்டங்களை மிக மோசமான பயங்கரமான முறையில் பயன்படுத்துவதும்தான் இலங்கையின் சாபக்கேடு.**

# பொதுஜன பெரமுன அரசியல் ரீதியில் பாரிய பின்னடைவை எதிர்கொள்ளும்

## வாசுதேவ ஆரூடம்



ஐக்கிய மக்கள் சக்தியின் பெரும்பாலான உறுப்பினர்களை இணைத்துக்கொண்டு அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்ல ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசியல் ரீதியில் பாரிய பின்னடைவை எதிர்கொள்ளும் என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கையைப் புறக்கணித்து நாட்டு மக்கள் கோட்டபய ராஜபக்சவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தார்கள்.

தனியார் மயப்படுத்தப்பட்ட அரச வளங்களை மீண்டும் அரசுடைமையாக்குவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங்கியது. தற்போது அனைத்து வாக்குறுதிகளும் பொய்யாக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரச வளங்களை தனியார் மயப்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடுமையான நிபந்தனைகளை செயற்படுத்தினால் சமூக கட்டமைப்பில் அமைதியின்மை தொடர்ந்து நீடிக்கும்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செல்வாக்கை கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியை பலப்படுத்தும் நடவடிக்கைகளை ஜனாதிபதி முன்னெடுத்துள்ளார். ஜனாதிபதிக்கும், பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்களுக்கும் இடையில் நல்லதொரு இணக்கப்பாடு கிடையாது.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்சவை மீண்டும் பிரதமராக்கும் முயற்சிகளை பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் முன்னெடுத்துள்ளார்கள். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் வெகுவிரைவில் பிளவுபடும்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பெரும்பாலான உறுப்பினர்களை இணைத்துக்கொண்டு அரசாங்கத்தை முன்னெடுத்துச்செல்ல ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார்.

பெரும்பான்மை பலத்தை வைத்துக்கொண்டு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசியல் ரீதியில் பாரிய பின்னடைவை வெகுவிரைவில் எதிர்கொள்ளும். – என்றார்.

# சட்டவிரோதமாக வெளிநாடு செல்லும் பெண்களுக்கு தூதரக பாதுகாப்பு தங்குமிட வசதிகள் இனி கிடையா

சட்டவிரோதமான வழிகளில் வெளிநாடுகளுக்குச் செல்லும் இலங்கைப் பெண் தொழிலாளர்களுக்கு 2023 ஏப்ரல் முதலாம் திகதி முதல் வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகத்தின் பாதுகாப்பு இல்லங்களில் தங்குமிடம் வழங்கப்பட மாட்டாது என இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பவை வருமாறு –

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்யாமல் மோசடி முகவர் மூலமாக வெளிநாடுகளுக்குச் செல்லும் பெண்களுக்கு இந்த அறிவிப்பு பொருந்தும். வேலைவாய்ப்பில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்ட புலம்பெயர்ந்த இலங்கை பெண் தொழிலாளர்களுக்கு உதவுவதற்காக வெளிநாட்டு தூதரகங்கள் ஆரம்பத்தில் பாதுகாப்பு வீடுகளை வழங்கியது.

எவ்வாறாயினும், இலங்கை பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், சட்டவிரோத முகவர் நிலையங்கள் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்யாமல் பயணம் செய்தவர்கள் பிரச்சினைகளை எதிர்கொண்டால் தூதரக அதிகாரிகள் பாதுகாப்பு தங்குமிடங்கள் மற்றும் பிற உதவிகளை வழங்கினர்.

சட்டவிரோத வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்யாமல் வெளிநாடுகளுக்குச் செல்லும் இலங்கை பெண் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் எண்ணிக்கையை குறைக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# உலகின் சிறந்த ஆறு இளம் விஞ்ஞானிகளில் ஒருவராக தெரிவுசெய்யப்பட்ட இலங்கையர்

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை நோயெதிர்ப்பு மற்றும் உயிரியல் துறையின் பணிப்பாளர் பேராசிரியர் சந்திம ஜீவந்தர, உலகின் சிறந்த ஆறு இளம் விஞ்ஞானிகளில் (நோய் எதிர்ப்பு நிபுணர்கள்) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இந்த ஆறு இளம் விஞ்ஞானிகளில் ஐவர் பிரித்தானிய பிரஜைகள் என்பதுடன் அவர்களில் இலங்கை விஞ்ஞானி ஒருவர் தெரிவு செய்யப்பட்டமை விசேட அம்சமாகும்.

பிரிட்டிஷ் சொசைட்டி ஆஃப் இம்யூனாலஜிஸ்டுகளால் உலகின் ஆறு இளம் விஞ்ஞானிகளில் சந்திம ஜீவந்தர தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். நோயெதிர்ப்பு அறிவியலின் எதிர்காலத்துக்காக அர்ப்பணிக்கப்பட்ட விஞ்ஞானிகளை அங்கீகரிப்பதற்காக நடைபெறும் நோய்த்தடுப்பு விருது வழங்கும் விழாவில் ஜீவந்தர இந்த விருதைப் பெறவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்யூனாலஜி விருதுகள் என்பது உலகப்புகழ்பெற்ற மருத்துவ விருது வழங்கும் விழாவாகும், மேலும் உலகம் முழுவதிலுமிருந்து முப்பத்திரண்டு விஞ்ஞானிகள் விருதுகளைப் பெற ஆறு பிரிவுகளின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

விருது வழங்கும் விழா லண்டனில் ஏப்ரல் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளது. பேராசிரியர் சந்திம ஜீவந்தர இலங்கையில் கொவிட்-19 வைரஸ் பரவல் தொடர்பாக பல முன்னோடி விசாரணைகளை நடத்தி பல புதிய தகவல்களை வெளிக்கொண்டுவந்த விஞ்ஞானி என்பது குறிப்பிடத்தக்கது.

# புதிய பயங்கரவாதத் தடைச் சட்டம் அபாயகரமானது மக்கள் எழுச்சி மூலம் அதனை நாம் தோற்கடிப்போம்

## சுரேந்திரன் குருசுவாமி அழைப்பு



புதிதாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலம் மிகவும் அபாயகரமாக உள்ள நிலையில் மக்கள் எழுச்சி மூலம் தோற்கடிக்க வேண்டும் என ரெலோ ஊடகப் பேச்சாளர் குருசுவாமி சுரேந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஐ.நா. மற்றும் சர்வதேச மனித உரிமை நிறுவனங்களின் கோரிக்கைகளுக்கு அமைய நீக்குவதாக கூறிக்கொண்டு அதைவிட கடுமையான மற்றும் கொடுமையான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நடைமுறைக்கு கொண்டுவருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

புதிய பயங்கரவாதத் தடைச் சட்ட மூலத்தை நாங்கள் முற்றுமுழுதாக நிராகரிக்கிறோம். அதற்கு எமது கடுமையான எதிர்ப்பையும் பதிவு செய்கிறோம்.

ஏற்கனவே இருந்த சட்டமூலத்தில் இருக்கும் அனைத்து சரத்துக்களுக்கும் மேலதிகமாக அவசர கால சேவைகளாகக் கருதப்படும் உணவு உற்பத்தி, விநியோக சேவைகள் என இன்னோரன்ன சேவைகளில் ஈடுபடும் நிறுவனங்களோ அதைச் சார்ந்த ஊழியர்களோ எந்த விதமான கருத்து தெரிவிப்பதையோ போராட்டங்களில் ஈடுபடுவதையும் இந்தச் சட்டமூலம் கட்டுப்படுத்துகிறது.

அவசரகால சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்படும் அனைத்து சேவைகள் மற்றும் அமைப்புகளைச் சார்ந்தவர்களும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் செயலற்றவர்களாக ஆக்கப்படுகின்ற அபாயகரமான நிலையை இந்த சட்ட மூலம் தோற்றுவிக்கிறது.

ஆகவே, மேற்படி சட்ட– மூலத்தை நாடாளுமன்றத்தில் தோற்கடிப்பதற்கு அனைத்து மக்களும் கட்சி பேதம் பாராமல் எழுச்சி கொள்வதோடு அரசியல் கட்சிகளும் ஓரணியில் நின்று எதிர்க்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# யாழ். மாணவர்களிடம் மன்னிப்புகோரிய டக்ளஸ்

யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வுக்கு 10 நிமிடங்கள் தாமதித்து வந்தமைக்காக கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மாணவர்களிடம் மன்னிப்பு கோரியுள்ளார்.

யாழ். மத்திய கல்லூரி தந்தை செல்வா அரங்கில் மத்திய கல்லூரி மாணவர்களுக்கான இலவச சீருடை மற்றும் பாடநூல் வழங்கும் நிகழ்வுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டுள்ளார்.

மேற்படி நிகழ்வுக்கு வருகை கா விருந்த அமைச்சரை வரவேற்பதற்காக சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பான்ட் வாத்திய அணிவகுப்புடன் வீதியில் நின்று கொண்டிருந்தனர்.

எனினும் முழங்காவில் பகுதி பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சர், பத்து நிமிடங்கள் தாமதமாக நிகழ்வுக்கு வருகை தந்துள்ளார்.

இதன்போது பிரதம விருந்தினர் உரையை ஆற்றிய டக்ளஸ், தனது வருகைக்காக காத்திருந்த மாணவர்களுக்கு நன்றி தெரிவித்ததுடன், தாமதித்து வருகை தந்தமைக்கு மன்னிப்பும் கோரியுள்ளார்.


மேலும், நான் எப்போதும் நேர முகாமைத்துவத்தைச் சரியாகப் பேண வேண்டும் என்பதில் அக்கறையுள்ளவன்.

ஆகவே மாணவர்கள் எந்தச் செயற்பாடுகளிலும் நேர முகாமைத்து– வத்தை உரிய முறையில் பேண வேண்டும் என்பதே எனது விருப்பம் எனக்காகக் காத்திருந்த மாணவர்களுக்கு குளிர்பானம் வழங்குவதற்குப் பணித்துள்ளேன் என்றும் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தந்தை செல்வாவுக்கு இன்று அறங்காவல்குழு அஞ்சலி





தந்தை செல்வாவின் 125 ஆவது பிறந்த தின நிகழ்வு தந்தை செல்வா அறங்காவலர் குழுவின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் இன்று காலை 9.30 மணியளவில் இடம்பெற்றது.

யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கிற்கு அருகிலுள்ள தந்தை செல்வா நினைவு சதுக்கத்தில் நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தந்தை செல்வாவின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

இந்நிகழ்வில் தென்னிந்திய திருச் சபையின் முன்னாள் ஆயர் ஜெபநேசன், யாழ். மாந கர முன்னாள் முதல்வர் இ.ஆனோல்ட், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் கலந்துகொண்டு நினைவு தூபிக்கு மலர் துவி அஞ்சலி செலுத்தினர்.







தந்தை செல்வாவின் 125 ஆவது பிறந்த தினத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் இன்று அஞ்சலி செலுத்தினர்.

யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கிற்கு அருகாமையிலுள்ள தந்தை செல்வா நினைவு சதுக்கத்தில் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தந்தை செல்வாவின் நினைவு தூபிக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.

# தந்தை செல்வா நினைவிடத்தில் தமிழ் அரசுக் கட்சியும் அஞ்சலி





தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் 125 ஆவது ஜயந்தி தினமான இன்று வெள்ளிக்கிழமை காலை யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது நினைவுத்தூபியில் தமிழரசுப் பிரமுகர்கள் அஞ்சலி செலுத்தினர். கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவரும் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவருமான சி.வி.கே.சிவஞானம் நினைவிடத்தில் உள்ள தந்தையின் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கின்றமையையும், ஏனைய தமிழரசு உறுப்பினர்களுடன் சமாதியில் மலரஞ்சலி செலுத்தினர்.

# தந்தை செல்வா நினைவுதினம் மட்டக்களப்பிலும் அனுஷ்டிப்பு















(பழுவூரான்)

தந்தை செல்வாவின் 125 ஆவது பிறந்த தின நிகழ்வு இன்று காலை மட்டக்களப்பில் தந்தை செல்வா சதுக்கத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அதிதிகளால் தந்தை செல்வாவின் திருவுருவச்சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு, ஈகைச்சுடர் ஏற்றப்பட்டதனைத்தொடர்ந்து மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது. இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட வாலிபர் முன்னனியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேந்திரன் மற்றும் ஞா.சிறிநேசன், இலங்கை தமிழரசு கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளர் கி.துரைராஜசிங்கம், முன்னாள் மாநகர சபை முதல்வர் தியாகராஜா சரவணபவன், உள்ளூராட்சி சபை தவிசாளர்கள், இலங்கை தமிழரசு கட்சியின் மகளிர் அணி உறுப்பினர்கள், வாலிபர் முன்னனி தலைவர் தீபாகரன் மற்றும் உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்பாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.03.2023 இல் வெளியிடப்பெற்றது.